கல்கி

KALKI 29.1.95 ரூ. 3.00

சம உரிமை..!



சர்வோ® ஜீவனை அதிகரிக்கும்.

டிரக் டிரைவர்கள்



கூறுகிறார்கள்.



சர்வோ : வேறூரச் வரும் எஞ்ஜின் ஆயில். அளிப்பது இந்தியன் ஆயில்.

சர்வோ . ஆயிரக்கணக்கான இந்திய டிரக் டிரைவர்கள் சர்வோ லூப்ரிகன்டைப் பற்றி உத்திரவாதமளிக்கிறார்கள். ஏனென்றால் **சர்வோ** மிகக்கடுமையான பாதைகளிலும், எல்லாவிதமான சீதோஷ்ண நிலையிலும், வருடம் முழுவதும் பணத்துக்கேற்ற செயல்திறன் அளிக்கிறது.

வேறு என்ன வேண்டும் மிக அதிக அளவில் உயர்ந்த திறனுள்ள 400க்கும் மேற்பட்ட லூப்ரிகன்ட்களும் கிரீஸும் **சர்வோ** வழங்குகிறது. **சர்வோ** - ஃபரிதாபாத்திலுள்ள ஆசியாவின் மிக முன்னேற்றமடைந்த ஆர் & டி சென்டரிலுள்ள நமது இந்திய விஞ்ஞானிகளால் குறைவறச் செய்யப்பட்டது.



சர்வோ®: இந்தியாவில் மிக அதிக அளவில் விற்பனையாகும் எஞ்ஜின் ஆயில்.

IOC-283/94 TAM B

கட்சியை வளர்க்கப்

பாத யாத்திரை!



சத்தியமூர்த்தி பவனில் கதர்ச் சட்டை ஆட்கள், கையில் மாலை, சால்வைகளுடன் முதல் மாடிக்குத் தலைதெறிக்க விரைகின்றனர். அங்கே மாறாத புன்னகையுடன் குமரி அனந்தன்.

தமிழ்நாடு காங்கிரஸின் தலைவரான ஜோரில் படுபிஸியாக இருந்தாலும் நம்மோடு பேச உடனே ஒப்புக் கொண்டார்.

"த.நா. காங்கிரஸுக்கு உடனே உட்கட்சித் தேர்தல் நடத்தினால் கோஷ்டிப்பூசல் குறையுங்கிறதை ஒப்புக் கொள்றீங்களா?"

"தேர்தல் மூலம் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் கட்சிக்கு நல்லதுதான். தேர்தல் நடத்தும் பொறுப்பை, மேலிடம் எனக்குத் தந்தா உடனே செயல்படுவேன்!"

"உங்களை மூப்பனார் கோஷ்டிங்கறாங்களே?"

"நானும் அவரும் பெருந்தலைவர் காமராஜின்கீழ் ஒன்னா பணியாற்றினோம். அவர் (மூப்பனார்) தலைவரா இருந்தபோது, நான் துணைத் தலைவராகவும், அவர் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராயிருந்தபோது நான் துணைத் தலைவராகவும் இருந்தேன். ஒரு காலகட்டத்தில் நான் 'தனியா' (காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் என்கிற தனிக்கட்சி) இயங்கினபோது கூட, எங்கள் நட்பிலே விரிசல் இல்லை."

"உங்க நியமனம் பற்றி திண்டிவனம் ராமமூர்த்தி கருத்துச் சொல்ல மறுக்கிறாரே?"

"அப்படியா? த.நா. காங்கிரஸை வளர்க்க எனக்கு எல்லாரோட ஒத்துழைப்பும் வேணும். எந்த பேதமும் இல்லாம எல்லாரையும் சந்திச்சு ஆதரவு கேட்டுக்கிட்டு வர்றேன். திண்டிவனம் ராமமூர்த்தியையும் சந்திச்சேன். அவர் ஒத்துழைப்புத் தருவார்னு நிச்சயம் நம்பறேன்."

"நீங்க வாழப்பாடிக்குத் தந்த அதே ஒத்துழைப்பைத்தான் தங்களிடமிருந்து எதிர்பார்க்கலாம்னு வாழப்பாடி கோஷ்டி சொல்லியிருக்காங்களே?"

"வாழப்பாடியார் அழைப்பு விடுத்த மறைமலை நகர் போராட்டத்திலும், அ.தி.மு.க. அரசை எதிர்த்து நடத்திய போராட்டத்திலும் நான் கலந்துக்கிட்டேனே! கட்சித் தலைவரை வரவேற்கும் விஷயத்துல கருத்து முரண்பட்டதுக்கு நான் பொறுப்பில்லை. ஒரு தொண்டன் என்கிற முறையில தலைவர் வந்தபோது வரவேற்கும் பொறுப்பு எனக்கு உண்டு இல்லையா? எது எப்படியோ, கட்சியை பலப்படுத்தற விஷயத்துல எங்களுக்குள்ள எந்த முரண்பாடான கருத்தும் கிடையாது. அதேபோலத்தான் எங்களுக்கெதிரான ஆளுங்கட்சியின் போக்கை எதிர்க்கிறதிலும் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. வாழப்பாடியாரைச் சந்தித்து, இரு கரம் கூப்பி அவர் ஆதரவை நிச்சயம் கேட்பேன்."

"தமிழகத்தில் காங்கிரஸை பலப்படுத்த ஏதும் புது ஐடியா...?"

"20,000 இளைஞர்களைத் திரட்டி பாதயாத்திரை நடத்த ஒரு திட்டம் வெச்சிருக்கேன். செயல்படுத்தக் கொஞ்சம் டயம் வேணும்!"

— ப்ரியன்

"எந்த பேதமும் இல்லாம, எல்லாரையும் சந்திச்சு ஆதரவு கேட்டுக்கிட்டு வர்றேன்."

திரைப்படங்களிலும் பட்டிமன்ற, பத்திரிகை இன்னபிற சாதனங்களிலும் அவ்வப்போது பேசப்படுகிற 'சம உரிமை' சமாசாரம் உண்மையிலேயே நடைமுறையில் இருக்கிறதா என்று சில பிரபலங்களிடம் கேட்டோம்.

''We have still a long way to go'' என்று ஆரம்பித்தார் வழக்கறிஞர் கீதா ராமசேஷன்.

"மேல் நாடுகளை விட இங்கே சட்டப்படி பெண்களுக்கு நிறைய சலுகைகள், உரிமைகள் உண்டு. ஆனால் குடும்ப நலமாகட்டும், சொத்துரிமை, திருமணமாகட்டும் மரபுகள் எல்லாம் ஆண்களை முன்நிறுத்தியே உருவாக்கப்பட்டுள்ளன. தொழில்ரீதியில் ஆணுக்குப் பெண் சமநிலைக்கு வந்து விட்டாலும் சம்பள ரீதியில் பெண் ஒரு படி கீழேதான் இருக்கிறாள். கட்டடத் தொழிலில் பாருங்கள். அதைவிட வேறு உதாரணம் தேவையா?'' என்கிறார் கீதா.

வேண்டும்? பெண் உரிமை தேக்கநிலையில் இருப்பதற்கு பெண்களும் காரணம்தான்!''

ஆண்-பெண் பேதமோ, யாரும் யாருக்கும் உரிமை தரவோ - பெறவோ அவசியமில்லாத, வெகுவாக முன்னேறி விட்ட விளம்பர உலகின் பிரதிநிதியான ஒளிப்பதிவாளர் ராஜீவ் மேனன், "எங்கள் துறையில் ஏற்றத் தாழ்

பெண்ணுக்கு 'உரிமை' என்பது 'கொடுக்கப்பட வேண்டிய' விஷயமல்ல; இயல்பாக அவர்களே செயல்படுத்த வேண்டியது என்பது இயக்குநர் பி. வாசுவின் வாதம். "இன்று ஒரு பெண்ணின் ஆட்சியில்தானே நாம் இருக்கிறோம்?'' என்று ஆரம்பித்தவர், "உரிமைகளை எடுத்துக் கொள்ள, செயல்படுத்த பெண்கள் இங்கே இன்னும் தயங்குகிறார்கள். ஒரு ஷூட்டிங் நடத்த அனுமதி வேண்டி போலீஸ் ஸ்டேஷன் சென்றிருந்தேன். பல குற்றங்களுக்காகக் கைதான ஒருவனை இன்ஸ்பெக்டர் 'கவனித்துக்' கொண்டிருந்தார். அப்போது அவனுக்கு உணவு கொண்டு வந்த அவன் மனைவி, தன் கணவன் நிரபராதி என்றும் அவனை விட்டு விடும்படியும் கெஞ்சியதைப் பார்த்தேன். அவன் குற்றவாளிதான் என்பதை அவளும் அறிவாள். ஆயினும் ஏதோ ஒரு உந்துதல் - insecurity அவளை அப்படி கெஞ்சச் செய்தது. ஏன், அந்தப் பெண்ணே துணிந்து தன் புருஷனைக் கடிந்து திருத்த முயற்சி செய்யக் கூடாதா? எதற்காக தவறு செய்தவனுக்காக வக்காலத்து வாங்க



பெண்கள் சம உரிமை பேச்சோடு



• பொன்மணி வைரமுத்து



• W. R. வரதராஜன்

வுக்கு இடமே இல்லை" என்கிறார்.

"தரமான விளம்பரப் படத் தயாரிப்புக்கு ரீட்டா சௌத்ரி, கருத்துக்களுக்குக் கற்பனை உருவம் தருவதில் விற்பன்னரான நோமிதா சேட்டர்ஜி, திட்டமிடுதலில் புலியான ரோடா மெஹ்தா... இப்படி விளம்பர உலகில் கொடிகட்டிப் பறப்பவர்கள் இன்று பெண்கள்தான். இதர துறைகளிலும் பெண்களில் பல சாதனையாளர்கள் உண்டு. பெண் உரிமை உண்டா, இல்லையா என்று கேட்கிற காலமெல்லாம் மலையேறி, நாம் எவ்வளவோ முன்னேறி விட்டோம்!" என்கிறார் ராஜீவ்.



மாறாக, "சம உரிமை என்று எதைச் சொல்கிறீர்கள்? பெண்களின் இயல்பான மென்மை, நளினத்தையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு ஆண்களைப் போல் நடப்பதுதான் சம உரிமையா?" என்று எதிர்க் கேள்வி போடுகிறார் கந்தரி கிருஷ்ணமூர்த்தி. ஸ்டெல்லா மேரி கல்லூரியின் சமூகவியல் துறைப் பேராசிரியர்.

"படிப்பறிவில்லாத கிராமவாசிகளுக்குக் கூட உரிமை தெரிந்திருக்கிறது இன்று. ஊட்டி மலைப்பகுதியில் வாழும் ஒரு பழங்குடி இனத்தில் ஒரு பழக்கம் உண்டு. அவர்களின் தலைவரது மனைவி இறந்து விட்டால் தலைமைதாங்கும் தகுதி அங்கே ஆண்களுக்குக் கிடையாது. பக்கத்தில் ஒரு பெண் இருந்தால்தான் ஆணுக்குத் தலைமைதாங்கும் தகுதியே வருவதாகச் சொல்கிறார்கள் அங்கே. பெண்ணுக்கு இதைவிட என்ன கௌரவம்? ஆக, சம உரிமை இருக்கிறதா, அதைப் பயன்படுத்துகிறோமா என்பதைப் பெண்கள்தான் தமக்குத் தாமே கேட்டுக் கொள்ள வேண்டும்!"


• கீதா ராமசேஷன்

"படித்த பெண்கள் கூட 'உரிமை' விஷயத்தில் சறுக்கி விடுகிறார்கள்" என்கிறார் பத்திரிகையாளர் மாலன்.

"எனக்குத் தெரிந்த ஒரு பெண் முதுகலைப் பட்டதாரி. கைநிறைய சம்பாதிப்பவர். ஆயினும் அடித்துத் துன்புறுத்தும் கணவனை விலக்கி, வெளியேறத் துணிவில்லாதிருப்பவர். காரணம் கேட்டால், தன் பத்து வயது மகனைக் கைகாட்டுகிறார். 'இவனை வளர்த்து ஆளாக்க வேண்டாமா?' என்கிறார். விவாகரத்துக்குப் பின் சமூகம் தன்னைப் பார்க்கும்விதம் எண்ணி பயப்படுகிறார். சமஉரிமைக்காகத் தியாகம் செய்ய ஒரு தலைமுறை தயாரானால்தானே


• மாலன்

• பி. வாசு




சரிதானா?

அடுத்த தலைமுறையிலாவது அது வேர் விடும்? எது வேண்டும், வேண்டாம் என்று தீர்மானிக்கும் உரிமை பெண்களுக்கு இருக்கிறது. அவர்கள் அதைச் செயல்படுத்துகிறார்களா என்பதுதான் கேள்வி" என்கிறார் மாலன்.

மாலன் எடுத்துக்காட்டிய உதாரணத்துக்கு நேர்மாறானது பொன்மணி வைரமுத்து கூறிய சம்பவம். ஒத்து வராத கணவனை விவாகரத்து செய்து விட்டு, அது குறித்து குற்ற உணர்ச்சி

• ராஜீவ்மேனன்




• கந்தரி கிருஷ்ணமூர்த்தி

அமெரிக்காவில் எப்படி?



நம் நாட்டில் ஆண் ஆதிக்கம், பெண்ணின் சம உரிமைப் போராட்டம் எல்லாம் இருக்கட்டும். எவ்வளவோ முன்னேறியுள்ள மேல்நாடுகளில் எப்படி?

அமெரிக்க சமூக ஆய்வாளர் ஆர்லி என்ற பெண்மணி, "ஸெகண்ட் ஷிஃப்ட்" என்று ஒரு நூல் எழுதியுள்ளார். அதன் சாரம் : அமெரிக்கப் பெண், தன் கணவனை விடவும் வாரத்துக்குப் பதினைந்து மணி நேரம் அதிகமாக வேலை செய்கிறாள்.

குழந்தைகள் இருக்கின்றனவோ இல்லையோ பெண்களின் நிலை இதுதான். ஆண்களை விடவும் அதிகமாக வீட்டு வேலைகளைச் செய்பவர்கள் பெண்களே.

தொழிலகமோ, அலுவலகமோ ஆணை விடவும் பெண்ணுக்குக் குறைந்த சம்பளம். வேலைக்குப் போகும் கணவன், தனது வேலைக்குப் போகும் மனைவியை விடவும் அதிக நேரம் டீவி பார்த்து, அதிகமாகத் தூங்குகிறான்.

இருபது சதவீதம் ஆண்களே மனைவியுடன் வீட்டுப் பணிகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிடுவதும் தந்தை அல்ல; தாய்தான்.

'இப்படி மனைவி அதிக வேலை செய்வதால் கணவனுக்கும் நஷ்டம்' என்ற முடிவுக்கு ஆர்லி வருகிறார். எப்படி? அதிக உழைப்பு காரணமாக மனைவியின் உடல் சோர்வுடன் மனச் சோர்வும் அதிகரிக்க, ஆரோக்கியம் கெடுகிறது. இதனால் இல்லற இன்பத்தில் கணவன் மனைவி இருவருக்குமே ஆர்வம் குறைகிறது. எல்லாமாகச் சேர்ந்து விவாகரத்தில் போய் முடிகிறது!

ஏதுமின்றி நிம்மதியாக வாழும் தன் ரசிகை ஒருத்தி பற்றிச் சொன்ன அவர், "குடும்பத்துக்காகத் தன்னை அழித்துக் கொள்ளும் தியாக சிகாமணிகளாகவும் வேண்டாம்; சகட்டுமேனிக்கு அடிப்படைப் பண்புகளை உடைத்தெறியும் சண்டிராணிகளாகவும் வேண்டாம் - நியாயமான உரிமைகளை மனோபலத்துடன் எடுத்துக் கொள்பவளாகப் பெண் இருக்க வேண்டும்'' என்கிறார்.

"உரிமையாவது ஒன்றாவது? நம் முன்னாள் பிரதமர் வீட்டு மருமகளான மேனகா காந்தியே அங்கு பிரச்னை வந்த போது, குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே தானே வர வேண்டியிருந்தது? வீட்டுக்குள் இருந்து அவரால் தன் உரிமையை நிலைநாட்ட முடிந்ததா?" என்று கேட்கிறார் W. R. வரதராஜன்.

"அலுவலகங்களிலே கூட, எதிர்த்துக் கேள்வி கேட்க மாட்டார்கள், பொறுமையாக, நுணுக்கமாக வேலை செய்வார்கள் என்ற எதிர்மறையான காரணங்களுக்காகத் தானே பெண்களை பணிக்கமர்த்துகிறார்கள்? உரிமை எங்கே இருக்கிறது இங்கே?'' என்கிறார் இவர்.

யோசிக்கலாம்.

— நிர்மலா சக்கரவர்த்தி

அட்டை நடிப்பு : **சேதுராமன், திருமதி மதுமதி**

அட்டை வண்ணப்படங்கள் : **கேமரா திருஞானம்**

நன்றி : **கவிதாலயா**

அடுத்த இதழில்....

●● **"'டுயட்' தூக்கி விட்டது...!"**

- சாக்ஸஃபோன் கலைஞர் கதிரி கோபால்நாத்துடன் ஒரு சந்திப்பு

●● **கம்ப்யூட்டர் கச்சிதமாய் நடக்கும் திருமணங்கள்!**

- கல்யாண காண்ட்ராக்டர்களின் சாகசம்

"மற்றொரு நடிகைக்குக் கிடைத்த திரை வாய்ப்பு - கடந்த பத்து ஆண்டுகளுக்குள். அதைப் பார்த்து விட்டு உங்களுக்குள் ஒரு ஏக்கம் பொங்கியிருக்க வேண்டும் - 'அந்த ரோல் நமக்குக் கிடைத்திருந்தால்...' என்று. அப்படி ஒரு பாத்திரத்தைக் குறிப்பிடுங்கள் பார்க்கலாம்" என்ற கேள்வியுடன் சில நடிகைகளை நோக்கிப் படையெடுத்தோம்.



• சுஹாசினி



• வைஷ்ணவி

தன்னவர் இயக்கிய 'மௌன ராகம்' பட நாயகி வேடத்தை டக்கென்று குறிப்பிட்டார் திருமதி சுஹாசினி மணிரத்னம்.

"அஃப் கோர்ஸ். கிட்டத்தட்ட அதே மாதிரி ரோலை 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்திலே நான் செய்திருக்கேன்" என்று சமாதானப்படுத்திக் கொண்டார். அதாவது காதலனை மறக்க முடியாமல், உத்தமக் கணவனிடமிருந்து விலகும் வேடம்.

"அதே மாதிரி 'நாயகன்' படத்தில்..." என்று தொடங்கினார்.

"சரண்யா ஏற்ற ரோலா?"

"இல்லே. கமலின் மகள் ரோல். அந்தப் பாத்திரம்



• சென்பகம்



• பானுப்ரியா

அடடா, அந்த 'ரோல்' கிடைத்திருந்தால்...!

எனக்கு ரொம்பப் பிடித்தது. அப்பாவாகவே இருந்தாலும் அவரது குறை நிறைகளை அலசிப் பார்க்கும் ரோல். அதே மாதிரி 'கேளடி கண்மணி'யில் ராதிகா செய்த ரோல். அழகாகச் செதுக்கப்பட்ட பாத்திரம் அது."



• கஸ்தூரி

• ரோஜா



• ரஞ்சிதா

தமது ரசிகர்களின் மனதை ஓடிய வைக்கிற மாதிரி, 'கவர்ச்சிக் கதாநாயகி வேஷம் அலுத்து விட்டது' என்று ரோஜா சொல்லவில்லை. என்றாலும் அதையே வேறு விதமாகச் சொன்னார் :

"சென்டிமெண்ட்டான கதாநாயகி வேடங்களில் நடிக்க எனக்குக் கொள்ளை ஆசை. 'சின்ன தம்பி'யிலே குஷ்பூ ஏற்ற பாத்திரம் எனக்கு ரொம்ப இஷ்டம். நல்லா வெரைடி காண்பிக்கக் கூடிய ரோல். அதே மாதிரி 'தாலாட்டு கேக்குதம்மா'விலே கனகா செய்த ரோல். 'இது மாதிரி வாய்ப்பு நமக்குக் கிடைச்சா எவ்வளவு நல்லாயிருக்கும்'னு நினைக்க வச்சவை இந்தப் படங்கள்."



"தாமினி படத்தில் மீனாட்சி சேஷாத்திரி நடித்த ரோல்" என்றார் பானுப்ரியா டக்கென்று. பின் அந்த ரோல் அவ்வளவு பிடித்துப் போனதற்கான காரணங்களை அடுக்கினார். "அதில் க்ளாமரும் உண்டு;



வாழப்பாடிக்கு ஒரு வாழ்த்துப் பா!

- சிங்குக்கு சப்போர்ட்டா
சிங்கக் குரல் தந்தவரே!
சின்னத்தனம் பாருங்க
சீந்துவாரில்லீங்க!

- உண்ணாவிரத அம்மாவுக்கு
உடுக்கை கூட அடிச்சீங்க!
ஊழல்கள் அத்தனையையும்
ஊர் பேச வெச்சீங்க!

- கொடி பிறக்க விவகாரம்
கொசு அளவு தானுங்க!
குத்தம் சொல்லக் காத்திருந்து
குத்திக் கிளறிப் போட்டாங்க!

- ஆனது ஆவட்டுங்க
ஆட்சியா போயிடுச்சி?
அறிக்கை இருக்குதில்ல...
அசத்திவிட மாட்டீங்க!

- அண்ணன் சேஷன் போல்
சுயசரிதை எழுதுங்க!
அதிரடியா இருக்குங்க!
அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!

— குரோம்பேட்டை கவிராயர்

குடும்பத்தனமும் உண்டு. உண்மைக்காகப் போராடும் குணம், சோகம், பிடிவாதம் - இப்படிப் பலவிதத் தன்மைகளுக்கு ஸ்கோப் உள்ள மாதிரி கதையமைப்பு. சொல்லப் போனால் அந்தப் படத்தை வாங்கித் தமிழில் நானே மீனாட்சியின் ரோலை நடிக்கணும்; அது என்னுடைய நூறாவது படமாகவும் இருக்கணும்னு ஆசைப்பட்டேன். முடியல்லே" என்றார் ஏமாற்றப் பெருமூச்சுடன்.

(அந்த வாய்ப்பு 'ப்ரியங்கா' ரேவதிக்குக் கிடைத்தது தெரிந்திருக்கலாம்).

சிந்தித்துப் பார்த்த செண்பகம் 'சிந்து' என்றார்.

"சிந்து பைரவியிலே சுஹாசினிக்கு என்ன மாதிரி அற்புதமான கேரக்டர் கிடைச்சிருக்கு! படம் முழுக்க அவங்கதான். அப்படி ஒரு வாய்ப்புக் கிடைச்சா எங்கியோ போயிடலாம்னு என்னை நினைக்க வச்ச ரோல் அது" என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்.

"நீங்க ஒண்ணும் தமிழ்ப் படத்தைத்தான் சொல்லணும்னு கண்டிஷன் போடல்லே" என்றார் மடக்கி விட்ட பாவனையுடன் ரஞ்சிதா.

'ஹாலிவுட் பக்கமாகப் போய் விடுவாரோ' என்று பயந்த போது நல்லவேளை அண்டை மாநிலத்துக்குத்தான் தாவினார்.

"மணிசித்ரதாழுவில் ஷோபனா செய்த வேடம். அது ஒருவித சைகிக் கேரக்டர். ரொம்ப அற்புதமாக நடித்திருந்தார். சவாலான பாத்திரம். நமக்கும் இது மாதிரி ஒரு கேரக்டர் அமைஞ்சா... என்று ஏங்க வைத்த படம்."

"அப்பா! அவளுக்குதான் தன் கணவன் மேல் எவ்வளவு பிரியம்" என்றார் வைஷ்ணவி.

"யாருக்கு?"

"ஆனாலும் அவளுக்கு பொஸஸிவ் தனமும் ஜாஸ்தி. சொல்லப் போனா ஒரு பெண்ணுக்குரிய எல்லா குணங்களும் அவளிடம் நிறைஞ்சிருந்தது."

சஸ்பென்ஸில் நாம் தவிக்க, வைஷ்ணவி வர்ணித்துக் கொண்டே போனார்.

"முரண்பாடுகளின் மொத்த வடிவம்னு கூட அந்த கேரக்டரைச் சொல்லலாம். ஆனால் சுவையான பாத்திரம். என்ன, புரியல்லியா? சிந்துபைரவியிலே சுலக்ஷணா ஏற்ற பாத்திரம். அந்த அற்புதமான ரோல் நமக்குக் கிடைக்கல்லியேன்னு ஏக்கப்பட்டது உண்மைதான்" என்றார் வைஷ்ணவி.

கஸ்தூரியிடம் கேள்வியை வைத்ததும் அவர் ரோஜா படத்தில் மதுபாலா செய்த ரோலைக் குறிப்பிட்டதில் வியப்பில்லை. அப்புறம் பேசும் படத்தில் அமலா ஏற்ற பாத்திரத்தை சிலாகித்ததிலும் ஆச்சர்யமில்லை. வசனமே இல்லாமல் நடிப்பது என்றால் சவால் இல்லையா? அப்புறம், " 'கபீ ஹா கபீனா' படத்தின் நாயகன் ரோல்" என்றார்!

நாம்தான் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லையோ என்று குழப்பத்துடன் பார்க்க, கஸ்தூரி அழுத்தமாகக் குறிப்பிட்டார். "ஆமாம் சார்! ஷாருக்கான் நடித்த பாத்திரம்தான்!"

- ஜி.எஸ்.எஸ்.

Kalki Shopping Page

ADYAR

STUDENTS XEROX

Quality that is close to perfection

XEROX
LASER PRINTING
WORD PROCESSING
DTP
ELECTRONIC &
MANUAL TYPING
BINDING &
LAMINATION

நீடித்த நோயிலிருந்து விடுதலை பெறுங்கள்!

எல்லா நாட்பட்ட நோய்களையும் குணமாக்க மூலிகை மருந்துகள் - குழந்தை இல்லாமை (Infertility) பெண்கள் மாதவிடாய் கோளாறுகள், புண், கட்டி, வெள்ளைப்பாடு, ஆண் உயிரணு குறை, சிறுநீரில் (Kidney & Bladder) கற்கள், கழுத்து, தோள், மூட்டு வலி வீக்கம், ஆஸ்துமா, Appendicitis, Colitis தோல் நோய்களுக்கு மருந்துகள்.
நேரில் ஆலோசனை பெற நேரம் :
10 a.m. - 1. p.m. & 5 p.m. - 8 p.m.
ஞாயிறு விடுமுறை

நவோதயா சித்தர் மருத்துவம்

No. 21/2, அலமேலுமங்காபுரம்
III தெரு, மயிலைகுளம்,
சென்னை - 4. போன்:4940662
(சாயிபாபா கோயில் பின்புறம்)

AALAYA/3/12/94

More Returns **90** நாள் **24% P.A.**

டெபாஸிட் திட்டம்

மார்ச் - 31 வரை ; பரிசுகளுடன். மூன்று மாத வட்டி முன் கூட்டியே அளிக்கப்படுகிறது. அசலுக்குரிய 'செக்'கும் உடனே பெற்றுக் கொள்ளலாம். விரும்பினால் 90 நாட்களுக்குப் பிறகு மீண்டும் 'ரினிவல்' செய்து கொள்ளலாம்.

36 மாதங்களில் உங்கள் டெபாஸிட் 2 மடங்கு ஆகிறது.

எங்கள் சிட்டு குரூப்பில் சேருகிறவர்களுக்கு கடன் வசதி உண்டு.
நகர சொத்துக்களின் பேரில் 'லோன்' கிடைக்கும்.

நடராஜ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்,
நடராஜ் சிட்ஸ் (தமிழ்நாடு) பி.லிமிடெட்,
நடராஜ் எஸ்டேட்ஸ்—ஃபார்ம்ஹவுஸ்ப்ரமோட்டர்ஸ்,
"சாந்தி காம்ப்ளெக்ஸ்", 3 - வது மாடி, 26 ரெங்கநாதன் தெரு,
தி.நகர், சென்னை - 600 017. Phone : 434 2098, 484 0150
கிளை: 1-, காமராஜர் ரோடு, காஞ்சிபுரம் - 631 501.

வர்த்தமானன் பதிப்பகம் வழங்கும்

முன் வெளியீட்டுத் திட்டம்

வியாசரின் மகாபாரதம்

இனிய எளிய தமிழ் உரைநடையில் (2ஆம் பதிப்பு) மூன்று தொகுதிகள் விலை ரூ. 300.00

ஸ்ரீமத் பாகவதம்

இனிய எளிய தமிழ் உரைநடையில் இரு தொகுதிகள் விலை ரூ. 150.00

		450.00
கழிவு 30%		135.00
கழிவு போக சலுகை விலை	ரூ.	315.00

பிப்ரவரி மாதம் 5ஆம் தேதிக்குள் 315 மட்டும் M.O. (அ) D.D. மூலம் அனுப்புக. நூல்களை மார்ச் மாத இறுதியில் அனுப்புகிறோம். தபால் செலவினைத் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெறுக.

வியாசரின் மகா பாரதம்

வேதங்களில் சொல்லப்படும் கருத்துக்கள் அனைத்தும் இதில் இடம் பெறுவதால், வியாச பாரதத்தை ஐந்தாம் வேதம் என்பர். கதையை வழங்கிய வியாசரே நூலின் இடையிடையே தோன்றி விளக்கம் தரும் சிறப்புடையது வியாச பாரதம்! நூற்றுக்கணக்கான மாந்தர்கள் உலா வரும் ஸ்வர்ண மாளிகை, வியாச பாரதம்! ஏராளமான கிளைக் கதைகளையுடைய ஓர் ஆல விருட்சம் வியாச பாரதம்!

நள தமயந்தி வரலாறு, சத்தியவான் சாவித்திரி வரலாறு, இராமன் வரலாறு, துஷ்யந்தன்–சகுந்தலை வரலாறு போன்றவை புகழ் வாய்ந்தவை. அரிச்சந்திரன், குசேலன், கந்த பெருமான், பரசுராமர் போன்றோர் வரலாறும் இதில் இடம் பெற்றுள்ளன.

இவை தவிர, மனித வாழ்க்கையை நெறிப்படுத்த எழுந்தது, இந்நூல்! அறவழியில் நடக்க மனிதனைச் சிந்திக்க வைக்கிறது. இன்பமும் துன்பமும் மூடரைத்தான் பற்றும்! அறிவாளிகளை அவை நெருங்கா. எக்காரணத்தைக் கொண்டும் கடவுளைக் கைவிடக் கூடாது; பயன்களைப் பாராது கடமையைச் செய்ய வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை உலகுக்குப் பறை சாற்றுகிறது பாரதம்! இந்நூலைப் படிப்பவர் நெஞ்சில் ஓர் அமைதி ஏற்படும். மற்றவரை ஏமாற்றக்கூடாது என்ற எண்ணம் மேலோங்கும். தன்னை ஏமாற்றாமல் இருக்க விழிப்புடன் செயல்படத் தூண்டும். உலோபம், பொறாமை, கோபம் போன்ற தீக்குணங்கள் நீங்கும். தியானம், அமைதி, அன்பு போன்ற நற்குணங்கள் துலங்கும்.

ஊழி பெயரினும் தான் பெயரா உயர்வுடைய இந்நூலில் 18 பருவங்கள் உள்ளன.

1. ஆதிபருவம் (ஆரம்ப நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி); 2. சபா பருவம் (சபை நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி); 3. வன பருவம் (காட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி); 4. விராட பருவம் (விராட நாட்டு நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி); 5. உத்தியோக பருவம் (கண்ணனுக்கு உயர்ந்த இடம் வழங்கிய பகுதி); 6. பீஷ்ம பருவம்; 7. துரோண பருவம்; 8. கர்ண பருவம்; 9. சல்லிய பருவம்; 10. சௌப்திர பருவம் (முடிவு நிலைப் பருவம்); 11. ஸ்திரீ பருவம் (பெண்களுக்குரியது); 12. சாந்தி பருவம் (அமைதி ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி); 13. அநுசாசன பருவம் (உபதேசப் பகுதி); 14. அஸ்வமேதிக பருவம் (குதிரை யாகப் பகுதி); 15. ஆசிரமவாசிக பருவம் (துறவு வாழ்க்கைப் பகுதி); 16. மௌசல பருவம் (உலக்கையால் மாண்டதைக் கூறும் பகுதி); 17. மகா பிரஸ்தானிக பருவம் (மேலுலகம் எய்தும் பகுதி); 18. சொர்க்கா ரோகண பருவம் (சொர்க்கத்தில் ஏற்றம் உற்ற பகுதி).

ஸ்ரீமத் பாகவதம்

1. பாகவதம் பிறந்த கதை

1. பரம்பொருள் வணக்கம்; 2. வேத வியாசர்; 3. சில பாரத நிகழ்ச்சிகள்; 4. பரீட்சித்தின் வரலாறு; 5. சுக முனிவர்.

2. நாராயணனே பரம்பொருள்

1. பகவானின் தோற்றப் பொலிவு; 2. தத்துவங்களின் உற்பத்தி.

3. வராக அவதாரம்

1. விதுரருக்கு உபதேசம் செய்!; 2. பிரமாவின் சிருஷ்டி; 3. வராக யக்ஞ மூர்த்தி; 4. துவார பாலகர்கள் பெற்ற சாபம்; 5. கபிலர் தோன்றினார்.

4. நர நாராயணர்கள்

1. பகவானின் சில அவதாரங்கள்; 2. தட்ச யாகம்; 3. துருவன் நட்சத்திரமானான்; 4. கொடுங்கோலன் மாண்டான்; 5. பிருதுவின் நல்லாட்சி; 6. பிரசேதஸர்கள்.

5. பரதச் சக்கரவர்த்தி

1. பிரிய விரதன் வம்சம்; 2. பரதரின் பல பிறவிகள்.

6. தேவர், அசுரர் போர்

1. நாராயண நாமத்தின் பெருமை; 2. வம்ச விருத்தி; 3. இந்திரன் பெற்ற சாபங்கள்; 4. சித்ரகேது; 5. நாற்பத்தொன்பது மருத்துக்கள்.

7. பிரகலாதர் சரித்திரம்

1. இரண்யாட்சகனின் முடிவு; 2. இரணியன் பெற்ற வரம்; 3. நாராயணனே என் குரு; 4. மனம் மாறா மைந்தன்; 5. நரசிம்ம அவதாரம்; 6. மூன்று கோட்டைகள்.

8. வாமன திரிவிக்கிரம அவதாரங்கள்

1. கஜேந்திர மோட்சம்; 2. பாற்கடலைக் கடைந்தனர்; 3. அசுரரை மயக்கிய அணங்கு; 4. மூன்றடி மண் கேட்டார்; 5. வேதங்களை மீட்ட வித்தகர்.

9. இராமர் பட்டாபிஷேகம்

1. ஆண் பெண் மாறாட்டம்; 2. அசுவனி தேவர்கள்; 3. அம்பாரீஷன் வரலாறு; 4. மீனால் மனம் மாறிய மகரிஷி; 5. அப்படியே நில்; 6. பகீரதன் தவம்; 7. இராமாவதாரம்; 8. புரூரவச் சக்கரவர்த்தி; 9. பரசுராமர்; 10. யயாதி மன்னன்; 11. பரதன் பிறந்தான்.

10. கிருஷ்ணாவதாரம் (மூன்று பகுதிகள்)

(அ) பிள்ளை விளையாட்டு (முதல் பகுதி)

1. ஒருத்தி மகனாய்ப் பிறந்து வேறொருத்தி மகனாய் வளர்ந்தார்; 2. அடுக்கடுக்காய் வந்த அரக்கர்கள்; 3. தளிர் நடையும், தளராத விளையாட்டும்; 4. மீண்டும் அரக்கர் தொல்லை; 5. அன்பர்களுக்கு அருள் செய்த அற்புதம்; 6. ஆயர்தம் கொழுந்து; 7. பட்டம் ஏற்ற பரந்தாமன்; 8. கிருஷ்ணா லீலா விநோதங்கள்.

(ஆ) கம்ச வதம் (இரண்டாம் பகுதி)

1. சில அரக்கர் மாண்டனர்; 2. நாரதர் கூறிய இரகசியம்; 3. கம்சனின் பயங்கரத் திட்டங்கள்; 4. அக்ரூரர் அடைந்த ஆனந்தக் களிப்பு; 5. மதுரையில் நிகழ்த்திய மாயங்கள்; 6. மாமனைக் கொன்ற மாமாயன்; 7. கிருஷ்ணன் தன் பிறப்பின் இரகசியம் உணர்த்தினார்; 8. குரு மைந்தனைக் கொணர்ந்த கோபாலன்; 9. கோபியர்களின் உயர்ந்த பக்தி; 10. துவாரகையை நிர்மாணித்தல்; 11. முகுந்தன் கண்ட காட்சி; 12. ருக்மிணியின் தூது; 13. ரதி மன்மதன் திருமண வைபவம்; 14. சத்திய பாமையை மணந்தார்; 15. மணி செய்த விந்தைகள்; 16. நரகாசுரனைக் கொன்றார்; 17. பலராமன் ருக்மியைக் கொன்றது; 18. பாணாசுரன் உயிர் தப்பினான்; 19. பௌண்டரீகன் தரித்த வேடம்;

(இ) பூபாரம் தீர்த்தல் (மூன்றாம் பகுதி)

1. பதினாறாயிரம் மனைவியர்; 2. ஜராசந்தன் மாண்டான்; 3. சால்வ யுத்தம்; 4. பல்வலனைக் கொன்ற பலராமன்; 5. குசேலர் வரலாறு; 6. தாயின் விருப்பம் தீர்த்த தயாபரன்; 7. அன்பருக்கு உதவிய ஆபத் சகாயன்.

11. வைகுண்டம் சேர்தல்

1. கிருஷ்ணன் உபதேசம்; 2. அவதூதர் சொன்னவை; 3. பகவான் புறப்பட்டார்.

12. கல்கி அவதாரம்


1. இனி நடக்க இருப்பவை; 2. பரீட்சித்தின் யாகம்; 3. பக்த மார்க்கண்டேயர்; 4. யாகம் இனிது முடிந்தது.

வேதங்களைக் கற்பக மரத்திற்கு ஒப்பிட்டால், அதில் பழுக்கும் பழத்திற்கு இந்தப் பாகவதத்தை ஒப்பிடலாம். இதனை வைகுண்டத்தில் இருந்து நாரதர் அறிந்து கொண்டார்; அவரிடம் இருந்து வியாசர் அறிந்தார்; வியாசரிடமிருந்து சுக முனிவர் அறிந்தார்; சுக முனிவர் மூலம் இது உலக மக்களிடையே பரவியது. புண்ணியவான்களாகிய நீங்களும் இந்த ருசியுள்ள இனிய பழத்தை நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் புசியுங்கள்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

VARTHAMANAN PATHIPPAGAM
A.R.R. COMPLEX,
141, USMAN ROAD,
T. NAGAR, MADRAS – 17.
(Near Panagal Park)

ADVT.


ரஷ்ய அதிபர் யெல்ட்ஸின்
உன்னுடன் யார் பேச்சு வார்த்தை நடத்துவார்கள்..? நீயே உன் மக்களை அழிச்சிட்டிருக்கே...!
புரட்சித் தலைவர் துதயேவ்
செசென் மக்கள்
J.J.TV
என்னை விட்டு ஓடிப்போக முடியுமா...? நீ முடியுமா...?
தமிழக மக்கள்
பந்து எண்ணி-க்கை அதிகமாகி-ட்டே போகுது... இருந்தாலும் சமாளிக்கிறாரே
சுப்பிரமணிய சுவாமி



கல்கி

1995
ஜனவரி 29
பவ
தை 15
மலர் : 53
இதழ் : 26



குல்லா போடும் அரசு!

சென்னை விமான நிலையத்தில் ஃபாரூக் மரைக்காயரிடம் தொப்பி கேட்டு வாங்கி அணிந்து கொண்ட சேஷன், "குல்லா போடுவது" பற்றி ஜோக் அடித்திருக்கிறார். சேஷனுக்கு யாரும் குல்லா போட முடியாது என்பது தெரிந்த விஷயம். வாக்காளருக்கு அடையாள அட்டை என்று மத்திய, மாநில அரசுகளை அவர் விரட்டியதும் மிரட்டியதும் இதை உறுதி செய்கின்றன.

ஆயினும் உச்சநீதிமன்றம், "அடையாள அட்டை தயாராகவில்லை என்ற காரணத்துக்காகத் தேர்தல்களை ஒத்திப் போடக் கூடாது" என்று இடைக்காலத் தடை வழங்கியதும் வரவேற்கத்தக்கதே. 'அடையாள அட்டை தேவையில்லை என்று உச்சநீதி மன்றம் கூறவில்லை' என்பதை மாண்பமை நீதிபதிகளே உறுதிசெய்திருந்தாலும், இந்த இடைக்காலத் தடையின் உடனடி விளைவு, அடையாள அட்டை வழங்குவதில் பல்வேறு அரசுகளும் மெத்தனம் காட்டுவதில்தான் முடியும்.

ஃபோட்டோவுடன் கூடிய அடையாள அட்டை வழங்குவது, வோட்டுப் போடுவதற்கு மட்டுமின்றி, அது குடியுரிமையை உறுதிப் படுத்துவதால், ரேஷன் கார்டு முதல் இலவசங்கள் வரை பலவற்றையும் பெற மக்களுக்கு உதவக்கூடும். ஆனால் அதே நேரத்தில் அடையாள அட்டை வழங்குவதில் அபரிமித செலவு தவிர, வேறு பல சிக்கல்களும் இருப்பது உண்மைதான். கிராமப்புறங்களில் ஃபோட்டோ எடுத்துக் கொண்டால் ஆயுசு குறையும் என்ற மூடநம்பிக்கை இன்றைக்கும் இருக்கிறது. இந்துப் பெண்களே ஃபோட்டோ எடுத்துக் கொள்ள வெட்கப்பட்டு முன்வர மாட்டார்கள் எனில், முஸ்லிம் பர்தா பெண்கள் பற்றி சொல்லவே வேண்டாம். இப்படி பல சிக்கல்களுக்கும் விடிவு காலம் என்று?

அதை சேஷனே, பெங்களூரில் நிகழ்த்திய ராஜாஜி நினைவுச் சொற்பொழிவில் தெளிவாக்கியுள்ளார். "இந்த நாடு புனர்வாழ்வு பெற வேண்டுமானால் கல்வி ஒன்றுதான் அதைச் சாதிக்க முடியும். அல்லாது போனால் குற்றவாளிக் கூண்டிலே நிற்க வேண்டியவர்கள் எல்லாம்தான் சட்டமன்றங்களை நிறைத்து நம்மை ஆளவும் செய்வார்கள். நான் என்னதான் கண்டிப்புக் காட்டினாலும் கடைசியில் வோட்டுப் போட வேண்டியது மக்களே. அவர்கள் நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து புரிந்து கொள்ளும் ஆற்றலைக் கல்வி மூலம்தான் பெற முடியும். ஆனால் இன்று கல்வி இந்நாட்டில் வீழ்ச்சி அடைந்திருப்பது போல் வேறு எதுவுமே அடையவில்லை!"

இதையேதான் ராஜாஜி 1921-லேயே சிறைவாசத்தின் போது தமது ஜெயில் டயரியில் எழுதினார். "சுதந்திரம் வந்து விட்டால் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடும் என்று எண்ண வேண்டாம்" என்று ஆரம்பித்து, எத்தகைய அவல நிலையை நாம் சந்திக்க நேரும் என்பதை தீர்க்கதரிசனத்துடன் பட்டியலிட்டு, கடைசியில், "அனைவருக்கும் கல்வி என்ற ஒரு கொள்கையில்தான் நாம் நம்பிக்கை கொள்ள முடியும்" என்பதைக் குறிப்பிட்டு, அது எத்தகைய கல்வியாக இருக்க வேண்டுமென்பதையும் வர்ணித்தார்.

ஆனால் நடந்திருப்பது என்ன? 48 ஆண்டு சுதந்திரத்துக்குப் பிறகு நாட்டில் இன்னும் 33 கோடி பேருக்கு எழுத்தறிவே இல்லை! அ, ஆ கூடத் தெரியாது! இந்நிலையில் மாறுதல் இல்லாதவரை பொருளாதார முன்னேற்ற வேகமும் தடைப்படும். ஜப்பானும் அமெரிக்காவும் இங்கே புதிய தொழில்களைப் போட்டி போட்டுத் தொடங்கினாலும் அந்த நவீனத் தொழிலகங்களில் படித்தவர்களுக்கே வேலை வாய்ப்பு இருக்கும், மிகப் பெரும்பாலான மக்கள் கல்வி அறிவு பெறாத போது அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவே செய்யாது.

கல்வி விஷயத்தில் அரசின் மெத்தனத்தைப் பார்க்க 'இது ஒரு சதித் திட்டம்' என்ற சேஷனின் கருத்தையே நாமும் ஆமோதிக்க வேண்டியிருக்கிறது. மக்களுக்குக் குல்லா போடுகிறது அரசு!

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.




தேவிகலா A/C
12-45, 3-45, 6-45, 9-45 p.m.
அன்னை அபிராமி A/C
3 காட்சிகள்
A.V.M. ராஜேஸ்வரி A/C
12, 3, 6.30,10 p.m.
அகஸ்தியா 70 mm
3 காட்சிகள்
பால அபிராமி A/c
பகல் காட்சி.
கமல்ஹாசன்
வழங்கும்
ராஜ்கமலின்...
சதிலீலாவதி
பாலுமகேந்திரா
இளையராஜா
U/A
அனந்து கிரேசிமோகன்
கவிஞர்வாலி விக்ரம்தர்மா Elegant



எறும்பார் ரிப்போர்ட் :

தூர்தர்ஷன் ஜரிக்கும் சரக்கு லிஸ்ட்!





ஆன்டென்னா முளைத்த தலையுடன் மிஸ்டர் எறும்பார் உற்சாகமாக மேஜைமேல் ஏறினார்.

"புரூஃபை இப்போதைக்கு டிராயரில் போட்டு மூடு! விஷயம் ரொம்ப முக்கியம்" என்றார்.

ஆணையை நிறைவேற்றி, "சொல்லுங்க!"

"நேரா டீவி ஸ்டேஷன்லேர்ந்து வரேன்."

"அதான் ஹோட்டல் சரக்கு லிஸ்ட் மாதிரி பெரிய பட்டியலே வந்திருக்கே, என்னென்ன சீரியல் வரப்போகுதுன்னு. அதைத் தானே சொல்றீங்க?"

"சரக்கு லிஸ்ட்ல விட்டுப் போனவங்க ரொம்ப கொதிப்புல இருக்காங்க."

"அதில அதிசயமென்ன? ஆயிரத்தி எண்ணூத்தி சொச்சம்பேர் சீரியல் சான்ஸ் கேட்க, முந்நூற்று சொச்சம்பேர் செலக்டட். பாக்கி பேருக்கு எரிச்சலாத்தானே இருக்கும்?"

"செலக்ட் பண்ணட்டும்; எல்லாத்தையும் சினிமாக்காரங்களுக்கே தூக்கிக் கொடுக்கணுமா? ஓர் எழுத்தாளர் 'தகுதியிருந்தும் எனக்கு வாய்ப்புத் தரலை'ன்னு உண்ணாவிரதமே இருந்தது மறந்து போச்சா?"

"சன்லயும் ராஜ்லயும் சினிமா பரேட் நடத்தற மாதிரி, தூர்தர்ஷன்லயும் ஸ்டாருங்களை உலாவவிட்டு ஆடியன்ஸ் புடிக்கிறாங்க. டி.டி.யும் பிழைக்க வேண்டாமா?"

"எங்க பிழைக்கிறது? போன வருஷம் செலக்ட் ஆனதுலேயே அறுபது இரண்டு வாரத் தொடர்கள் இன்னும் ஒளிபரப்பு ஆகாம கையிலே இருக்குதாம்! அதெல்லாம் முடிஞ்சு இப்ப புதுசா அப்ரூவ் ஆகியிருக்கிறதையெல்லாம் போடணும்னா நம்ம பேரப் புள்ளைங்க காலம் ஆகிடும்!"

"அப்படியா சொல்றீங்க? இப்பவே சில பேர்கிட்ட ஒரு வாரக் கதையை சாம்பிள் படப்பிடிப்பு எடுத்துத் தரச் சொல்லியிருக்காங்களாமே?"

"அதுலயும் சில பேருக்கு விதிவிலக்கு உண்டாம்! பெரிய செட் போட்டு எடுக்கிற பெரிய ஸ்டாருங்க சாம்பிள் எடுத்துக்கிட்டிருக்க முடியாதாம்!"

"ஆமாமாம்; கமல் கூட பொன்னியின் செல்வனுக்கு பிரும்மாண்ட பிளான் போடறாராமே!"

"கமல்னு சொன்னாலே ஸ்வீட்டா ஏதாவது கடிக்கணும்போல இருக்கு... இங்க என்னடான்னா எப்பப் பார்த்தாலும் இட்டிலி, சட்னி, காப்பிதான்." எறும்பார் கடுப்பானார்.

"சட்டுன்னு ஒரு ஜாங்கிரி வாங்கிட்டு வாப்பா" என்று பையனிடம் ஒரு நோட்டை உருவிக் கொடுக்கவும், எறும்பார் மறுபடி உற்சாகமாகி, "பொ. செ.க்கு ரொம்ப டயம் எடுக்கணும்னு முதல்ல ஸ்ரீரங்கத்து தேவதைகளைத்தான் கேஸட்டிலே அடக்கப் போகிறாராம் கமல்" என்றார்.

"யாரு டைரக்ஷன்?"

"'கலைஞன்' டைரக்டர் ஜி.பி. விஜய்தான் சுஜாதாவோட தேவதைகளை டைரக்ட் பண்ணப் போறாரு. பொன்னியின் செல்வனைக் கமலே டைரக்ட் பண்ணுவாருங்க."

"ஆக, நட்சத்திர எழுத்தாளர் கதைங்

களை எடுக்கும் ஸ்டார் வேல்யூ உள்ளவங்களாப் பார்த்து செலக்ட் பண்ணி..."

"அப்படி ஒண்ணும் இல்லே... எல்லா ஸ்டார் வால்யூ ஆசாமிகளுக்கும் கிடைக்கலே! கிட்ட வா சொல்றேன்" என்றார் எறும்பார்.

எடிட்டர் வந்து தூங்குவதாக நினைத்தாலும் பாதகமில்லை என்று மேஜை மேல் தலை சாய்க்கவும் எறும்பார் கிசுகிசுத்தார் : "பாலுமகேந்திரா அப்ளை பண்ணியிருந்தாராம். 'இதுவரைக்கும் கிடைக்கலை'ன்னு ரொம்ப வருத்தப்பட்டார். அப்புறம் பி.சி. ஸ்ரீராம் கூட அப்துல் ரகுமானோட கவிதைகளை டீ.வி. சீரியலா பண்ண அனுமதி கேட்டிருந்தாராம். டீல்ல வுட்டுட்டாங்க."

தலையை நிமிர்த்தாமலே, "ஆனால் இன்னொரு கவிஞருக்கு வாய்ப்புக் கிடைச்சிருக்கே. கலைஞரோட தென்பாண்டி சிங்கத்தை கவிஞர் இளையபாரதி டைரக்ட் பண்ணுறாராமே?" என்று சொல்லவும் எறும்பார் காதை ஒரு கடிகடித்தார்! "சிண்டு முடியறதே வேலை!" என்றார்.

சட்டென்று நிமிர்ந்து காதைத் தடவியபடி "ஐயோ" எனவும், "ஓ! உன் காதா? ஜாங்கிரியாக்கும்னு நினைச்சுட்டேன்" என்று கிண்டலடித்தார். பிறகு, "வலியை மறக்கப் புதிய நியூஸ் தரேன்" என்றார்.

காதுமடல் சிவக்கச் சிவக்க விரல்களால் அழுந்தத் தேய்த்துக் கொண்டே, "அதான் காதைத் திட்டிக்கிட்டே இருக்கேனே" எனவும், எறும்பார் சரக்கை எடுத்து மறுபடி கடை விரிக்க ஆரம்பித்தார்:

"உ.வே. சாமிநாத அய்யர் வாழ்க்கையைப் படமெடுக்க NFDC கிட்ட மல்லுகட்டி நின்னு தோற்றாரே, ஏ. ஜெகந்நாதன், நினைவிருக்கா? அந்த சப்ஜெக்டுக்கு தூர்தர்ஷன் பச்சைக் கொடி காட்டியிருக்கு!"

"பரவாயில்லியே! பெரிய புரட்சிதான். ஆனா, ஒழுங்கா ஒர்க்-அவுட் ஆகணுமே?"

"அந்தக் கவலை ஜெகந்நாதனுக்கு இருக்காதா? உனக்கு ஏன் வியர்க்குது? பிரச்னை அது இல்லை..."

"பின்னே?"

"கி.ஆ.பெ. கதைக்கும் இதேபோல பர்மிஷன் கிடைக்கலைன்னு ஒருத்தர் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கார். இப்படி அனுமதி கிடைக்காதவங்க ஒவ்வொருத்தரா கோர்ட்டுக்குப் போயிட்டிருந்தால் அடுத்த நூற்றாண்டில கூட இதையெல்லாம் டீ.வி.யில பார்க்க முடியுமான்னு சந்தேகமாயிருக்கே!"

"அதுபற்றித் துப்பறியும் சாம்புவைத்தான் கேட்கணும்!"

"ஆ! ஒய்.ஜி. மகேந்திராவைப் போட்டு எஸ். கிருஷ்ணசாமி எடுக்கப் போற விவரம் தெரியுமா உனக்கு?"

"தெரியும்! பின்டல் என்ற இந்தி நடிகர் சாம்புவாய் நடிக்க, பத்து வாரம் துப்பறியும் சாம்பு இந்தியில் காலை ஒளிபரப்பாக ஏற்கெனவே வந்ததும் தெரியும்."

"கிருஷ்ணசாமி ஹிந்தியில் எடுத்த சிலப்பதிகாரமும் - மணிமேகலையும்தான் இன்னும் சின்னத் திரைக்கு வராமலே இருக்கு. அதுபற்றி ம.பொ.சி. கூட ரொம்ப எமோஷனலா ஓர் அறிக்கை விட்டிருந்தாரே..." என்று சொல்லி வரும்போதே எறும்பாரும் ஆண்டென்னா துடிக்க, ரொம்ப உணர்ச்சிமயமானார்.

"என்ன விஷயம்? உங்க ஸ்கிரிப்ட் எதுவும் அப்ரூவ் ஆகலையா?"

"ஹூம்! எனக்கு எதுக்கு டீ.வி. மோகம்? ஆபீஸ் வாசல்ல பையன் ஜாங்கிரியோட வந்துக்கிட்டிருக்கான். அதான் ஆன்டென்னா ஆட்டோமாடிக்கா துடிக்குதே... சரி, நீ உன் வேலையைப் பாரு; நான் என் காரியத்தைக் கவனிக்கிறேன்" என்று சுறுசுறுப்பானார் எறும்பார்.

தகவல்கள் : **மௌஷ்மி**

கிராமச் சுவை!

வைத்தியலிங்க நாட்டார் என்பவர் எடையூர் சங்கந்தி கிராமத்தில் ஒரு பெரிய மிராசு. ஊர்ப் பிரச்னைகளில் அவர் பஞ்சாயத்துச் செய்தால் அப்பீலே கிடையாது. ஒரு சமயம் கன்னமிட்ட ஒரு திருடனைத் தாமே துரத்திச் சென்று பிடித்துப் போலீஸில் ஒப்படைத்த பெருமைக்குரியவர். அதனால் ஊரில் ஏக மரியாதை. ஒரு சமயம் இடுப்பில் கட்டி என்று வைத்தியம் செய்து கொள்ளப் பட்டணத்திலிருந்த தம் பிள்ளை வீட்டுக்குச் சென்றார். சென்ற நான்காம் நாளே திரும்பி வந்துவிட்டார். "என்னங்க நாட்டாரே, இத்தனை சுருக்காய் வந்துட்டீங்க. மகன் சரியாக் கவனிக்கலையா?" என்று ஊரார் கேட்டபோது சொன்னார் : "அட போங்கப்பா! ஆஸ்பத்திரியில இருக்கிற நர்ஸம்மா ஓர் உழக்கு அளவுகூட இருக்க மாட்டா... மூச்சுக்கு முந்நூறு தரம், 'வைத்தியலிங்கம் மாத்திரை முழுங்கினியா? வைத்தியலிங்கம் மருந்து குடிச்சியா?'ன்னு பேர் சொல்லி சொல்லிக் கூப்பிடறா. மரியாதை தெரியாத பட்டணம்பா. அதான், மரியாதையான நாட்டு வைத்தியர்கிட்டேயே காட்டிக்கலாம்னு புறப்பட்டு வந்துட்டேன்!"

திருச்சி - 20, ஜி. விசுவநாதன்



வாழவைக்கும் விஷம்!

விஷம் ஒரு மருந்தாகவும் பயன்படும் என்பது விஞ்ஞானம் ஏற்றுக் கொண்ட விஷயம். நல்ல பாம்பின் விஷம் சரியான அளவில் செலுத்தப்பட்டால் கடும் வலிகள் கூட நீங்கும். மலேஷிய வைப்பர் பாம்பின் விஷம் ஹார்ட் அட்டாக்கின்போது உதவுகிறது.

சமீபத்தில் ஆர்த்ரைட்டிஸ் எனப்படும் மூட்டுவலிகளின் சிகிச்சைக்கு தேனீ விஷம் பயன்படும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அமெரிக்கா, மேரிலாண்ட் மாநிலத்தில் பாட்வாக்னர் என்ற பெண்மணி இந்த வைத்தியம் செய்கிறார் - காக வாங்குவதில்லை.

பாட்வாக்னர் மல்டிபிள்- ஸ்கிளீரோஸிஸ் என்ற நோயினால் பாதிக்கப் பட்டிருந்தார். இந்நோய் கண்டவர்களின் நரம்புகள், முதுகுத் தண்டு அல்லது மூளைப் பகுதிகளின் சில இடங்களில் தடித்துக் காணப்பட்டுப் போய்ச் செயலிழக்கின்றன. இதனால் அப்பகுதிகள் தொடர்பான உடலின் சில இயக்கங்கள் பாதிக்கப்படுகின்றன. பாட்வாக்னர், தேனீ கொட்டுதல் சிகிச்சையால் தன்நோய் நீங்கி குணமடைந்ததாகச் சொல்கிறார். தான் பெற்ற பயனை பிறரும் அடையச் செய்கிறார்.

தேனீயை இடுக்கியால் பற்றி நோயாளியின் முதுகில் வைத்து கொட்டச் செய்கிறார். இவ்வாறு திட்டமிட்ட இடைவெளிகளில் வைத்தியம் நடக்கிறது. நோயாளிகள் தாங்கள் முன்னேறியிருப்பதாகச் சொல்கிறார்கள்.



இது எப்படி ஆரம்பித்தது? நோயாளிகளான சிலர் தேனீ வளர்ப்பவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தேனீக்களால் யதேச்சையாகக் கொட்டப்பட்ட போது தங்கள் நோய்க்கு அதுவே சிகிச்சையாக அமைவதையும் உணர்ந்திருக்கிறார்கள். விஷயம் பரவி, இப்போது விஞ்ஞானிகளின் தீவிர ஆராய்ச்சிக்கு உட்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் ஏர் வேஸ் (விமான சர்வீஸ்) நிறுவனத்தை அந்நாட்டு அரசு நடத்தி வந்த போது ஏகப்பட்ட நஷ்டம். தனியார் வசம் ஒப்படைக் கப்பட்டதும் ஐரோப்பாவின் மிக வெற்றிகரமான நிறுவனமாகி விட்டது. விஞ்ஞான பூர்வ அணுகுமுறைகள் புகுத்தப்பட்டன. விளைவு- மூன்றே ஆண்டுகளில் 580 மிலியன் பவுண்டு செலவினங்கள் குறைக்கப் பட்டன. பணியாற்றுவோரின் உற்பத்தித்திறன் 59 சதவீதம் உயர்ந்தது. லாபம் 301 மிலியன் பவுண்டு, சென்ற 93-94ம் ஆண்டில்!



ஆதாரம் : ஸ்பான்,
ஜெர்மன் நியூஸ்.

சென்ற வாரம்...

தனது முன்னாள் காதலி அருணா அழைத்ததன் பேரில், அவள் தங்கியிருந்த மோட்டல் ரூமுக்குச் செல்கிறான் பிருதிவி. அங்கே அவள் குற்றுயிராய்க் கிடப்பதைப் பார்த்து, பதற்றத்துடன் வீடு திரும்புகிறான். அவனது 'டை பின்' காணாததை மனைவி ரமா சுட்டிக் காட்ட, நடந்ததைக் கூறுகிறான். மனைவியின் யோசனைப்படி, டை பின்னை எடுப்பதற்காக அவன் மீண்டும் மோட்டல் அறைக்குச் சென்றபோது, போலீஸ் வந்து விடுகிறது...

2

பத்தாம் எண் அறையை விட்டு பிரிதிவியும் போலீஸ்காரரும் வெளிவந்தார்கள்.

பனிக் குளிர் ஈரமாக விழுந்தது. மரங்கள் பாதி மறைந்து கிடந்தன.

எட்டத்தில் மோட்டல் ஆபீஸ் மங்கிய வெளிச்சமாகத் தெரிந்தது.

'ஒரு சின்னத் தவறில் அகப்பட்டுக் கொண்டோமே' என்று நினைத்தான், அந்தக் கணத்தில் பூமி சரியக் கூடாதா! ஆகாயம் உடைந்து விழக் கூடாதா? மின்னல் அவன் மீது சொடுக்கிவிடக் கூடாதா!

தன்னை அழித்துக் கொள்ளும் உணர்வுகள் ஆர்ப்பரிப்பாக வந்தன.

வாழ்க்கையில் பெரிய அவமானம் ஏற்படப் போகிறது என்று நினைத்தான். அவனால் சரியாக அடி எடுத்து வைக்க முடியவில்லை.

ஆனால் அதைக் காட்டிக் கொள்ள விரும்பாதவனாக உடம்பை விறைத்துக் கொண்டு நடந்தான்.

—உங்க பெயர் என்ன ஸார்?

- பிருதிவி... கே. பிருதிவி.

- இந்த வட்டாரத்தில்தான் இருக்கீங்களா?

- இல்லை. திருவான்மியூர் பக்கம், தேவி நகரிலே!

-தேவி நகரா! நாகரிக காலனி ஆச்சே! நீங்க அங்கே எப்படி?... என்று இழுத்தார் இன்ஸ்பெக்டர் டி.ஆர். சாமி.

மடிப்புக் கலையாமல் யூனிபாரம்! அந்த நிசியில் வந்ததால் முகத்தில் சிறிது களைப்பு. எதிர் சோபாவில் நேர்க்கோடு போல முதுகை ஒட்டியிருந்தார். அவரது பார்வை அவனைத் துருவியது.


- நான் ஒரு கம்பெனி டைரக்டர்!

சொல்வதற்கு நா கூச்சப் பட்டது.

- எந்தக் கம்பெனி?

- ஸதர்ன் மெடிகல் அண்ட் ஸர்ஜிகல் எக்விப் மெண்டஸ்!

இன்ஸ்பெக்டர் - ஓ! என்றார். அதில் அவரது அதிகாரம் கொஞ்சம் குறைந்தது.



புஷ்பா தங்கதுரை

இன்ஸ்பெக்டர் அருகில் மோட்டல் மானேஜர் ஜனார்த்தனன் அமர்ந்திருந்தார். நாற்பது வயது இருக்கும். அவர்தான் பிருதி வியை வந்தது முதல் அதே சந்தேகம் உள்ள பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். பிருதிவிக்குப் பிடிக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் அவரை நோக்கி, –ஏன் ஜனார்த்தன்? இவரை முன்னாடி பார்த்திருக்கீங்களா? என்றார்.

–ஆமாம் ஸார்! இவர் தான் பத்தாம் நம்பர் காட்டேஜுக்கு நேத்து ராத்திரி வந்தார்!

–எத்தனை மணிக்கு?



–ஏழு மணி இருக்கும்.

–அவர் சொல்றது உண்மைதாங்களா?

இன்ஸ்பெக்டர் பிருத்வியைப் பார்த்துக் கேட்டார்.

பிருத்விக்கு யோசனை கவிழ்ந்தது. மறுக்கலாம்! மறுத்தால் அவனது டை 'பின்' அந்த அறைக்குள் இவர்களுக்குக் கிடைத்திருந்தால்... அது நிலைமையை மோசமாக்கி விடுமே!

–உண்மைதான்! நான்தான் இங்கே வந்தேன்.

–அப்புறம் என்ன செஞ்சீங்க, திரும்பிப் போயிட்டீங்களா?

–அவர்கிட்டேயே கேளுங்களேன்! என்றான் பிருத்வி அந்த மானேஜரைக் காட்டி!



–ஆமாம் ஸார்! இன்ஸ்பெக்டர்! ஆனா இவர் உடனே போயிடலை. பத்தாம் காட்டேஜ் பின்னாடி காரைப் பார்க் செய்தார்.

–ஓ! கார்லே வந்தாரா? என்றார் இன்ஸ்பெக்டர்.

–ஆமாம். மானேஜர்.

–யாரு ஓட்டினாங்க?

–இவரேதான்! டிரைவர் ஓட்டலை! காட்டேஜுக் குள்ளே போனாரு! கொஞ்ச நேரத்திலே உள்ளே ஒரு சண்டை வந்திருக்க வேணும். ஒரு பொண்ணு கூச்சல் போடற சத்தம் கேட்டிச்சு!

–ஆண் குரலும் உண்டா?

–அன்று அப்படி எதுவும் கேட்கலை! ஆனா பெண் குரல்தான் கத்தற மாதிரி கேட்டுச்சு! நான் எழுந்து என்ன வென்று பார்க்கலாம்ன்னு கிளம்பினேன்.

–என்ன பார்த்தீங்க?

–நான் காட்டேஜை நெருங்கும் போதே அந்தக் குரல் நின்னு போச்சு! இங்கே பல தடவை இதைப் போல நிகழுகிறதைப் பார்த்திருக்கிறேன்! ஹனிமூனுக்கு வந்தவங்க இப்படிச் சண்டை போட்டுப் போட்டுச் சமாதானம் ஆவாங்க! அதுபோல இதுன்னு பேசாம திரும்பிட்டேன்.

–அப்புறம் என்ன நடந்துச்சு?

–அப்பால ஒரு மணி சுமாருக்கு ஒரு கார் கிளம்பற சத்தம் கேட்டிச்சு!

–முழிச்சுட்டிருந்தீங்களா ஜனார்த்தன்?

–ஆமாம்! ஸார்! ராத்திரிதானே இங்கே முக்கிய பிஸினஸ்! உங்களுக்குத் தெரியாதா?

–அப்போ என்ன செஞ்சாங்க?

-சன்னல் பக்கம் பார்த்தேன். இந்த நபர் தான் ஓட்டிட்டுப் போயிருந்தாரு. உடனே காட்டேஜ் பக்கம் பார்வையைத் திருப்பினேன். காட்டேஜ் சன்னல் வாசல் எல்லாம் திறந்திடுச்சு! ஒரே வெளிச்சமா இருந்திச்சு!

-ஓ! நீங்க என்ன செஞ்சீங்க?

-என்னடாது லைட் எரியுதேன்னு எழுந்து போனேன். காட்டேஜ் பக்கம் போனேன். நிசப்தமா இருந்திச்சு! கதவு திறந்து கிடந்தது. உள்ளே போனேன். உள்ளே அருணாவைப் பார்த்தேன்! அவளுக்கு நினைவு இல்லை. உடம்பிலே காயங்க தெரிஞ்சுது! ரத்தம் வழிஞ்சுகட்டிருந்தது.

பிருதிவியின் கண்கள் மானேஜரைப் பார்த்தன.

-என்ன மிஸ்டர் பிருதிவி! நீங்கதான் அவளைக் காயப்படுத்தினீங்களா? என்றார் இன்ஸ்பெக்டர், அவனை நோக்கித் திரும்பி.

பிருதிவியின் கண்கள் மறுக்கத் துடித்தன.

-ஐயோ! நான் செய்யவே இல்லை! அவள் மேலே கையைக் கூட வைக்கலை!

-அருணாவுக்கு நினைவில்லை என்கிறதாவது தெரியுமா?

இன்ஸ்பெக்டர் கூர்மையாகக் கேட்டார்.

-தெரியும். நிச்சயமாகத் தெரியும். அதற்குக் காரணம் கண்டுபிடிச்சேன்! மின்சாரம் போயிருந்தது. வெளிச்சத்துக்காக ஒரு மண்ணெண்ணெய் விளக்கு வச்சிருந்தாங்க! நீண்ட குழாயுள்ள சிம்னி விளக்கு அது. திருதிருன்னு புகையைக் கக்கிக் கொண்டு எரிஞ்சது! அந்தப் புகையை ரொம்ப நேரம் சுவாசிச்சதிலே தன்னை அறியாம மயக்கம் அடைஞ்சிருக்காளோன்னு தோணிச்சு!

-அப்போ சன்னல் கதவு எல்லாம் திறந்திருக்கலையா?

-இல்லை! எல்லாம் மூடியிருந்திச்சு! குளிருக்காக அவள் மூடியிருந்திருக்கணும்! நான் உடனே போய் கதவு, சன்னல் எல்லாத்தையும் திறந்து வச்சேன்! நல்ல காத்து உள்ளே வரணும்னு....

-அப்புறம்தான் நீங்க நழுவியிருக்கீங்க இல்லையா?

-இன்ஸ்பெக்டர்! அதுமாதிரி சொல்லாதீங்க! நான் நழுவலை!

-பின்னே ஏன் போனீங்க?

-போலீஸ்லே சொல்லி அவளுக்கு முதல் சிகிச்சை ஏற்பாடு பண்ணத்தான்!

-ஏன் போலீசுக்கு?

-இங்கே ஆஸ்பத்திரி எதுவும் எனக்குத் தெரியாது.

மானேஜர் பொறுமையிழந்து கேட்டுக் கொண்டிருந்தார். இடையே புகுந்தார்.

-இருங்க, இன்ஸ்பெக்டர்! இங்கே ஒரு விஷயம் சொல்லணும்! காட்டேஜிலே இன்னொரு பெண்ணும் இருந்திருக்காங்க!

-யாரும் கிடையாது! என்று உரத்துக் கூறினான் பிருதிவி.

-நீங்க சும்மா இருங்க! என்று மானேஜர் அவனிடம் கூறினார்.

-நான் இன்ஸ்பெக்டர்கிட்டே பேசறேன்! இதைக் கேளுங்க இன்ஸ்பெக்டர்! இவர் அந்த காட்டேஜிற்கு வந்த கொஞ்ச நேரத்திலே ஒரு மாருதி வந்திச்சு! அது வெளியிலேயே நின்னுது! எனக்கு என்னவோ குறுகுறுன்னுது! கொஞ்சம் எழுந்து நின்று, இன்னொரு சன்னல் வழியாப் பார்த்தேன். ராத்திரியிலே இங்கே சின்ன சத்தம் கூடக் கேட்கும்! அந்தக் கார் கதவு திறக்கலைன்னு தெரிஞ்சுது!

-ஓ! திறந்தா சத்தம் கேட்டிருக்குமா? என்றார் இன்ஸ்பெக்டர்!

-ஆமாம்! சத்தம் கேட்காததனால் கதவு திறக்கலை. யாரோ எதற்கோ காத்திருக்கணுமின்னு நினைச்சேன். கொஞ்ச நாழியாச்சு! கதவு திறந்திச்சு! மெள்ள யாரோ நடந்து வந்தாங்க! நேரே பத்தாம் நம்பர் காட்டேஜ் பக்கம் போனாங்க. காட்டேஜ் சன்னல் வழியா உள்ளே பார்த்தாங்க! நாலைஞ்சு நிமிஷம் பார்த்தாங்க!

-யாருன்னு தெரியலையா?

-ஒரு பெண்ணுதான்! ஸாரி உடுத்தி இருந்தா!

-ஓ! அப்புறம்!

-திரும்பிப் போக ஆரம்பிச்சா! அப்போ காட்டேஜ் வாசலைத் தாண்டும்போது, வெளிச்சம் அவமேலே விழுந்திச்சு! நெட்டையா இருந்தா! வெள்ளை ஸாரி உடுத்தி இருந்தா!

மானேஜர் பேச்சை நிறுத்தியதும் ஒரு நிசப்தம்.

மணி டிக்டிக்காக வெட்டுவது கேட்டது.

இன்ஸ்பெக்டர் பிருதிவியை நோக்கித் திரும்பினார்.

-மிஸ்டர்! என்றார்.

திடுக்கிட்டுத் பார்த்தான் பிருதிவி.

மனசு ஏற்கெனவே குழம்பிக் கொண்டிருந்தது.

-எஸ் ஸார்! என்றான் தடுமாற்றத்துடன்.

-இந்தப் பெண்ணைப் பத்தி ஏதாவது தெரியுமா?

-ஸார்! மானேஜர் சொல்றதெல்லாம் பொய்! காட்டேஜிலே இன்னொரு பெண் இல்லவே இல்லை.

அப்படிச் சொன்னபோது, அவனை மீறியும் தடுமாற்றம் வந்து விட்டதை அவன் உணர்ந்தான்.

அந்தக் குளிர் நேரத்திலும் அவன் நடு முதுகில் ஒரு சொட்டு வியர்வை தோன்றி உருண்டு கொண்டிருந்தது.

நினைவுகள் பல திசைகளில் சிதறின.

அவன் மனைவி ரமா - அவள்தான் அன்று. வெள்ளை ஸாரி உடுத்தியிருந்தாள்! அவள்தான் சற்று உயரமானவள்! அவள் உபயோகத்திற்கு ஒரு கார் இருந்தது. அதுவும்

NAVASAKTHI
Benefit Fund Ltd.

No.192, ROYAPETTAH HIGH ROAD,
MYLAPORE, MADRAS - 600 004.
phone: 499 3809
REGD. NO. 18-26671

வெகுமதி முதலீட்டுத் திட்டம்

குறைந்த பட்ச முதலீடு .... ரூ. 10,000/-
காலம் .... 12 மாதங்கள்
வட்டி .... **21%** (மாத வட்டி முன்தேதியிட்ட காசோலையாக வழங்கப்படும்.)

மேற்படி முதலீட்டுத் திட்டத்தில் சேரும் உறுப்பினர்களுக்கு வெகுமதியாக 12 மாத காலத்திற்கு **'கல்கி'** பத்திரிக்கை அனுப்பி வைக்கப்படும்.

விழாக்கால முதலீட்டுத் திட்டம்

இந்த இனிய பண்டிகை நன்நாளில் உங்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பு. தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு விழாக்கால நாளில் (எல்லா பண்டிகைகளுக்கும்) ரூபாய்1000/- முதலீடுசெய்து, ஐந்தாவது ஆண்டு தொடங்கி உங்கள் ஆயுட்காலம் முழுவதும் பண்டிகை நாட்களில் ரூபாய்.1200/- பரிசாக பெறுங்கள்.

மற்ற சேமிப்பு திட்டங்கள்:

1. எங்களின் உடனடி வட்டி திட்டத்தில் முதலீடு செய்து வட்டியை முன்பணமாக பெறுவீர்.

(ஒரு வருடத்திற்கு) குறைந்த பட்ச வைப்பு நிதி .... ரூ.5000/-
காலம் .... ஒரு வருடம்.

2. முதியோர் வைப்பு நிதிக்கு அதிக பட்சமாக **23%** (ஒரு வருடத்திற்கு) பெறுவீர்.

3. எங்கள் மறுமுதலீட்டுத் திட்டத்தில் உங்கள் தொகை 41 மாதங்களில் இரட்டிப்பாகவும், 60 மாதங்களில் மும்மடங்காகவும் மாறுகிறது.

4. அசையா சொத்தின் பெயரிலும், தங்க நகைகளில் பெயரிலும், கடன் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

வேலை நேரம் : *காலை 9 மணி முதல் மாலை 5.30 வரை.*
ஞாயிற்றுக்கிழமை விடுமுறை.

உறுப்பினர்களுக்கு மட்டும்.



"நேத்து வாத்தியார் வீட்டுக்குப் பொண்ணு பார்க்கப் போய் தெரியாம மாட்டிக்கிட்டோம்!"

"என்னாச்சு?"

"பொண்ணைப் பிடிக்கலைன்னு சொன்னதும் அதற்கான காரணத்தைச் சுருக்கமா பத்து வரியில எழுதித் தரச் சொன்னாங்க!"

- கொங்கணாபுரம் வெ. செந்தில்

மாருதி கார்!

ஒருவேளை அவள் அவனைப் பின்பற்றி வந்திருப்பாளா? அவள் ஒரு மாதிரி குணம் உடையவள்! நல்லவளாகவும் இருப்பாள்! ஆனால் அதேசமயம், ஜட்ஜின் பெண் ஆயிற்றே!... தைரியமாகச் சில காரியங்களில் இறங்குவாள்.

சீ!...அவளை ஏன் குறை சொல்ல வேண்டும்?

நகரில் அவளைப் போல எத்தனையோ உயரமான பெண்கள் உண்டு.

அவர்களில் யாராவது எதேச்சையாக வெள்ளை ஸாரி உடுத்தியிருக்கலாம்!

மாருதி காரும் வைத்திருக்கலாம்.

அப்படி அவன் நினைக்கும்போதே, நினைவு ஊன்றி நிற்கமுடியாமல் சிறிது வழுக்கியது.

அந்த தேவி காலனியில் நான்கு விஸ்தார தெருக்களிலும் அவனைப் போல் கம்பெனி நிர்வாகிகள், பார்ட்னர்கள் என்று பலபேர் இருந்தார்கள்.

என்னதான் பங்களாக்கள் தள்ளித் தள்ளி இருந்தாலும், செய்திகள் எப்படியாவது கசிந்து வெளிவந்து விடுகின்றன.

காலனியில் உள்ள பல ஆண்கள் வீட்டுக்குத் தெரியாமல் சில ரகசிய கேளிக்கைகள் வைத்திருந்தார்கள்.

அவனுக்கே அது தெரிந்திராது.

ஆனால் மனைவி ரமா அதைப் பற்றி அவன் காதில் போடுவாள்.

–மிஸஸ் சீதா இதை எப்படிப் பொறுத்துக்கிறா! புருஷனை நேரிலே கண்டு பிடிச்சு கட்டுற வேணாம்... என்று படபடப்போடு கூறுவாள்.

அவள் சொல்வதை அவன் பொருட்படுத்தியதில்லை! இன்னொருத்தி கதையை கேட்கும் போதெல்லாம் அவளுக்கு ஒரு நியாயமான ஆத்திரம் தோன்றி இருக்கிறது.

அருணாவிடம் ஒருதலைக் காதல் வைத்திருந்தாலும், கம்பெனியை விட்டு அவள் போனபிறகு அவளை முற்றிலும் அவன் மறந்தாயிற்று! ரமாவைத் திருமணம் செய்த பிறகு, தன் பழைய காதலை அவளிடம் அதை நேரிடையாகக் கூறி அவன் 'அப்பழுக் கற்றவன்' என்பதைக் காட்டி விட்டான்.

இருந்தாலும் மனைவி ரமாவின் மனத்தில் ஏதாவது சந்தேகம் கொஞ்சமாகப் பாக்கி இருந்து...

அது இப்போது விஸ்வரூபம் எடுத்திருந்தால்....

உள்ளே உடம்பு முழுதும் அவனை அறியாமலே வியர்த்து வெள்ளமாவது தெரிந்தது. அடுத்த அறையில் டெலிபோன் மணி அடித்தது.

மானேஜர் எழுந்து உள்ளே போனார்.

அடுத்த விநாடி வெளியே வந்து, உங்களுக்கு கால்! என்று இன்ஸ்பெக்டரிடம் மானேஜர் கூறினார்.

இன்ஸ்பெக்டர் எழுந்து போனார்.

மானேஜர் அவனை ஒரு முறை பார்த்து விட்டு, அங்கே நிற்க முடியாமல் வெளிப் பக்கம் போனார்.

போலீஸார் இருவரும் கொட்டாவி விட்டார்கள்.

அவர்களுக்கு மட்டுமில்லை.

எல்லோருக்குமே அது உறக்கமில்லா இரவுதான்!

போலீசார் இருவரும் ஒருவருக்கொருவர் காதோரமாக ரகசியமாகப் பேசினார்கள்.

வீட்டுக்குப் போய் உறங்க வேண்டும் என்பதே அவர்கள் சலிப்பில் தெரிந்தது.

அறையில் இன்ஸ்பெக்டர் பேசுவது சரியாகக் கேட்கவில்லை.

சரி சரி ஆங்..ஆங்! என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்த உரையாடல் முடிந்து ரிஸீவரை வைப்பது தெரிந்தது.

அவரிடம் ஏதாவது மாறுதல் இருக்கிறதா என்று பிருதிவி கூர்ந்து கவனித்தான். இன்ஸ்பெக்டர் மேலும் கூழ்மமாகப் பார்த்தார்.

பிருதிவிக்கு உள்ளே குமுறிக் கொண்டிருந்தது.

அவசியமாக ஒரு சிக்கல் அவனைச் சுற்றி இறுக்கிக் கொண்டிருந்தது.

–இன்ஸ்பெக்டர்! என்றான் அவன்.

தலையை மட்டும் தூக்கினார்.

–ஒரே ஒரு கேள்வி! அது தெரிஞ்சா போதும்.

–கேளுங்க!

–அந்தப் பெண் அருணா, நிலைமை எப்படி? உயிரோடு இருக்கிறாளா!

–அதுதான் பேசினேன் என்று சொல்லி தலையைக் கோதினார்.

–ஆஸ்பத்திரியிலே சேர்த்திருக்காங்க! இன்னும் கோமாவிலேதான் இருக்காங்க! சப்–இன்ஸ்பெக்டர் போன் பண்ணிச் சொல்றாரு! சரி நீங்க வாங்க! என்று சொல்லி எழுந்தார்.

–எங்கே

–ஸ்டேஷனுக்கு. (தொடரும்)

வாழ்க்கை ஆரம்பமாகிறது 58ல்



... நீங்கள் இப்போது அதற்கு திட்டமிட்டால்!

அறிமுகப்படுத்துகிறோம் யூடிஐ-ன் ரிடையர்மெண்ட் பெனிஃபிட் பிளான். உங்கள் பணி ஓய்வை எதிர்நோக்க மற்றும் அதன் பல்வேறு மகிழ்ச்சியைப் பெற உதவும் முதலீடு அடிப்படையிலான முதல் பணி ஓய்வுத் திட்டம். நீங்கள் செலுத்தும் தொகை பிரிவு 88-ன் கீழ் வரிச்சலுகையைப் பெறும்.

யூடிஐ-ன் ரிடையர்மெண்ட் பெனிஃபிட் பிளானில் முதலீடு செய்யுங்கள்.
வேறெந்த முதலீடும் இதைவிடச் சிறந்தது அல்ல.

சிறப்பம்சங்கள்

- 18-52 வயது வரை உள்ள தனிநபர்கள் இதில் சேரலாம்.
- மொத்த குறைந்தபட்ச தொகையான ரூ. 10,000த்தை குறைந்தபட்ச தவணையான ரூ.500 (மற்றும் அதன் மடங்குகளில்) என்றவாறு 20 வருடாந்தர தவணைகளுக்கு மேற்படாமல் 52 வயது வரை செலுத்த வேண்டும். மொத்த தொகைக்கு உச்சவரம்பு கிடையாது. 52 வயது வரையிலும் ரூ. 10,000 பணம் செலுத்தத் தவறினால் 15% தள்ளுபடியில் மறு கொள்முதல் செய்ய வேண்டும்.
- முகப்பு மதிப்பு ரூ. 10 முதல் மாதத்தில் விற்பனை சம விலையில் மற்றும் அதற்குப்பின் என்ஏவி அடிப்படையிலான விற்பனை விலையில் (மூன்று தசம பாயிண்டுகள் வரையிலான யூனிட்களின் அல்லாட்மெண்ட்.)
- வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 88-ன் கீழ் செலுத்தப்படும் மொத்தத் தொகையான ரூ.60,000 த்திற்கு உட்பட்ட தொகைக்கு வரிச்சலுகை உண்டு.
- 58 வயதிலிருந்து மாதாந்தர வருவாய்.
- 70 வயதிற்குப் பிறகு என்ஏவி அடிப்படையிலான மறு கொள்முதல் விலையில் பணம் திரும்பப் பெறும் வசதி. முடிவுறும் காலத்திற்கு முன்பே பணம் திரும்பப் பெறவேண்டுமானால், மறு கொள்முதல் தொகையில் 10% தள்ளுபடி.

முதல் முதலீடு அடிப்படையிலான பணி ஓய்வுத் திட்டம்.


யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்களுடைய மேலான எதிர்காலத்திற்கு

RETIREMENT BENEFIT PLAN
பணி ஓய்வின் மகிழ்ச்சியைக் கண்டுணருங்கள்

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர். போன்: 214973 • சென்னை. போன்: 517101, 517190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 27060.

UTI- 159/94 C

சிறைச்சாலையா? 5ஸ்டார் ஹோட்டலா?



**படிக்கும் முன்
ஓர் எச்சரிக்கை :
நல்லவர்களையும்
குற்றவாளிகளாக்கக்கூடிய
கொடூரமான சூழ்நிலையுடைய நம்
நாட்டுச் சிறைகளை நினைத்து
நெஞ்சு கனத்துப் போகும்.**



• உடற்பயிற்சிக் கூடம்.

• பளபள தரை, பளிச் சுவர்கள்

"உங்கள் ஊர் ஜெயில் எப்படியிருக்கும்? உள்ளே போய்ப் பார்க்க முடியுமா?" என்று நாம் கேட்ட போது அந்த அமெரிக்க குடும்பம் ஏற இறங்கப் பார்க்கவில்லை... மாறாக ரொம்ப உற்சாகத்துடன் செயல்பட்டு, சட்டக் கல்லூரி பேராசிரியர் ஒருவரின் உதவியுடன் உள்ளூர் நீதிபதியின் அனுமதி பெற்று நியூ யார்க் மாநிலத்தின் மிகப் பெரிய சிறைச் சாலையை நாம் பார்ப்பதற்கு ஏற்பாடு செய் தார்கள்.

சிறைச்சாலையின் பெயர் என்ன தெரியுமா? Green Haven! அதாவது பசுமையின் இருப்பிடம்! இருபது மைல் சுற்றளவில் ஒரு பெரிய சோலை - அதற்குள் நிறுவப் பட்டிருக்கிறது சிறைச்சாலை - இது High Security Prison. ஏதோ பிக்னிக் ஸ்பாட்டுக் குள் நுழைவது மாதிரி இருக்கிறது!

சிறை அலுவலகத்துக்குப் போனால் முதலில் நம்மைச் சோதனை போடுகிறார்கள். பிறகு இன்டர்வியூ. பெயர், ஊர், பிறந்த தேதி, குண இயல்புகள் என்று ஜாதகத்தையே வாங்கிக் கொண்டு ஒரு போட்டோவும் எடுக்கச் செய்கிறார்கள். அதை ஒட்டி, ஒரு 'ஐ கார்ட்' தயாரித்து பத்தே நிமிடங்களில் கையில் கொடுத்து விடுகிறார்கள். பாக் கெட்டில் போட்டுக் கொள்வதற்குள் அச்சு அழிய ஆரம்பிக்க, நாம் கலவரமாக விளக்கம் கேட்டால்,



• சீரியஸாகப் படிக்கலாம்.

"கவலைப் படாதீங்க. இன்ஃப்ரா ரெட் கதிரொளியில் மட்டுமே படிக்கக் கூடிய ஜகார்டு இது" என்கிறார்கள். "இதற்கு ஆயுள் இரண்டு மணி நேரம்தான்: அதற்குள் சுற்றிப் பார்த்து விட்டு வெளியே போகலைன்னா இங்கேயே இருக்க வேண்டியதுதான்!" என்று ஜோக் வேறு!

கைதிகளுடன் பேசக் கூடாது என்ற எச்சரிக்கையை மீண்டும் வலியுறுத்தி, அலுவலகம் கடந்து உள்ளே அனுப்ப....

வராண்டாவின் சுத்தம் அசத்துகிறது. அழுக்கே இல்லாத சுவர், பளபளக்கும் தரை, அங்கங்கே பளிச்சிடும் நாற்காலி, இருக்கைகள். இது சிறையா இல்லை ஸ்டார் ஹோட்டலா?

போதும் போதாததற்கு, கைதிகள் யூனிஃபார்ம் இன்றி அவரவர் இஷ்டத்துக்கு ஜீன்ஸ், பர்முடாஸ் என்று உடுத்தியிருக்கிறார்கள். ஊடே வளையவரும் அதிகாரிகள், தோரணையில்லாமல் நட்புறவுடன் சிரிக்கிறார்கள். நிறைய பெண் அதிகாரிகள். யாரிடமும் கையில் தற்காப்பு ஆயுதம் கூடக் கிடையாது! 'சிறை நிர்வாகம்' என்ற தனித் துறையைச் சேர்ந்தவர்கள் இவர்கள். (போலீஸ் துறை அல்ல) சட்டம், மனோதத்துவம் எனப் பல்துறை பயிற்சிக்குப் பின் வருகிறார்கள்.

விஸ்தாரமான செல்களில் கைதிகள். எந்த செல் கதவுக்கும் பூட்டு கிடையாது. கட்டுப்பாட்டு அறையிலுள்ள கம்ப்யூட்டர் சிஸ்டம் கதவுகளை இயக்குகிறது.

மிக முக்கியமான விஷயம், சிறைச்சாலையை Prison என்று இவர்கள் அழைப்பதில்லை; 'Correctional facility' என்று பெயரிட்டிருக்கிறார்கள். - திருந்துவதற்கான வசதியளிக்கும் இடம்.

என்ன வசதிகள்.....?

அடிப்படை கல்வி பெற்றவர்கள், மேல் படிப்பைத் தொடர முடியும். மூன்று பல்கலைக் கழகங்கள் வகுப்பு நடத்துகின்றன. வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமின்றி, இசை, சினிமா, வீடியோ துறை கல்வி கூட இவர்கள் பெறலாம். தச்சு வேலை, கார் பழுது பார்த்தல் போன்ற தொழில் கல்வி டிப்ளோமா பெறவும் வசதி இருக்கிறது. (இதற்காக பெரிய வொர்க் ஷாப் நிறுவி காவல் துறையின் அனைத்து வாகனங்களையும் சர்வீஸ் செய்து, பழுது பார்க்கும் பொறுப்பை இந்த Green Haven ஏற்றிருக்கிறது.) எந்தவொரு கைதியும் தமது தண்டனைக் காலத்துக்குள் ஒரு தொழிலைக் கற்க வேண்டும். அல்லது படித்து டிப்ளோமா பட்டம் பெற்றாக வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது.

இரவு நேரத்தில் படிப்பதற்கு அனுமதி உண்டு. சிறைச்சாலை நூலகத்தைப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கிறது. நம் நாட்டில், பெரிய கல்லூரிகளில் கூட அத்தனை புத்தகங்கள் இருக்குமா என்பது சந்தேகம்தான்! மனவளம் மற்றும் சுய முன்னேற்றப் பத்திரிகைகள் வேறு ஏராளமாக இருக்கின்றன. படிப்பில் உதவுவதற்கு சமூக சேவகர்கள் தவிர ஆசிரியர்களும் இருக்கிறார்கள்.

விளையாட்டுப் பயிற்சிக்கும் இடம் ஒதுக்கி வசதி செய்திருக்கிறார்கள். பிரும்மாண்ட விளையாட்டுத் திடல். கைதிகள் சிறந்த பயிற்சி பெற்று தாங்களே பயிற்சியாளர்களாவதும் உண்டு. நம் நாட்டில் ஒரு பெரிய ஹெல்த் கிளப்பில் மட்டுமே பார்க்கக்கூடிய ஜிம்னாஸ்டிக் கருவிகள். அவற்றுக்குத் தனியே ஒரு கூடமும் உண்டு. இங்கே கைதிகளுடன் சிறை அதிகாரிகளும் பயிற்சி செய்கிறார்கள். 'ஹெல்த் கிளப்' கருவிகளைப் பராமரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, கைதிகளே அதைப் பொறுப்புடன் செய்து வருகிறார்கள்.

இந்த குட்டி நகரத்தின் உள்ளே சர்ச், மசூதி, இதர வழிபாடுகளுக்குப் பிரார்த்தனை அறை யாவும் அடக்கம். சர்ச்சின் பாதிரியார் எழுபத்தைந்து வயது

• வொர்க்ஷாப்பில் பெண் அதிகாரி.





• குடும்பத்துடன் ஒரு நாள்.....

முதியவர். அனைத்து மத நூல்களும் அடுக்கி வைத்திருக்கிறார். இந்தியக் கைதி ஒருவருக்காக வரவழைத்த, சுவாமி சின்மயானந்தரின் பகவத் கீதை விளக்க உரையைக் காட்டுகிறார்.

இப்படி அதிசயத்துக்குப் பின் அதிசயமாகப் பார்த்துக் கொண்டே வந்த போது கண்ணில் பட்டது சிறைச்சாலையின் மாதப் பத்திரிகை! அற்புதமான வடிவமைப்பு, அச்சு நேர்த்தி. கைதிகளின் கற்பனை, கை வண்ணங்கள் இவற்றுடன் அவர்களின் நியாயமான குறைகளுக்கும் அதில் இடம் இருக்கிறது. அவற்றை வெளியிடுவதுடன் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை குறித்த உறுதி மொழிகளும் வெளியிடப்படுகின்றன.

''ஓரளவுக்கு சென்ஸார் செய்துதான் வெளியிடுவோம். இருந்தாலும் கைதிகளின் உணர்வுகளையும் திறமைகளையும் புரிந்து கொள்ள இந்தப் பத்திரிகை உதவுகிறது'' என்றார் ஒரு அதிகாரி.

ஒரு சில செல்களில் இரண்டு மூன்று கைதிகள், வேறு சிலவற்றில் தனியொரு கைதி. அவரவர் தண்டனைத் தரத்திற்கேற்ப அறைகளாம். நீண்ட கால கைதிகளுக்குத் தனியறை. வாரம் ஒரு முறை குடும்பத்தாருக்கு போன் செய்ய அனுமதி; செய்யும் வேலைக்குச் சம்பளம்; அதைக் கொண்டு சிறை வளாகத்திலுள்ள கடையில் விரும்பும் பொருள்களை வாங்கும் சுதந்திரம் என்று நிறைய உரிமைகள் கொடுத்திருக்கிறார்கள்.

இவ்வளவு ஏன்... நீண்ட நாள் கைதிகள் தங்கள் குடும்பத்துடன் ஒரு நாள் முழுவதும் தங்கி மகிழ தனி வீடுகள் கூட இருக்கின்றன. நன்நடத்தைக்கு வெகுமதியாக இந்த அனுமதி அளிக்கப்படுகிறது. இதை family picnic என்று குறிப்பிடுகிறார்கள்.

நம் ஊரில் ஜெயில் என்றதுமே களி உருண்டை ஞாபகம்தான் வரும். ஆனால் இந்த ஜெயில் சமையலறையின் சுத்தமும் நவீன வசதிகளும் அசத்தல்; அங்கு சமைத்து வந்த 'சாத்வீக' (உணர்வுகளைத் தூண்டாத) உணவோ ஆரோக்கிய மணமும் சுவையும் கூடியதாகப் பட அசத்தல்!

நம்மைச் சாப்பிட அழைத்துச் சென்ற அதிகாரி கார்ல் பெரியிடம் கேட்டோம் : ''இப்படி வசதிமயமாகச் செய்து வைச்சிருக்கீங்களே, இங்கு இருப்பதை சிறை வாசம் என்று எப்படிச் சொல்வது? இது எந்த வகையில் தண்டனையாகும்?''

''அமெரிக்காவில் தனிமனித சுதந்திரத்தை இழப்பதுதான் மிகப் பெரிய தண்டனை'' என்றார் கார்ல் பெரி. ''சிறைச்சாலையில் ஒவ்வொரு கணமும் வீடியோ காமெராவின் கண்காணிப்பில் இருக்கிறார்கள். கட்டாய உடலுழைப்பு, கடுமையான பயிற்சிக்குப் பின்தான் வசதிகளை அனுபவிக்க உரிமை. இது போதாதா....?'' என்றார்.

நவீன சிந்தனையுடன் அமைக்கப்பட்ட இத்தகைய சிறைச்சாலைகள் நிறுவிய பிறகு நியூயார்க்கில் குற்றங்கள் குறைந்திருக்கும் என்ற எண்ணத்தில் புள்ளி விவரங்கள் கேட்டோம்.

''சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குற்றங்கள் பதினோரு சதவிகிதம் அதிகரித்துள்ளன'' என்றார்!

அமெரிக்க சிறைச்சாலையை விட இந்தத் தகவல் அதிக ஆச்சர்யம் அளித்தது!

கட்டுரை, படங்கள் : **ரமணன்**



"அயோக்கிய ராஸ்கல்! அந்த சாமியாரை உடனே கைது பண்ணணும் சார்."
"ஏன்யா? என்ன பண்ணினான்?"
"நம்மளவிட அதிகமா கற்பழிக்கிறானே!"

— அரிசி ஸ்ரீராம்



அபிராமியின் தேக்கு மரத்திட்டம்

எங்களுடைய தேக்கு மரத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெற அன்புடன் அழைக்கிறோம்

ரூ. 150/- வீதம் 8 மாதங்கள் ரூ. 1,200/- மட்டும் செலுத்தி
ரூ. 1,50,000/- பெறுவீர் 20 - ஆண்டுகளில்

ரூ. 600/-	= ரூ. 75,000/-	ரூ. 12,000/-	= ரூ. 18 லட்சம்
ரூ. 6000/-	= ரூ. 7,50,000/-	ரூ. 24,000/-	= ரூ. 36 லட்சம்

- ★ செலுத்தும் பணத்திற்கு உத்தரவாதமாக இலவச நிலம் / சேஷ் சர்டிபிகேட்
- ★ இலவச விபத்துக்காப்பீடு 20 ஆண்டுகளுக்கும்
- ★ மூன்று மாதங்களுக்கு ஒரு பரிசு குலுக்கல் மூலம் தொடர்பு
- ★ மொத்தமாக செலுத்தினால் 10% தள்ளுபடி
- ★ இலவச நிலம் திருச்சி தூரியூரில் வழங்கப்படும்
- ★ உயர்தர தேக்கு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன

பணத்தை D.D. ஆக **அபிராமி தேக்கு யூனிட்ஸ்** திருச்சி என்று எடுத்து அனுப்பவும்

உங்கள் டெபாசிட்டுக்கு கவர்ச்சிகரமான வட்டி வழங்குகிறோம்

24% PA மாத வட்டி **27% PA வருட வட்டி**

- ★ மாத வட்டிக்கு முன் தேதியிட்ட காசோலைகள் வழங்கப்படும்.
- ★ வங்கி கமிஷனை குறைத்து "ABBIRAMI HIGH INVESTMENS, TRICHY" என்று வங்கி டிராப்ட் அனுப்பினால் போதுமானது

அஷ்டலெட்சுமி டெபாசிட் திட்டம்

- ★ ரூ. 3,000/- = ரூ. 1,08,190/-ஐ 15 ஆண்டுகளில் பெறுவீர்.

பணத்தை D.D. ஆக **அபிராமி HIGH இன்வெஸ்ட்மெண்ட்ஸ்** திருச்சி என்று எடுத்து அனுப்பவும்

அபிராமியின் அக்வா யூனிட்ஸ் திட்டம்

64% P.A **100% EOU**

உங்கள் முதலீட்டிற்கு அதிக வருமானம்

ரூ.5,000/-=ரூ. 37,000/-(பத்து ஆண்டுகளில்)

ரூ.5,000/-=ரூ. 17,200/-(ஆறு ஆண்டுகளில்)

- ★ செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக முன் தேதியிட்ட காசோலை வழங்கப்படும்
- ★ முதலாம் ஆண்டு முதல் ரூ. 1,200/- வீதம் 10 வருடங்களுக்கு ஊக்க தொகை வழங்கப்படும்.
- ★ 10வது வருட முடிவில் ரூ. 25,000/- க்கான முன் தேதியிட்ட காசோலை வழங்கப்படும்.
- ★ ரூ. 500/- வீதம் 10 மாதங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்.
- ★ தமிழ்நாட்டில் மீன் பண்ணைக்கு புகழ்பெற்ற தேனீர்பட்டி கிராமத்தில் எங்களுடைய நன்னீர் இறால் பண்ணை புதிய தொழில் நுட்பத்துடன், தொழில் நுட்ப வல்லுநர்களின் மேற்பார்வையில் வளர்க்கப்படுகின்றன.
- ★ 1500 ச.அடி நிலம் இட்ட காலம் வரை ஒத்திகைக்கு கொடுக்கப்படும்
- ★ திட்டம் முழுவதும் இன்ஷூர் செய்யப்பட்டுள்ளது.
- ★ அனைத்து ஊர்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

பணத்தை D.D. ஆக **ABBIRAMI AQUA ANNEXA** திருச்சி என்று எடுத்து அனுப்பவும்.

மேலும் விபரங்களுக்கு

ABBIRAMI GROUP COMPANIES

★ TEAK UNITS ★ HIGH INVESTMENTS ★ AQUA ANNEXA

Registered Off :	Corporate Off :	Branch Off :
Chithra Complex, Near Chathiram Bus Stand, Tiruchy- 2. ✆ 31971, 25963	49, Brindhavan Street, Murugan Complex, West Mambalam, Madras -600 033.	55-B, Chinniah Complex, Five Roads, Near Gowri Theatre, Salem - 636 004.

பார்த்திபன் கனவு

18. பொன்னனின் அவமானம்

சென்ற மூன்று தினங்களாகப் பொன்னன் குடிசைக்குள்ளே இடியும் மழையும் புயலும் பூகம்பமுமாக இருந்தது.

"நான் செய்தது தப்பு என்றுதான் ஆயிரந் தடவை சொல்லி விட்டேனே! மறுபடியும் மறுபடியும் என் மானத்தை வாங்குகிறாயே!" என்றான் பொன்னன்.

"தப்பு, தப்பு, தப்பு என்று இப்போது அடித்துக் கொள்கிறாயே, என்ன பிரயோஜனம்? இந்தப் புத்தி அப்போது எங்கே போச்சு?" என்று வள்ளி கேட்டாள்.

இப்போது என்ன குடி முழுகிப் போய்விட்டதென்று ஓட ஓட விரட்டுகிறாய், வள்ளி! அந்தச் சக்கரவர்த்தி எங்கே போய் விட்டார்! என் வேல்தான் எங்கே போச்சு?"

"வேல் வேறயா, வேல்? கெட்ட கேட்டுக்குப் பட்டுக் குஞ்சந்தான்! ஓடம் தள்ளுவதற்கும் கும்பிடுவதற்குந்தான் கடவுள் உனக்குக் கையைக் கொடுத்திருக்கிறார்! கும்பிடுகிற கையினால் எங்கேயாவது வேலைப் பிடிக்க முடியுமா?"

இரண்டு உடலும் ஓர் உயிருமாயிருந்த தம்பதிகளுக்குள் இப்படிப்பட்ட ஓயாத வாய்ச் சண்டை நடப்பதற்குக் காரணமாயிருந்த சம்பவம் இதுதான் :-

இரண்டு நாளைக்கு முன் இந்தக் காவேரிக்கரைச் சாலை வழியாக நரசிம்ம சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் அவர்களுடைய பரிவாரங்களும் உறையூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்த போது, தோணித் துறைக்கு அருகில் சக்க்ரவர்த்தி சிறிது நின்றார். தோணித் துறையையும், காவேரியின் மத்தியிலிருந்த தீவையும், அந்தத் தீவில் பச்சை மரங்களுக்கிடையே காணப்பட்ட வசந்த மாளிகையின் பொற் கலசத்தையும் குந்தவிக்குச் சுட்டிக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் குடிசையின் வாசலில் நின்று கொண்டிருந்த பொன்னன், வள்ளி இவர்கள் மேல் சக்கரவர்த்தியின் பார்வை விழுந்தது. பொன்னனை அருகில் வரும்படி அவர் சமிக்ஞை செய்யவும், பொன்னன் ஓடோடியும் சென்று, கைகூப்பித் தண்டம் சமர்ப்பித்து, பயபக்தியுடன் கையைக் கட்டிக் கொண்டு அவர் முன்னால் நின்றான். சக்கரவர்த்தியைப் பழிக்குப்பழி வாங்கப் போவதாகவும், அவருடைய மார்பில் தன் வேலைச் செலுத்தப் போவதாகவும் அவன் சொல்லிக் கொண்டிருந்ததெல்லாம் அச்சமயம் அடியோடு மறந்து போய் விட்டது. சக்கரவர்த்தியின் கம்பீரத் தோற்றமும் அவருடைய முகத்தில் குடி கொண்டிருந்த தேஜசும் அவனை அவ்விதம் வசீகரித்துப் பணியச் செய்தன.

"இந்தத் தோணித் துறையில் படகு ஓட்டுகின்றவன் நீதானே, அப்பா!" என்று சக்கரவர்த்தி கேட்கவும், பொன்னனுக்குத் தலை கால் தெரியாமற் போய்விட்டது.

"ஆமாம், மகா... சக்ர... பிரபு!" என்று குழறினான்.

"அதோ தெரிகிறதே, அந்த வசந்த மாளிகையில் தானே அருள்மொழி ராணி இருக்கிறார்!"

"ஆமாம்."

"இதோ பார்! நமது குழந்தை குந்தவி தேவி, ராணியைப் பார்ப்பதற்காகச் சீக்கிரத்தில் இங்கே வரக் கூடும். ஜாக்கிரதை

அமரர் கல்கி

யாக ஓடம் செலுத்திக் கொண்டு போய் அந்தக் கரையில் விட வேண்டும். தெரியுமா!"

"புத்தி, சுவாமி!" என்றான் பொன்னன்.

பிறகு சக்கரவர்த்தியும் அவருடைய பரிவாரங்களும் உறையூரை நோக்கிச் சென்றார்கள்.

இதையெல்லாம் வள்ளி குடிசை வாசலில் நின்றபடி அரைகுறையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பொன்னன் திரும்பி வந்தபோது, வள்ளியின் முகத்தில் 'எள்ளும் கொள்ளும்' வெடித்தது. முழு விவரமும் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னர், வள்ளி பலமாய்ச் சண்டை பிடிக்க ஆரம்பித்தாள். சக்கரவர்த்திக்குப் பணிந்து மறுமொழி சொன்ன காரணத்தினால் விக்கிரம மகாராஜாவுக்குப் பொன்னன் துரோகம் செய்துவிட்டதாக வள்ளி குற்றம் சாட்டினாள். "உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் துரோகி!" என்று நிந்தித்தாள். அப்போது அவர்களுக்குள் ஏற்பட்ட விவகாரம் மூன்று தினங்களாக இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தது.

வள்ளியின் சொல்லம்புகளைப் பொறுக்க முடியாதவனாய், அன்று மத்தியானம் உச்சி வேளையில் பொன்னன் நதிக்கரையோரம் சென்றான். அங்கே நீரோட்டத்தின் மீது தழைந்து கவிந்திருந்த ஒரு புன்க மரத்தினடியில் அதன் வேரின் மேல் உட்கார்ந்து, தனக்கு நேர்ந்த அவமானத்தை எப்படி துடைத்துக் கொள்வது, வள்ளியிடம் மறுபடியும் எப்படி நல்ல பெயர் வாங்குவது? - என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது கார்த்திகை மாதக் கடைசி, ஒரு மாதம் சேர்ந்தாற்போல் அடைமழை பெய்து, விட்டிருந்தது. கழனிகளில் நீர் நிறைந்து தளும்பிக் கொண்டிருந்தது. பச்சை மரங்களின் இலைகள், புழுதி தூசியெல்லாம் கழுவப்பட்டு நல்ல மரகத வர்ணத்துடன் பிரகாசித்தன. குளுகுளுவென்று குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது.

இப்படி வெளி உலகமெல்லாம் குளிர்ந்திருந்ததாயினும், பொன்னனுடைய உள்ளம் மட்டும் கொதித்துக் கொண்டிருந்தது. பத்து வருஷத்துக்கு முன்னால் இந்தக் கார்த்திகை மாதம் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! பார்த்திப மகாராஜாவும் ராணியும் இளவரசரும் இங்கே அடிக்கடி வருவதும் போவதுமாயிருப்பார்கள். அரண்மனைப் படகுக்கு அடிக்கடி வேலை ஏற்படும். தோணித் துறை அப்போது எவ்வளவு கலகலப்பாயிருந்தது! குதிரைகளும், யானைகளும், தந்தப் பல்லக்குகளும் இந்த மாந்தோப்பில், வந்து காத்துக் கொண்டு கிடக்குமே! அந்தக் காலம் போய்விட்டது. இப்போது ஈ, காக்கை இங்கே வருவது கிடையாது. இந்தத் தோணித்துறைக்கு வந்த கேடுதான் என்ன? பார்த்திப மகாராஜா போர்க்களத்தில் இறந்து போனார். இளவரசர் எங்கேயோ கண்காணாத தீவில் தவித்துக் கொண்டிருக்கிறார். அருள்மொழி ராணியோ ஓயாமல் கண்ணீரும் கம்பலையுமாயிருக்கிறார். வசந்த மாளிகைக்குப் போவார் இல்லை; ஓடத்துக்கும் அதிகம் வேலை இல்லை.

அந்தச் சண்டாளன் மாரப்ப பூபதி மட்டும் துரோகம் செய்யாமலிருந்திருந்தால்... இப்போது விக்கிரம மகாராஜா சோழ நாட்டின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பார் அல்லவா? பல்லவ சக்கரவர்த்தி இங்கே ஏன் வரப் போகிறார்? வள்ளியிடம் தான் ஏச்சுக் கேட்கும்படியாக ஏன் நேரிட்டிருக்கப் போகிறது?

இப்படிப் பொன்னன் யோசித்துக் கொண்டிருக்கும் போது, குதிரை வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். சாலை ஓரத்தில் பொன்னனுடைய குடிசைக்கருகில் மாரப்ப பூபதி குதிரை மேலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.

19. மாரப்பனின் மனோரதம்

மாரப்ப பூபதி பொன்னனின் குடி

அருள்வாக்கு

பால் ருசியாக இருக்கிற வஸ்து என்று நமக்குத் தெரியும். வெல்லமும் ருசியான வஸ்து என்று தெரியும். அதனால், பாலையும் வெல்லத்தையும் போட்டு நன்றாக ஸாரம் திரண்டு வரும்படி இறுகக் காய்ச்சினால் அந்தத் திரட்டுப் பால் பரம ருசியாகத்தான் இருந்தாக வேண்டும் என்று தெரிகிறது. அதாவது, மூளைக்குத் தெரிகிறது. இப்படி மூளையால் நிச்சயப்படுத்தித் தெரிந்து கொண்டு விட்டாலும் அதனால் திரட்டுப் பாலில் உண்டாகிற ருசியநுபவம் கிடைத்து விடுகிறதா? திரட்டுப் பாலின் பலனான அந்த இன்பத்தை அடைய என்ன பண்ண வேண்டும்? தின்று பார்க்க வேண்டும். வெளியிலே தெரிகிற திரட்டுப்பாலை உள்ளே தள்ளுகிற போதுதான் அதைப் பற்றிய ஸரியான, நிஜமான அநுபவம் உண்டாகிறது. இங்கே வெளிப்பட இருந்த



வஸ்து மறைந்து போய், உள்ளுக்குள்ளே ரஹஸ்யமாக ஆன பிறகுதானே அதனால் என்ன பயனோ, அது எந்த லக்ஷ்யத்தை உத்தேசித்து செய்யப்பட்டதோ அது பூர்த்தியாகிறது? உள்ளுக்குள்ளே போனபின் அதன் ரூபம் மறைந்தாலும், அதன் பயன் அப்போதுதானே வெளிப்படுகிறது?

அதே போல, குரு உபதேசம் மூளை லெவலில் மட்டும் ஏறுகிற போது நமக்கு ரஹஸ்யமாக இருக்கிற மாதிரி தோன்றவில்லை. மூளைக்கு நன்றாக விஷயம் தெரியத்தான் தெரிகிறது. ஆனாலும் அது உயிரின் அநுபவமாக இல்லாததால் அதை பரோக்ஷ ஞானம் என்றே வைக்க வேண்டும். எப்போது அது உயிருக்கு உள்ளேயே போய் அநுபவமாகிறதோ அப்போதுதான் அதற்கு அபரோக்ஷ அநுபூதி என்ற பெயர் கொடுத்திருக்கிறது. இதிலேதான், முரண் மாதிரி இருக்கும் வேடிக்கை! வெளிப்பட குரு வாக்கியம் நன்றாகத் தெரிந்து, மூளைக்கு அது எட்டும் போது, அதற்கு 'ஒளித்து வைத்தது', 'ரஹஸ்யமானது' என்று அர்த்தம் கொடுக்கும் 'பரோக்ஷ'ப் பட்டம் ஒட்டிக் கொண்டிருக்கிறது! பரம ரஹஸ்யமாக இருக்கப்பட்ட உயிரின் உள்ளுக்குள்ளே அதுவே தோய்ந்து, உறைந்து போய், வெளிப்படத் தெரிகிற வாக்கு, மூளை எல்லாம் மறைந்து போன போது தான் 'அபரோக்ஷம்' என்று, அதாவது நன்றாக, வெளிப்பட ப்ரகாசிப்பதாக, பட்டம் பெறுகிறது!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சைக் கதவைத் திறந்த போது, வள்ளி பின் வருமாறு சொல்லிக் கொண்டிருந்தாள்:-

"மானம் போன பிறகு உயிரை வைத்துக் கொண்டு இருந்து என்ன பிரயோசனம்? நம்ம தேசத்துக்கும் நம்ம மகாராஜாவுக்கும் துரோகம் செய்து விட்டு, அப்புறம் பிராணனை வைத்துக் கொண்டு இருக்கிறதாயிருந்தால், உனக்கும் அந்தக் கேடுகெட்ட மாரப்பனுக்கும் என்ன வித்தியாசம்?"

இதை மாரப்பன் கேட்டதும் அவனுடைய முகம் கோபத்தினால் சிவந்தது. வாசற்படியிலேயே சற்று நேரம் அசையாமல் நின்றான். பிறகு என்ன தோன்றிற்றோ என்னவோ, அவனுடைய முகத்தில் ஒருவிதமான மலர்ச்சி உண்டாயிற்று. புன்னகையுடன், "என்ன வள்ளி! என் தலையையும் சேர்த்து உருட்டுகிறாய்? என்ன சமாசாரம்? என்னோடு பொன்னனையும் சேர்க்கும்படியாக அவன் அப்படி என்ன பாதகம் செய்து விட்டான்!" என்றான்.

அடுப்பு வேலையைப் பார்த்தபடி பொன்னன்தான் வருகிறான் என்று நினைத்துக் கொண்டு, தலை நிமிராமல் முதலில் பேசிய வள்ளி, வேற்றுக் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டுப் பார்த்தாள். மாரப்பன் என்று அறிந்ததும், அவளுக்குக் கொஞ்சம் திகைப்பாய்த் தானிருந்தது. ஆனாலும், சீக்கிரத்தில் சமாளித்துக் கொண்டு, "உங்கள் தலையை உருட்டுவதற்கு என்னால் முடியுமா, ஐயா? அதற்கு எந்த உண்மையான வீரம் படைத்த ஆண் பிள்ளை பிறந்திருக்கிறானோ?" என்றாள்.

இதில் பிற்பகுதியை மெல்லிய குரலில் சொன்னபடியால் மாரப்பன் காதில் நன்றாக விழவில்லை.

"என்ன சொன்னாய், வள்ளி?" என்றான்.

இதற்குள் பொன்னன் வெளியிலிருந்து வரவே, மாரப்பன் அவனைப் பார்த்து, "பொன்னா! உன்னோடு ஒரு சமாச்சாரம் பேச வேண்டும், வா" என்று கூறி அவனை வெளியில் அழைத்துப் போனான்.

இருவரும் நதிக் கரைக்குச் சென்று மரத்தடியில் உட்கார்ந்தார்கள்.

"பொன்னா! நீ எனக்கு ஒரு பெரிய உபகாரம் செய்திருக்கிறாய். அதற்காக என்றைக்காவது ஒரு நாள் நான் உனக்கு நன்றி செலுத்தியாக வேண்டும்" என்றான் மாரப்பன்.

"நானா, ஐயா? உங்களுக்கா? அப்படியொன்றும் செய்ததாகத் தெரியவில்லையே?"

"உனக்குத் தெரியாமலே செய்திருக்கிறாய், பொன்னா!"

"ஐயையோ! அப்படியானால், அதை வள்ளியிடம் மட்டும் சொல்லி விடாதீர்கள்! அவள் என்னை இலேசில் விடமாட்டாள்!" என்றான் பொன்னன்.

மாரப்பன் சிரித்துக் கொண்டே, "அதுதான் பொன்னா! அதுதான்! வள்ளியை நீ கல்யாணம் செய்து கொண்டாயே, அதுதான் நீ எனக்குச் செய்த பெரிய உபகாரம். ஒரு காலத்தில் அவளை நான் கல்யாணம் செய்து கொள்ளலாமென்ற சபலம் இருந்தது.

அப்படி நடந்திருந்தால், என்னை என்ன பாடு படுத்தியிருப்பானோ?"

"ஆமாம், எஜமான், ஆமாம்! தங்களுடைய சாதுக் குணத்துக்கும் வள்ளியின் சண்டைக் குணத்துக்கும் ஒத்துக் கொள்ளாதுதான். சண்டை என்று கேட்டாலே தங்களுக்குச் சுரம் வந்துவிடும் என்பதுதான் உலகமெல்லாம் அறிந்த விஷயமாயிற்றே!" என்றான் பொன்னன்.

"என்ன சொன்னாய்?" என்று மாரப்பன் கத்தியை உருவினான்.

"ஓகோ! கத்திகூடக் கொண்டு வந்திருக்கிறீர்களா? நிஜக் கத்திதானே? கொஞ்சம் இருங்கள். வள்ளியைக் கூப்பிடுகிறேன். உங்கள் உறையில் உள்ள கத்தி நிஜக் கத்தியல்ல - மரக் கத்தி என்று அவள் ரொம்ப நாளாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறாள்!" என்று கூறிவிட்டுப் பொன்னன் எழுந்திருந்தான்.

மாரப்பன் கத்தியைப் பக்கத்தில் தரையில் வைத்து விட்டு, "வேண்டாம், பொன்னா! உட்கார். புருஷர்களின் காரியத்தில் பெண் பிள்ளைகளைக் கூப்பிடக் கூடாது. அவர்கள் வந்தால் விபரீதந்தான். பார்! விக்கிரமனைச் சோழ தேசத்துக்கு ராஜாவாக்க நாம் பெரு முயற்சி செய்தோமே? அது பலித்ததா? நமது ஆலோசனைகளில் அருள்மொழி ராணியைச் சேர்த்துக் கொண்டதனால் தானே, காரியம் கெட்டுப் போயிற்று?" என்றான்.



"அப்படியா? மகாராணி என்ன செய்தார்கள், காரியத்தைக் கெடுப்பதற்கு? அவர்தான் இங்கே இளவரசரையும் கிளப்பி விட்டுவிட்டு, அங்கே அச்சுதவர்மரிடமும் போய்ச் சொல்லிக் கொடுத்தாரா? பிள்ளை மேல் அவருக்கு என்ன அவ்வளவு விரோதம்?"

"இல்லை, பொன்னா! ராணி யாரோ ஒரு சிவனடியாரை நம்பி, அவரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். அந்த வேஷதாரியை நம்ப வேண்டாமென்று நான் எவ்வளவோ சொன்னேன். கேட்டால்தானே! உண்மையில் அந்தக் கபட சந்நியாசி பல்லவ சக்கரவர்த்தியின் ஒற்றன்! எல்லாவற்றையும் போய்ச் சொல்லிவிட்டான்!"

இதைக் கேட்டதும், பொன்னனுக்கு ஏற்கெனவே அந்தச் சிவனடியார் மேல் ஏற்பட்டிருந்த சந்தேகம் கொஞ்சம் பலப்பட்டது. 'ஒரு வேளை அவருடைய வேலையாகவே இருந்தாலும் இருக்கலாம். நாம் அனாவசியமாய் மாரப்ப பூபதியைச் சந்தேகித்தோமே?' என்று சிறிது வெட்கமடைந்தான்.

''சிவனடியாராயிருந்தாலும் சரி, என்றைக்காவது ஒரு நாள் உண்மை வெளியாகப் போகிறது. அப்போது, துரோகம் செய்தவனை...'' என்று பொன்னன் பல்லை நரநரவென்று கடித்த வண்ணம், மாரப்பனுக்குப் பக்கத்தில் தரையில் கிடந்த கத்தியைச் சட்டென்று எடுத்து ஒரு சுழற்றுச் சுற்றி, அருகேயிருந்த புங்கமரத்தில் ஒரு போடு போட்டான். வைரம் பாய்ந்த அந்த அடிமரத்தில் கத்தி மிக ஆழமாய்ப் பதிந்தது!

மாரப்பனுடைய உடம்பு பாதாதி கேசம் ஒரு கண நேரம் வெடவெடவென்று நடுங்கிற்று. எனினும் பொன்னன் தன்னைத் திரும்பிப் பார்ப்பதற்குள் ஒருவாறு சமாளித்துக் கொண்டான்.

"பழைய கதையை இனிமேல் மறந்துவிடு, பொன்னா! இளவரசர் என்னவோ இனிமேல் திரும்பி வரப் போவதில்லை. நம்முடைய காரியத்தை நாம் பார்க்க வேண்டியதுதான்."

"நம்முடைய காரியம் என்ன இருக்கிறது இனிமேல்? எல்லாந்தான் போய்விட்டதே!"

''எல்லாம் போய்விடவில்லை. நானும் நீயும் இருக்கிற வரையில் எல்லாம் போய் விடாது. ஆனால் யுக்தியை



மாற்றிக் கொள்ள வேண்டும். சண்டையினால் முடியாத காரியத்தைச் சமாதானத்தினால் முடித்துக் கொள்ள வேண்டும். நீ கெட்டிக்காரன், பொன்னா! நான் எல்லாம் கேள்விப்பட்டேன். சக்கரவர்த்தி இந்த வழியாகப் போனபோது, உன்னை அழைத்துப் பேசினாராம். நீயும் அவருக்குப் பணிந்தாயாம். இதுதான் சரியான யுக்தி. பெண் பிள்ளை பேச்சைக் கேட்காதே. வள்ளி ஏதாவது உளறிக் கொண்டு தானிருப்பாள். நீ மாத்திரம் எனக்குக் கொஞ்சம் ஒத்தாசை செய்தாயானால், சோழ நாட்டைக் காப்பாற்றலாம். விக்கிரமன் ஒரு வேளை திரும்பி வந்தால் அவனிடம் இராஜ்யத்தை ஒப்புவிக்கலாம். இராஜ்யம் அடியோடு கையை விட்டுப் போய் விட்டால், அப்புறம் திரும்பி வராதல்லவா?"

ஆரம்பத்தில் மாரப்பனின் பேச்சு பொன்னனுக்கு வேப்பங்காயாக இருந்தது. விக்கிரமனுக்கு இராஜ்யத்தை திருப்பிக் கொடுப்பது பற்றி பிரஸ்தாபித்ததும், பழைய சேனாதிபதி சொல்வதில் ஏதேனும் உண்மை இருக்குமோ? என்று பொன்னனுக்கு யோசனை உண்டாயிற்று.

"நான் என்ன ஒத்தாசை செய்யமுடியும்?" என்று அவன் கேட்டான்.

"பிரமாதமாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. சக்கரவர்த்தியின் மகள் குந்தவி தேவி, அருள்மொழி ராணியைப் பார்க்க வரப்போவதாகப் பிரஸ்தாபம். நீ தானே படகு விடுவாய்? சந்தர்ப்பம் நேரும் போதெல்லாம் என்னைப் பற்றிப் பேசு. உனக்குத்தான் தெரியுமே, பொன்னா! வள்ளியின் பாட்டன் ஜோசியம் சொல்லியிருக்கிறான் அல்லவா? எல்லாம் அந்த ஜோசியம் பலிப்பதற்கு ஏற்றபடியே நடந்து வருகிறது. இல்லாவிட்டால், குந்தவிதேவி இப்போது இங்கே வர வேண்டிய காரணமேயில்லை, பார்!" என்றான்.

குந்தவிதேவியை விக்கிரமன் மணந்து கொள்ள வேண்டுமென்னும் அருள்மொழி ராணியின் பழைய விருப்பம் பொன்னனுக்கு ஞாபகம் இருந்தது. எனவே, மாரப்பன் மேற்கண்டவாறு பேசியதும், பொன்னனுக்கு அவனிடமிருந்த வெறுப்பெல்லாம் திரும்பி வந்துவிட்டது; உள்ளுக்குள் கோபம் பொங்கிற்று. ஆயினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "அதற்கென்ன? சமயம் நேர்ந்தால் கட்டாயம் உங்களைப் பற்றிக் குந்தவிதேவியிடம் பேசுகிறேன்" என்றான்.

"நீ செய்யும் உதவியை மறக்கமாட்டேன். பொன்னா! சக்கரவர்த்தி என்னைக் கூப்பிட்டிருக்கிறார். நாளைக்குப் பார்க்கப் போகிறேன். சேனாபதி வேலையை இப்போது எனக்குக் கொடுக்கப் போகிறார். பிறகு சோழ இராஜ்யமே என் கைக்குள் வருவதற்கு அதிக நாளாகாது. அப்போது உன்னைக் கவனித்துக் கொள்வேன்!" என்று சொல்லிக் கொண்டே மாரப்பன் குதிரை மீதேறி அதைத் தட்டி விட்டான்.

20. சக்கரவர்த்தி சந்நிதியில்

மாரப்ப பூபதி போனவுடனே பொன்னன் குதித்துக் கொண்டு குடிசைக்குள் சென்றான். வள்ளியின் கோபத்தை மாற்றுவதற்கு ஒரு வழி கிடைத்தது என்ற எண்ணம் அவனுக்குக் குதூகலம் உண்டாக்கிற்று.

மாரப்பன் சொன்னதையெல்லாம் கொஞ்சம் கைச் சரக்கும் சேர்த்து - அவன் வள்ளியிடம் தெரிவித்த போது உண்மையாகவே அவன் எதிர்பார்த்த பலன் கிட்டிற்று. அதாவது வள்ளியின் கோபமெல்லாம் மாரப்பன் மேல் திரும்பிற்று.

'ஓகோ! சக்கரவர்த்தியின் மகளை இவன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்; அதற்கு நீ தூது போக வேண்டுமா? என்னிடம் மட்டும் அந்த மாதிரி அவன் சொல்லியிருந்தால், தலையிலே உடனே ஒரு சட்டி நெருப்பைக் கொட்டியிருப்பேன்; நீ கேட்டுக் கொண்டு சும்மா வந்தாய்!" என்றாள்.

"சும்மாவா வந்தேன்? உனக்கு என்ன தெரியும்? எப்பேர்பட்ட கோபம் அப்போது எனக்கு வந்தது தெரியுமா வள்ளி! அவன் வாளைக் கொண்டே அவன் தலையை வெட்டிப் போடப் பார்த்தேன்; புங்கமரம்



''இடுப்புல சுளுக்கு விழுந்திருக்குன்னு டாக்டர்கிட்ட போனியே... என்ன சொன்னார்?''

''வீட்டுக்குப் போறப்போ, ஆட்டோவில போங்கன்னு சொல்லி அனுப்பிச்சிட்டாரு!

— புதுவண்டி ரவீந்திரன்



சூப்பர் ஸ்டார்

ரஜினிகாந்த்

நடிக்கும்

சத்யா மூவிஸ்

சென்னை

ஆல்பட் A/c
அபிராமி A/c
மகாராணி A/c
தினசரி 4 காட்சிகள்

உதயம் A/c
தினசரி 3 காட்சிகள்
ஸ்ரீபிருந்தா A/c
தினசரி 4 காட்சிகள்

மற்றும் உலகமெங்கும்

பாட்ஷா

(BAASHA) சினிமாஸ்கோப்

சுரேஷ் கிருஷ்ணா

தேவா



வைரமுத்து - பாலகுமாரன் - P.S. பிரகாஷ் - மகி
தருண்குமார் - கணேஷ்குமார் - ராஜு
Elegant

தயாரிப்பு
V. ராஜம்மாள்
தமிழழகன். V

நடுவிலே நின்று தடுத்து விட்டது!" என்றான்.

"ஆமாம்; நீ வாய்வெட்டுத்தான் வெட்டுவாய்! வாள் வெட்டுக்கு உன் கையிலே சக்தி இருக்கிறதா?" என்றாள் வள்ளி.

பொன்னன், "இங்கே வா! நான் சொல்லுகிறது நிஜமா, இல்லையா? - என்று காட்டுகிறேன்" என்று சொல்லி அவள் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டு போனான். புங்க மரத்தில் கத்தி வெட்டு ஆழமாய்ப் பதிந்திருந்ததைக் காட்டினான்.

அதைப் பார்த்ததும் வள்ளியின் முகம் மலர்ந்தது. "இந்த வெட்டை, மரத்தில் ஏன் போட்டாய்? பாவம் பச்சை மரம்! அவன் மேலேயே போடுகிறதுதானே" என்றாள்.

"இருக்கட்டும்; ஒரு காலம் வரும். அப்போது போடாமலா போகிறேன்?" என்றான் பொன்னன்.

பிறகு, இருவரும் மேலே என்ன செய்வதென்று வெகு நேரம் யோசித்தார்கள்.

"நீதான் அன்றைக்குச் சக்கரவர்த்திக்குக் கும்பிடு போட்டுக் காலில் விழுந்தாயே! அவரை உறையூரில் போய்ப் பார்த்து எல்லாவற்றையும் சொல்லிவிடேன்" என்றாள் வள்ளி.

"நான் கலகத்தில் சம்பந்தப்பட்டவன் என்று உறையூரில் எல்லாருக்கும் தெரியுமே! உறையூருக்குள் என்னைப் போகவிடவே மாட்டார்கள். அதிலும் சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் சந்தேகப்பட்டுக் காராக்கிரகத்தில் பிடித்துப் போட்டு விடுவார்கள்" என்று பொன்னன் சொன்னான்.

"அப்படியானால் நான் போய்விட்டு வரட்டுமா?" என்றாள் வள்ளி.

"நீ எப்படி சக்கரவர்த்தியைப் பார்ப்பாய்? உன்னை யார் விடுவார்கள்?"

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, குடிசையின் வாசலில் குதிரைகள் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

'யார் இப்போது குதிரைமேல் வந்திருக்க முடியும்?' என்று யோசித்துக் கொண்டே வள்ளியும் பொன்னனும் வெளியில் வந்தார்கள். பல்லவ வீரர்கள் ஐந்தாறு பேர் வந்திருப்பதைப் பார்த்ததும், அவர்களுக்குக் கொஞ்சம் திடுக்கிட்டது.

வந்த வீரர்களின் தலைவன், "ஓடக்காரா! உன்னைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வரும்படி சக்கரவர்த்தியின் கட்டளை. மரியாதையாய் உடனே புறப்பட்டு வருகிறாயா? விலங்கு பூட்டச் சொல்லட்டுமா?" என்றான்.

பொன்னன் கலவரமடைந்த முகத்துடன் வள்ளியைப் பார்த்தான். வள்ளி துணிச்சலுடன் வீரர் தலைவனை நோக்கி, "சோழ நாட்டில் மரியாதைக்கு எப்போதும் குறைச்சல் இல்லை, ஐயா! நீங்கள் பிறந்த ஊரில்தான் மரியாதைக்குப் பஞ்சம் போலிருக்கிறது!" என்றாள்.

"ஓகோ! நீதான் வாயாடி வள்ளியா? உன்னையுந்தான் கொண்டுவரச் சொன்னார், சக்கரவர்த்தி!"

"ஆகா! வருகிறேன். உங்கள் சக்கரவர்த்தியை எனக்குந்தான் பார்க்க வேண்டும். பார்த்து, 'உறையூரிலிருந்து காஞ்சிக்குப் போகும் போது கொஞ்சம் மரியாதை வாங்கிக் கொண்டு போங்கள்!' என்று சொல்ல வேண்டும்" என்றாள்.

சக்கரவர்த்தியின் விஜயத்தை முன்னிட்டு உறையூர் வீதிகள் அழகாக அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தபோது, பொன்னனுக்கும் வள்ளிக்கும் ஆத்திரமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தன. முன் தடவை உறையூர் இவ்வளவு அலங்காரத்துடன் காட்சியளித்தது, பார்த்திப மகாராஜா போருக்குக் கிளம்பிய சமயத்தில்தான். ஆகா அதையெல்லாம் சோழநாட்டு ஜனங்கள் அடியோடு மறந்து விட்டார்கள் போலிருக்கிறது! பார்த்திப மகாராஜாவின் மரணத்துக்குக் காரணமான நரசிம்ம சக்கரவர்த்தியின் விஜயத்துக்காக இப்படியெல்லாம் நகரலங்காரம் செய்திருக்கிறார்களே! இது என்ன அவமானம்? சோழ நாட்டுக்கு என்ன கதி நேர்ந்துவிட்டது? அருள்மொழி ராணி இப்போது உறையூருக்கு வந்து இந்தக் கோலாகலங்களையெல்லாம் பார்த்தால், மனம் சகிப்பாரா? - இவ்விதம் பேசிக் கொண்டே பொன்னனும் வள்ளியும் சக்கரவர்த்திக்கென்று புதிதாக அமைக்கப்பட்டிருந்த



"ஆபரேஷன் இல்லாம குணப் படுத்த முடியாதா, டாக்டர்?"
"இப்படியே எல்லாரும் கேட்டா நான் யாருக்குத்தான் ஆபரேஷன் பண்றது?"
— டி.என்.பாலகிருஷ்ணன்

அரண்மனையை அடைந்தார்கள்.

அந்த அரண்மனையின் பெருமிதமும், அதில் காணப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளும் அவர்களை பிரமிக்கச் செய்தன; அவர்களின் ஆத்திரத்தையும் அதிகப்படுத்தின. சோழ மன்னர்கள் அமர்ந்து ஆட்சி செலுத்த வேண்டிய இடத்தில் வெளியூரான் வந்தல்லவா இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறான்?

அரண்மனைக்குள் அவர்கள் ஓர் அறையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள். அதற்கு அடுத்த அறையில் பேச்சுக் குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. கம்பீரமான ஓர் ஆண் குரல் அதிகமாகக் கேட்டது. ஓர் இளம் பெண்ணின் இனிய குரலும், சிரிப்பின் ஒலியும் இடையிடையே கேட்டன. ஈனஸ்வரத்தில் இன்னொரு ஆடவன் குரலும் கேட்டது. அது மாரப்ப பூபதியின் குரல் மாதிரி இருக்கவே, பொன்னன் திடுக்கிட்டான்.

சக்கரவர்த்திக்கு விரோதமான சதியாலோசனையில் கலந்து கொண்டதன் பொருட்டு விசாரிப்பதற்காகத்தான் சக்கரவர்த்தி தங்களை அழைத்துவரச் செய்திருக்க வேண்டும் என்று, பொன்னனும் வள்ளியும் கிளம்பும்போது ஊகித்தார்கள். விசாரணையின் போது தைரியமாக மறுமொழி சொல்லி, சக்கரவர்த்திக்குப் பொன்னன் கும்பிட்ட அவமானத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள். மாரப்ப பூபதியின் ஈனக் குரலிலிருந்து தாங்கள் ஊகித்தது சரிதான் என்று அவர்களுக்குப் பட்டது. அப்போது வள்ளி பொன்னன் காதோடு ஏதோ சொன்னாள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள், உள்ளேயிருந்து கம்பீரமான குரல், "எங்கே? அந்த ஓடக்காரனைக் கொண்டு வா" என்று கட்டளையிட்டது. பொன்னனையும் வள்ளியையும் அடுத்த அறைக்குள் கொண்டு போனார்கள். அங்கே நவரத்தினகசிதமான சிங்காதனத்தில் சக்கரவர்த்தி கம்பீரத் தோற்றத்துடன் வீற்றிருப்பதையும், அவருக்கு அருகில் குந்தவி தேவி சாய்ந்து கொண்டு நிற்பதையும், எதிரே மாரப்பன் குனிந்த தலையுடனும் நடுங்கிய உடம்புடனும் என் சாணுடம்பும் ஒரு சாணாய்க் குறுகி நிற்பதையும், வள்ளியும், பொன்னனும் போகும் போதே பார்த்துக் கொண்டார்கள். சக்கரவர்த்தியின் எதிரில் போய் நின்ற பிறகு அவர்களால் தலை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. சக்கரவர்த்தியின் முகத்தில் பொங்கிய தேஜஸானது அப்படிக் கண்களைக் கூசச்செய்து, அவர்களுக்கு அடக்க ஒடுக்கத்தை அளித்தது.

மாமல்ல சக்கரவர்த்தி இடி முழக்கம் போன்ற குரலில் சொன்னார் :-

"ஓகோ! இவன்தானா? தோணித் துறையில் அன்றைக்குப் பார்த்தோமே? வெகு சாதுவைப் போல் வேஷம்போட்டு நடித்தான்! நல்லது, நல்லது! படகு தள்ளுகிறவன் கூடப் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு விரோதமாகச் சதி செய்யவதென்று ஏற்பட்டு விட்டால், அப்புறம் கேட்பானேன்? அழகுதான்!"

இவ்விதம் சக்கரவர்த்தி சொன்ன போது, பொன்னனும் வள்ளியும் அடியோடு தைரியத்தை இழந்துவிட்டார்கள். அவர்களுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தோணித் துறையில் இனிய வார்த்தை பேசிய சக்கரவர்த்திக்கும், இங்கே நெருப்புப் பொறி பறக்கும்படி பேசும் சக்கரவர்த்திக்கும் காணப்பட்ட வித்தியாசம் அவர்களைத் திகைக்கச் செய்துவிட்டது.

சக்கரவர்த்தி மேலும் சொன்னார் :

"இருக்கட்டும்; உங்களைப் பின்னால் விசாரித்துக் கொள்ளுகிறேன். ஓடக்காரா! நான் இப்போது கேட்பதற்கு மறுமொழி சொல்லு. ஏன் தலையைக் குனிந்து கொள்கிறாய்? நிமிர்ந்து என்னைப் பார்த்து உண்மையைச் சொல்லு. நமது சாம்ராஜ்யத்துக்கு விரோதமாகக் கலகம் செய்யும்படி விக்கிரம இளவரசரை முக்கியமாகத் தூண்டி விட்டது யார்....?"

பொன்னன் பளிச்சென்று நிமிர்ந்து பார்த்து, "பிரபோ! இதோ உங்கள் முன்னால் நிற்கிறாரே. இந்த மாரப்ப பூபதிதான்!" என்றான்.

(தொடரும்)



''என்னது, ராப்பிச்சை ராமசாமிக்குப் பின்னால நம்ம எம்.எல்.ஏ. போய்ட்டிருக்காரு?''

''அம்மா தாயே, ஜகதீஸ்வரி, லோகமாதான்னு இப்படி பல புகழற வார்த்தைங்களை அவன் புதுசு புதுசா சொல்றானாம்.... கேட்டுக்கத்தான்!''

— டி.எஸ். திருமலைராயன்

ஸ்ரீ காஞ்சி பூஜ்ய ஸ்ரீ பரமாச்சார்யாள் அவர்கள்
பகவான் அத்வைத வித்யாசார்யாள் மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களே.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது ரூ. 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 5000/-, ரூ. 7500/- அல்லது ரூ. 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யசார்யா மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
42, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.


*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

குறிப்பு : எம்மிடம் வேத, வைதிக, ப்ரயோக நூல்கள் யாவும் கிடைக்கும். Rs. 3/- க்கு தபால் தலை அனுப்பி எமது Catalogue ஐ பெற்றுக் கொள்ளலாம்.

‘முகுந்த்... நம்ம தெருவுல புதுசா வந்திருக்கற பாங்கோட மானேஜர் வந்திருக்கார்... உன்னைப் பார்க்கணுமாம்...” அம்மா அறிவித்தாள்.

“கூடவே அழகான ஒரு பொண்ணும் வந்திருக்கு; அதையும் சேர்த்துப் பார்க்கணுமான்னு கேட்டுக்கோ...” அப்பா கிண்டலடித்தார்.

முகுந்த் ஜன்னல் திரையை நீக்கி, ஹாலை நோட்டமிட்டான். அங்கே, குஷன் சோபாவில், ரோஜாப்பூ வண்ணச் சேலையணிந்து, ஒரு ரோஜாப்பூ, வீற்றிருந்தது! பக்கத்தில் ‘முள்’ளைப் போல மானேஜர்!



“அப்ப்பா... என்ன அழகு! கண்களைப் பறித்து, நாசியைத் துளைத்து, இதழ்களைத் துடிக்க வைத்து, இதயத்தைத் தடதடக்க வைத்து, முகுந்தின் கால்களைத் தன்னிச்சையாக ஹாலுக்கிழுத்தது!


“குட் மார்னிங் சார்; உங்க வீட்டுக்குப் பக்கத்திலேயே எங்க பிராஞ்ச் திறந்திருக்கோம்...” என்பதில் துவங்கி என்னென்னவோ சொன்னார். ஸ்பேஸ் க்ராஃப்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவனை, “நாங்க லாக்கரும் வைச்சிருக்கோம்” என்ற குயில் குரல்தான், இவ்வுலகத்துக்கு இழுத்தது!

தன் பர்சனல் அக்கவுண்ட்டை அன்றே அந்த பிராஞ்சுக்கு மாற்றுவதாக மனதுக்குள் பிரதிக்ஞை செய்து, வெளியே, “நேரம் கிடைக்கும் போது அவசியம் வரேன்” என்று பிகு பண்ணிக் கொண்டான்.

அவர்கள் விடை பெற்றுப் பல நிமிடங்களாகியும், ரோஜாவின் மென்மையும், சுகந்தமும் ஹால் முழுதும் விரவியிருந்ததை உணர்ந்தான்.

ஆபீஸுக்கு செல்லும் வழியில் அதே நினைவுதான்... ‘சே!... அழகுக்கு இப்படி ஒரு ஈர்ப்பு சக்தியா?... அப்படியானால்... மகேஷ் சொல்வதில் உண்மை இருக்குமோ?’

அழகி



ஜெயஸ்ரீராஜ்

ஆபீஸில், மகேஷ் அவனுக்கு உதவியாளன், நல்ல நண்பனும் கூட! கம்பெனியின் புதிய கிளை ஒன்றுக்கு லேடி ஸ்டெனோ, டைப்பிஸ்ட், டெலிஃபோன் ஆபரேட்டர், ரிஸப்ஷனிஸ்ட் பதவிகளுக்கான தேர்வுகளை நடத்தும் பொறுப்பை, 'பாஸ்' முகுந்திடம் ஒப்படைத்திருந்தார். வந்திருந்த அப்ளிகேஷன்களில், தகுதி, திறமை அடிப்படையில், முகுந்த் சில தேர்வுகளைச் செய்தான்; ஆனால் மகேஷோ, அவர்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, கண்ணுக்குக் குளிர்ச்சியான ரகங்களை, நிறம், வயது, உடை, பாவனை போன்ற கோணங்களில் தேர்ந்தெடுத்தான்.

"பாவம்பா... இவ அப்பா இல்லாதவ... அந்தப் பொண்ணு நல்ல மார்க் வாங்கியிருக்கு..." முகுந்த் வாதாடிப் பார்த்தான்.

"பாவப்பட நாம என்ன ஆசிரமமா நடத்தறோம்? நமக்கு பிஸினஸ் பெருகணும்னா, நாலு பேர் நம்ம கம்பெனியைத் தேடி வரணும்; அதுக்கு 'பளிச்'னு நாலு பேரைப் போட்டு வைக்கணும்.... நம்ம 'காம்படீடர்' கம்பெனியைப் பாத்தியா? ரிஷப்ஷனிஸ்டுலேருந்து குப்பை கூட்றவ வரை எல்லாம் 'ஜில்'னு இருக்கும், சினிமா ஸ்டார் கணக்கா...."

சாதாரணமாக இதற்கெல்லாம் செவி சாய்க்காதவன், இன்று, இந்த அழகியைப் பார்த்து சொக்கித்தான் போய் விட்டான். 'ஜெண்ட் ஜெண்டில்மேன்' என்று பெயரெடுத்த தன்னையே இவள் வசப்படுத்தினாளென்றால்... கம்பெனியின் க்ளையண்டுகளான, குமார் ரிஸப்ஷனிஸ்டுகளிடமே வழிந்து கொண்டு நிற்கும், முக்கால் வழுக்கைகள், அரைக் கிழங்கள், இவர்களின் கதி என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்ததில், ஒரு சமயம், மகேஷின் தேர்வுகள் தாம் கம்பெனியின் முன்னேற்றத்துக்கு உபயோகமாக இருக்குமோ என்ற ஐயம் தலை தூக்கியது!

அலுவலகம் சென்ற பின்னும் அழகியின் முகம், அவ்வப்போது நினைவில் ஃப்ளாஷ் ஆகி சித்திரவதை செய்தது. அப்ளிகேஷன்கள் அடங்கிய ஃபைலில், மகேஷ் சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் இருவரின் 'ப்ளோ-அப்'புகளையும் சூசகமாக வைத்து அனுப்பியதை, பெரிதுபடுத்தாமல் மன்னித்தான். இவர்கள் படத்தில் ரோஜாப்பூ மங்கை இருந்திருந்தால்... மிஸ் அண்டசராசரம் டைட்டில் கிடைத்திருக்குமோ?

அன்று, புதிய பிராஞ்சுக்காக சில கணக்குகள் திறக்க வேண்டியிருந்தது. அழகியின் பாங்க்குக்கு செல்ல ஏற்ற வாய்ப்பு... உடனே புறப்பட்டான்.

புதிய கிளையாக இருந்தாலும், கூட்டத்துக்குக் குறைவில்லை! இவன் அணுகிய கவுண்டரிலேயே அந்த தேவதை உட்கார்ந்திருந்தது, முன்னோர் செய்த புண்ணியத்தால் என்று நம்பினான். "ஒரு அக்கவுண்ட் ஓபன் பண்ணணும்..." என்று குழைந்தான்.

"ஒரு நிமிஷம் சார்....ப்ளீஸ்..." அழகாய்க் கெஞ்சினாள் அழகி! அவன்தான் ஒரு யுகமே காத்திருக்கத் தயாராக இருந்தானே! எதிர் சோஃபாவில் அமைதியாக உட்கார்ந்தான்.

சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த இருவர் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தது இவன் காதிலும் விழுந்தது. "அமாவாசையும் பௌர்ணமியும் போல, முள்ளும் மலரும் போல, எப்படி மச்சி இப்படி ஒரு காம்பினேஷன்?" அவர்கள், அழகியையும், அவள் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணையும் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"பல்லவன் பல்லவி பாடட்டுமே..." ஒருவன் கிண்டலாகச் சீட்டியடித்தான்.

"இவுங்க வீட்டுக்குத் தேங்காய்த் துருவியே அவசியமில்லை..." வெளியே துருத்திக் கொண்டிருந்த பல் வரிசையைப் பற்றி அவர்கள் கமெண்ட் அடித்ததை முகுந்த் அவ்வளவாக ரசிக்கவில்லை!

"கண்ணுக்குக் கண்ணாடி அழகு... மூக்குக்குச் சிரங்கழகு...." அடுத்த பாடல் அவள் போட்டிருந்த தடித்த கண்ணாடியையும், நாசியில் வெடித்திருந்த கட்டியையும் வர்ணித்தது.

"போப்பா... உங்க ஆளு மேலேயே நீ பாடிட்டிருந்தா... கொஞ்சம் நம்ம ஆளு மேலயும் பாடவிடு.... என்னவளே... என்னவளே என் இதயத்தைத் தொலைத்து

விட்டேன்..." அழகியை நோக்கி இந்தப் பாடலை எடுத்து விட்டான் மற்றவன்.

"ஹுக்கும்...பாஸ் புக்கைத் தொலைச் சதுக்கே இன்னும் வழி பிறக்கலே... இதயத்தைத் தொலைச்சதுக்கு வழி பிறக்கப் போகுதாம்ல..." முதலாமவன் எரிச்சலுடன் கிண்டலடித்தான்.

"அதான் 'தோ வரேன்'னாங்க இல்ல...?"

"சொல்லி அரைமணியாச்சு; உன் கிட்ட சொன்ன மாதிரியே இன்னும் நாலுபேர் கிட்ட சொல்லியாச்சு..." முகுந்தைப் பார்த்த வண்ணம் அவன் சொன்னான்.... "வர்றவங்க கிட்டல்லாம் சிரிச்சுப் பேசிக்கிட்டிருக்கத்தான் நேரம் சரியாயிருக்கு...."

அழகி வேறு ஒரு செக்ஷனில் யாருடனோ கலகலத்துக் கொண்டிருந்தாள். ஒரு ஓசிக் காப்பியும் குடித்ததில் இன்னும் பத்து நிமிடங்கள் கரைந்தன. 'பல்லவி' என்று இவர்கள் பட்டப் பெயர் சூட்டிய பெண், தன் வேலையில் மும்முரமாக இருந்தாள்.

ஒருவழியாக அழகி இருக்கைக்குத் திரும்பவும், ஒரு முதியவர் வந்து, "பாஸ் புக்ல ஒரு எண்டரி விட்டுப் போச்சும்மா... பாருங்களேன்" என்று புத்தகத்தை நீட்டவும் சரியாக இருந்தது.

"எண்ட்ரிதானே? வெச்சுட்டுப் போங்க சார். நாளைக்கு வந்து புக்கை வாங்கிக்கிங்க..." அலட்சியமாய் வந்தது பதில்.

"ஒரே ஒரு எண்ட்ரிதானேம்மா..." வந்தவர் சொல்லிக் கொண்டிருக்கையிலே, "அம்மா...உங்களுக்கு ஃபோன்" என்று ப்யூன் வந்து அறிவித்தான்; அவ்வளவுதான்; பறந்து விட்டது தேவதை!

"ம்..போனா... இன்னும் கால் மணி நேரம் அம்போ..." சோபா இளைஞர்கள் வெறுத்துக் கொண்டார்கள்.

'பல்லவி' இப்போது, தன் வேலையை முடித்துவிட்டு தலையை நிமிர்த்தினாள். "பாஸ் புக்கை இப்படி கொண்டாங்க சார்..." விடுவிடென்று எண்டரி போட்டுக் கொடுக்கவும், பெரியவர், "நல்லாரும்மா..."என வாழ்த்தி விடைபெற்றார். தன்னை கலாட்டா பண்ணிக் கொண்டிருந்த இளைஞர்களை நோக்கி, "உங்களுக்கு என்ன சார் வேணும்?" என்றாள் இதமாக.

அவர்கள் இதை எதிர் பார்க்க வில்லை... "வந்து.... பாஸ் புக் தொலைஞ்சிடுச்சு.... இங்கதான்".... தடுமாறினார்கள்.

"நம்பர் என்ன?"

தெரிந்தவுடன் பக்கத்து ஷெல்ஃபில் அக்கறையுடன் தேடினாள். "ஸைடுல விழுந்திருக்குது... இந்தாங்க" என்று நீட்டினாள்.

"தேங்க்யூ ஸோ மச் ஸிஸ்டர்"- இருவரும் உள்ளார்த்தமாகவே நன்றி தெரிவித்தார்கள். கண்களில் கூட கிண்டல் மறைந்து, கண்ணியம் தட்டுப்பட்டது.

வேறு இருவருக்கு 'பாலன்ஸ்' சொல்லி, பேமெண்டுக்கு காத்திருந்த செக்குளை 'பாஸ்' பண்ணி... ஐந்து நிமிடங்களில், அழகி கௌண்டரில் தேங்கியிருந்த வேலைகளையும் முடித்தாள். எஞ்சியிருந்தவன் முகுந்த் மட்டுமே!

"கேன் ஐ ஹெல்ப் யூ சார்?" என்ற போது முகுந்த் ஆச்சர்யத்தில் ஆழ்ந்திருந்தான். என்ன சுறுசுறுப்பு? என்ன சாமர்த்தியம்? எவ்வளவு திறமையாக வேலை செய்கிறாள் இந்தப் பெண்?...

விடுவிடுவென ஓபனிங் பார்மை கொடுத்து, பூர்த்தி செய்வதில் உதவி, மானேஜரிடம் அழைத்துச் சென்று... இருபது நிமிடங்கள் காத்திருந்தும் முடியாத காரியத்தை, இரண்டே நிமிடத்தில் முடித்தாள்.

இவன் "தேங்க்யூ மேம்" என்றதற்கு, அவள் 'வெல்கம்' என்று சிரித்தாள். எடுப்பாகத் தெரிந்த பல் வரிசை கண்டு, அவன் முகம் சுளிக்கவில்லை! மாறாக, காஷ் கவுண்டரில் அரட்டை, அடித்துக் கொண்டிருந்த 'அழகி'யைக் கண்டுதான் கடுப்பாகினான்.

ஆபீஸ் திரும்பியபோது மனசும் தெளிந்திருந்தது. தான் தேர்வு செய்திருந்த பெண்களுக்கே இண்டர்வியு கார்டு அனுப்ப ஃபைலைத் திறந்தான். அங்கே சுஷ்மிதாவும் ஐஸ்வர்யாவும் இவனைப் பார்த்துச் சிரித்தார்கள்... 'எண்பத்தாறு அழகிகளிடையே நாங்கள் வெற்றி பெற்றது வெறும் தோற்றத்துக்காக மட்டுமா?' என்று கேட்கிறார்களோ?



டீ.வி.ஊழியர்: எதிரொலிக்குக் கடிதம் எழுதிய இந்த ரசிகர் கிண்டல் பேர்வழி போலிருக்கு சார்!

டைரக்டர்: எப்படி சொல்றீங்க?

டீ.வி.ஊழியர்: 'வெதர் ரிப்போர்ட் ரொம்பப் பிரமாதம். அடிக்கடி ஒளி பரப்புங்க'னு எழுதியிருக்கார்!

—எஸ்.முகம்மது யூசுப்

45 மணிக்கொடி

ஜோதிர்லதா கிரிஜா

ஓர் ஆள் இல்லாத நேரத்தில் அவரது பெட்டியையோ பையையோ குடைந்து உள்ளே என்ன இருக்கிறது என்று ஆராய்வது அநாகரிகமே என்றாலும், தன் சொந்த மகளின் விஷயத்தில் நாகரிகத்தை மீறும் முடிவுக்கு அமராவதி வந்தாள். பவித்ரா கல்லூரிக்குப் போயிருந்த வேளையில் - பிற்பகலில் அஞ்சனா குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்த போது, அவள் மகளின் அறையைச் சோதிக்கலானாள். கடைசியில் அவள் தேடியது கிடைத்து விட்டது.

அவள் துணிகள் வைக்கும் டிரங்குப் பெட்டியிலிருந்து அது கிடைத்தது.

'அன்புள்ள பவித்ரா,

எவ்வளவு மனச்சுமையுடனும் தாங்க முடியாத துயரத்துடனும் இக் கடிதத்தை நான் எழுதுகிறேன் என்பதை நீ அறிய மாட்டாய். நேரில் உன்னிடம் இது பற்றி விரிவாகச் சொல்ல நினைத்தும் உன்னைப் பார்த்ததும் எனக்கு வாயடைத்துத்தான் போய் விட்டது.

பவித்ரா எனது காதலை உன்னிடம் நான் வெளியிட்ட மூன்றாவது நாளே இப்படி ஒரு கடிதத்தை எழுதும் துர்ப்பாக்கியத்துக்கு ஆளாவேன் என்று நான் நினைக்கவேயில்லை.

வாஞ்சிநாதனைப் பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாய்தானே? அவர் ஓர் இளம் மனைவியை வாழ முடியாதவளாக விட்டு விட்டு இறந்து போன அவலம் குறித்து நான் நேற்று வரையில் சிந்தித்தே பார்க்கவில்லை. அதற்காக நான் மிகவும் வெட்கமும் வேதனையும் படுகிறேன். அந்தப் பெண் தன் கணவனுடன் ஒரு நாள் கூடச் சேர்ந்து வாழ்ந்ததாய்த் தெரியவில்லை என்று பேச்சுவாக்கில் என் அப்பா சொன்ன போது, எனக்குச் சுருக்கென்றது. மகாத்மா காந்தி விதவைகளின் திருமணம் குறித்து எவ்வளவு தான் எழுதியும் பேசியும் வந்தாலும் நம் ஜனங்கள் அவ்வளவு இலேசில் மாற மாட்டார்கள் என்பது உனக்குத் தெரியும். சுதந்திரப் போராட்டக் களத்தில் குதிக்கப் போகும் எனக்கு, நாளைக்கு ஏதேனும் நேர்ந்தால் உனது நிலை என்ன என்பதை நினைத்துப் பார்த்ததுமே என் மனம் அதிர்ந்தது.

அப்போது நமக்குக் கல்யாணம் ஆகி விட்டிருந்தால், உனது நிலை மிக மோசமானதாக இருக்கும். இதில் எனக்குச் சம்மதமில்லை.

என் பவித்ரா இளவயதிலேயே விதவையாகி, அவளை மணக்க எவனும் முன்வராத நிலையில், தனிமையில் வாடிச் சீரழிந்து போவதை என்னால் கற்பனை கூடச் செய்ய முடியாது. எனவே உன் மீதுள்ள காதலை நசுக்கி விடுவது எனும் தவிர்க்க முடியாத தீர்மானத்துக்கு நான் வந்து விட்டேன்.

சிறு வயதுப் பிணைப்பைத் தவிர நாமிருவரும் மிக மிகத் தூய்மையானவர்கள். நமது பார்வைகள் கூடப் பரிசுத்தமானவையாகவே இது வரையில் இருந்து வந்துள்ளன. இனியும் இருக்கும். உலகத்தில் காதல் ஒன்றுதான் ஆண் - பெண் இடையே மலரக்கூடிய அன்பா என்ன? நான் அப்படி நினைக்கவில்லை. நல்ல நண்பர்களாக இருப்போம்.

பவித்ரா, அறிந்தோ அறியாமலோ நான் உன் உள்ளத்தில் ஏற்படுத்தி இருக்கக்கூடிய சலனங்களுக்காக என்னை அன்பு கூர்ந்து மன்னித்து விடு. காதல் முறிவைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே. நாட்டில் இன்று ஏராளமான பிரச்னைகள் உள்ளன. நமது காதல் அவற்றுக்கு முன்னே அற்பமானது. மிக மிகச் சிறியது. அதைப் பொருட்படுத்தாதிருக்க நாம் கற்க வேண்டும். அதற்குரிய மனப்பக்குவத்தை நாம் அடைய வேண்டும்.

'நானும்தானே நாட்டு விடுதலைப் போராட்டத்தில் குதிப்பதாக இருக்கிறேன்?' என்று நீ கேட்கக்கூடும். பெண்களின் நிலை சந்தர்ப்பங்களாலும் சூழ்நிலைகளாலும் மாறக்கூடியது. எங்கள் நிலை அப்படி இல்லை. ஒருவேளை மணவாழ்க்கைக்கு நீ உன் குடும்பத்தினரால் கட்டாயப்படுத்தப் படலாம். ' அப்போது நான் உனக்கு ஒரு பிரச்னையாவதை என்னால் தாங்க முடியாது. எனவே நமது பழைய நிலையை மறந்து விடு. இது உனது நன்மைக்காகவே...

என்றும் உன் அன்பு நண்பன், கங்கா...''

கடிதத்தை இரண்டாவது தடவை படித்து விட்டு, மடித்து முன்பு இருந்தபடியே வைத்து விட்டுப் பெட்டியை மூடிய அமராவதி, பெருமூச்சு விட்டபடி கூடத்துக்குப் போய்

அஞ்சனாவுக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

கங்கா புத்திசாலி என்று அவனுக்கு நிச்சயமாய்த் தோன்றிற்று. அதனால்தான் 'பெண்களின் நிலை சந்தர்ப்பங்களாலும் சூழ்நிலைகளாலும் மாறக்கூடியது' என்று இரத்தினச் சுருக்கமாய்ச் சொல்லி விட்டாள் தன் கடிதத்தில். 'என்னுடைய நிலை, அப்படித் தானே மாறிப் போயிற்று. யாரும் நிர்ப்பந்திக்கவில்லைதான். அப்பாவையும், அஞ்சனாவையும், என் வயிற்றில் வளர்ந்து வந்த குழந்தையையும் உத்தேசித்து நானாகவே தான், நான் மேற்கொள்ள நினைத்திருந்த வாழ்க்கையைக் கைவிட்டேன். வயிற்றில் வளர்ந்து வந்த கருவுக்கு முன்னால் வேறு எந்த இலக்கும் எடுபடாது போயிற்று. என்னதான் சமத்துவம் பேசினாலும், தமக்கென்று இயல்பாக உள்ள அதிகப்படியான பாச உணர்வாலும், பொறுப்பு உணர்வாலும் பெண், சிலவற்றை விட்டுக் கொடுக்கும்படி ஆகி விடுகிறது. உணர்ச்சிபூர்வமான அன்பு செலுத்துதல் என்ற நிலைக்கு முன்னால் வேறு எதுவும் பெண்ணைப் பொறுத்த மட்டில் அடித்துச் செல்லப்பட்டு விடுகிறது. அதனால்தான், தான் எடுத்துக் கொள்ள விரும்பும் உரிமைகளைப் பெரும்பாலும் அவள் விட்டுக் கொடுக்கவோ இழந்து விடவோ நேர்கிறது... இவ்வாறு காலங்காலமாக விட்டுக் கொடுத்து வந்துள்ள நிலையை அவளது கடமை என்று மற்றவர் நிர்ப்பந்திக்க நேர்ந்து விட்டது...' - தனது மனம் செய்யத் தொடங்கி விட்ட ஆராய்ச்சி குறித்து அவளே சிரித்துக் கொண்டாள்.

பெஜவாடா இரயில் நிலையத்தை ராமசாமியும் மணவாள நாயுடுவும் அடைந்த போது, அதிகாலை ஆறரை மணி ஆகியது. நிலையத் தலைவர் சத்தையாவை உடனேயே இருவரும் சந்தித்தார்கள். வண்டி கூடூரைத் தாண்டி விரைவு கொண்டதும், ரமணியுடன் பயணம் செய்து கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் அவனிடமிருந்த பணத்தைப் பிடுங்க முயன்றதாகவும் ரமணி அவர்களை எதிர்த்துப் போராடியதில் பலத்த காயமடைந்து விட்டதாகவும், ஒரு பாலத்தில் ரெயில் வேகம் குறைந்த போது, இரண்டு ரவுடிகளும் குதித்து ஓடி விட்டதாகவும் திக்பிரமை பிடித்துப் போனவன் போன்ற நிலையில் பெஜவாடா நிலையத்தில் ரெயில் நின்றதும் ரமணி சில பயணிகளால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதன் பிறகு தாம் அவனை மருத்துவ விடுதியில் சேர்த்ததாகவும் அவன் தன்னினைவு பெற்ற பின்னரே அவருக்குத் தகவல் தர முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார். தம் உதவியாளரிடம் பணியை ஒப்படைத்து விட்டு, அருகிலேயே இருந்த மருத்துவ விடுதிக்குச் சத்தையா இருவரையும் அழைத்துப் போனார். ராமசாமி அவரது கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீருடன் பன்முறை நன்றி சொன்னதை அவர் அடக்கத்துடன் ஏற்றார்.

வழியில், "இப்போது கொஞ்சம் பரவாயில்லையா, மிஸ்டர் சத்தையா?" என்று ராமசாமி விசாரித்தார்.

"எவ்வளவோ பரவாயில்லை. நீங்கள் இங்கேயே தங்கிச் சிகிச்சை செய்வதாக இருந்தாலும் சரி, அல்லது மெட்றாசுக்கு அழைத்துப் போனாலும் சரி. ஆனால் மெட்றாஸ் தான் நல்லது."

"இதுவரையில் நீங்கள் என் மகனுக்காக எவ்வளவு தொகை செலவு செய்திருக்கிறீர்கள்?"

சத்தையா புன்னகை புரிந்தார். "அவன் சேர்க்கப்பட்டிருப்பது சர்க்கார் ஆஸ்பத்திரி. செலவெல்லாம் அவர்களுடையதே. அவனை அங்கு வண்டியில் எடுத்துப் போனது, கடந்த ஒரு வாரமாகச் சாப்பாடு, அதாவது வீட்டிலிருந்து கஞ்சி அனுப்புவது போன்ற சின்னச் சின்ன உதவிகளையே செய்துள்ளேன். அதற்கு ஆன தொகை மிக மிக அற்பமானது. அது மனிதாபிமானமுள்ள எவரும் செய்திருக்கக்கூடியது. அதை நீங்கள் பெரிதுபடுத்தலாகாது, மிஸ்டர் ராமசாமி."

"தேங்க்யூ, மிஸ்டர் சத்தையா."

ராமசாமியைப் பார்த்ததும் ரமணி மெதுவாய்ப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். மிகவும் இளைத்தும் கறுத்தும்

''நம்ம தலைவர் வீர பாண்டிய கட்ட பொம்மன் படத்தை பல தடவை பார்த்திருப்பார் போலிருக்கு!''

''எப்படி சொல்றே?''

''ஒரு பதவி போட்டுத் தாங்க தலைவரே'னு கேட்டதுக்கு, எனக்கு கட்-அவுட் வைத்தாயா, காலில் விழுந்தாயா, பேப்பரில் விளம்பரம் கொடுத்தாயா'னு வசனம் பேசினாரே!''

– எஸ். முகம்மது யூசுப்



போயிருந்தான். முகத்தில் குற்ற உணர்வும் வெட்கமும் பெரிய அளவில் வெளிப்பட்டன. தன் படுக்கையை அணுகிக் கொண்டிருந்த அவரது முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு, அவன் கண்ணீர் விடத் தொடங்கினான். அவனது வலக்காலில் பலமான கட்டுப் போடப்பட்டிருந்தது.

ராமசாமி அவனுக்கு அருகே உட்கார்ந்து அவன் தோளில் கை போட்டுக் கொண்டார். மணவாள நாயுடு, ''அழாதேப்பா. ரமணி. உன்னோட ஆர்வம் அந்தக் காலத்துலயே எங்களுக்கு வந்திருந்தா இந்நேரம் இந்த நாடு சுதந்திரம் அடைஞ்சிருக்கும்...'' என்றார்.

''கால்ல பலமான அடியா?''

''ஆமாம்ப்பா. ரெண்டு பேரும் மாத்தி மாத்தி அடிச்சு நொறுக்கிட்டாங்க.''

''ஆமா, மிஸ்டர் ராமசாமி. குறைஞ்சது இன்னும் ஒரு மாசமாவது பெட்ல இருந்தாகணும். பெஜவாடாவை விட மெட்றாஸ் பெட்டர்னு நினைக்கிறேன். நான் வேனுக்கு ஏற்பாடு பண்ணிக் குடுத்துடறேன். நீங்க அவனை அங்கேயே கூட்டிண்டு போயிடலாம். உங்களுக்கும் நிம்மதியா இருக்கும்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே படுத்துக் கொண்ட ரமணி தன்னையும் அறியாது கண்ணயர்ந்தான்.

''தினமும் செடேடிவ் தர்றாங்க. அதான் பையன் தூங்கிட்டான்.''

''அவன் எதிர்ல உடனே விவரமா கேக்க வேண்டாம்னு இருந்தேன். கால் முறிவுன்னீங்களே? அப்ப...''

''ஆமா. இனி அவன் காலைச் சாச்சு சாச்சுத்தான் நடப்பான்னு டாக்டர் சொல்லிட்டார்.''

ராமசாமியின் கண்கள் நொடிக்கும் குறைவான நேரத்துள் நிறைந்து விட்டன.

''டேக் இட் ஈஸி, ஈஸி. என்ன பண்ண முடியும், மிஸ்டர் ராமசாமி? ஏதோ இந்த மட்டும் தப்பினானே உங்க பிள்ளை? அதை நினைச்சு சந்தோஷப்படுங்கோ. ரெயில் மேலருந்து உருட்டித் தள்ளி இருந்தாங்கன்னா? இல்லே, மண்டையில அடிச்சு, மூளை கலங்கி இருந்தா? அதுக்கெல்லாம் இது எவ்வளவோ பரவாயில்லேல்லே? அப்படி நெனச்சுத்தான் நாம ஆறுதல் அடையணும்.''

ஞானம் மிக்க சத்தையாவின் மொழிகள் அந்த நேரத்தில் ராமசாமியின் துயரத்தைக் கணிசமான அளவுக்குக் குறைக்கவே செய்தன. இருப்பினும், 'சுதந்திரப் போராட்டத்துல ஈடுபடப் போறேனாக்கும், சூர்யாசென்னோட படையில சேரப் போறேனாக்கும்னெல்லாம் சொல்லிட்டிருந்த பையனுக்கு இனி அதைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது பெரிய துரதிருஷ்டந்தான்...' எனும் எண்ணம் வரவே செய்தது.

''இன்னிக்கு நீங்க ரெண்டு பேரும் நம்ம வீட்லயே தங்கலாம். இங்கேயே என்னோட குவார்ட்டர்ஸ் இருக்கு. வசதியானது. கூச்சப்படாம தங்கணும்...'' என்றவாறு சத்தையா இருவர் தோள்கள் மீதும் கைவைத்தார்.

மறுநாளே சத்தையா ஏற்பாடு செய்து கொடுத்த வேனில் ரமணியுடன் ராம



சாமியும் மணவாளநாயுடுவும் புறப்பட்டார்கள்.

46

ரமணியின் முறிந்த கால் உட்காயம் ஆறவும், எலும்பு ஒட்டவும் சரியாக இரண்டு மாதங்கள் போலாயின. ஒரு கால் குட்டையாகிப் போனதில் அவனால் விரைவாக நடக்கக்கூட முடியாமல் போயிற்று. அந்த ஆண்டு அவனது படிப்பும் தடைப்பட்டு விட்டது.

ஒருநாள் காலையில் கங்கா அவனுக்குக் காப்பி எடுத்து வந்து கொடுத்து விட்டு, அவனுக்கு எதிரே தானும் கையில் காப்பியுடன் உட்கார்ந்து, ''என்ன, ரமணி? எப்படி இருக்கே? கால் இப்ப முழுக்க முழுக்கவே சரியாயிடுத்து இல்லியா?'' என்று கேட்ட போது, அவன் கசப்புடன் வாய் விட்டுச் சிரித்தான்.

''நடக்க முடியறது. ஆனா ஓட முடியாதே. வெள்ளைக்காரனை விரட்றதுக்கும் ஓட முடியாது, அவன் துரத்தினா தப்பிக்கிறதுக்கும் ஓட முடியாது. அதை நினைச்சுட்டாத்தான் ஒரு மாதிரியா இருக்கு'' இவ்வாறு சொல்லி விட்டு ரமணி கடகடவென்று சிரித்த போது, கங்காவுக்குப் பாவமாக இருந்தது.

அப்போது அங்கு வந்த விசாலம் ''எப்பவும் அந்த வெள்ளைக்காரன் ஞாபகந்தானா? விட்டுத் தள்ளு. நீ ஒருத்தன்தான் இந்த தேசத்துல வீரனா? வேற எத்தனையோ பேரு இருக்கா. அவா பாத்துப்பா'' என்றாள்.

''ஓடியாடக் கால் இல்லாம இப்ப நான் நொண்டியாயிட்டதால இனிமே கட்டாயமா நான் காந்தி வழியிலதான் போயாகணும். வேற வழியே இல்லே.''

''வேணாம், வேணாம். பேசாம படிச்சுட்டு ஒரு நல்ல வேலையாத் தேடிண்டு, ஆத்துக்கு அடங்கின பிள்ளையா இருடா. அது போறும். காந்தி வழியில வெள்ளைக்காரனோட சண்டை போட்றதுல மட்டும் ஆபத்து இருக்காதா என்ன? அதுலயும்தான் ஆபத்து இருக்கும்.''

ரமணி பதில் சொல்லாவிட்டாலும் கங்காவைப் பார்த்துச் சிரித்தான்.

''அவன் கேக்க மாட்டான், அத்தே!'' சிரிக்கிறான் பாரு.''

''எல்லாம் எனக்குத் தெரியுண்டா. அண்ணனுந் தம்பியும் கூட்டு. உங்க ரெண்டு பேருக்கும் சாது மாதிரி தெரியற உங்கப்பா தான் குரு. எல்லாம் தெரிஞ்சுதான் இருக்கு எனக்கு.'' - விசாலத்துக்குத் தொண்டை அடைத்தது. உதடுகள் துடிக்க அவள் அங்கிருந்து போய் விட்டாள்.

ரமணியின் முகத்தில் இருந்த குறும்புச் சிரிப்பு மறைந்து, அதில் ஒரு தீவிரம் குடி கொண்டது.

கங்கா இப்போதெல்லாம் பவித்ராவின் வீட்டுக்குப் போவதில்லை. கல்லூரியில் மட்டும் வழக்கம் போல் சந்தித்த போது பேசிக் கொண்டார்கள். பேச்சில் இருந்த பழைய மலர்ச்சியும் துள்ளலும் அடியோடு காணாமற்போய் விட்டிருந்தன. கடனுக்காகவும் பழகி விட்ட குற்றத்துக்காகவும் பேசிக் கொள்ளுகிற நிர்ப்பந்தப் பேச்சாகவே அது இருந்தது.

கங்காவுக்குத்தான் குற்ற உணர்வு அதிகமாக இருந்தது. தனது கடிதத்துக்குப் பவித்ரா எழுதிக் கொடுத்த பதில் கடிதம் அடிக்கடி அவனால் படிக்கப்பட்டு அவனுக்கு மனப்பாடமே ஆகி விட்டது என்றாலும் வீட்டில் ஓய்வாக இருக்கும்போதெல்லாம் நாளுக்கு ஒரு தரமாகிலும் அதை எடுத்துப் படித்து விடுவதை அவன் தனது வழக்கமாகக் கொண்டு விட்டான்.

அன்புள்ள கங்கா,

உங்கள் கடிதத்தைப் படித்தேன். மூன்று தடவை படித்தேன். உங்கள் கோணத்திலிருந்து நீங்கள் சரியான முடிவுக்கே வந்திருப்பதாய் உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் நீங்கள் எழுதியுள்ள விஷயங்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

காதல் எனும் உணர்வு அப்படியெல்லாம் இலேசில் அழிக்கக்கூடிய உணர்வு இல்லை



''பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் எனக்கும் ராசியில்லே?''

''எப்படி சொல்றீங்க?''

''போன பஞ்சாயத்துத் தேர்தல்லே நிற்கறதுக்கு எனக்கு வயசு போதாதுன்னு சொல்லிட்டாங்க... வர்ற பஞ்சாயத்துத் தேர்தல்லே நிற்கலாமான்னு கேட்டா... வயசான காலத்திலே நீங்க எதுக்கு நிற்கணுங்கறாங்களே?''

- எஸ். பொன்னுசாமி

என்பது உங்களுக்கே தெரியும். தெரிந்து கொண்டே அப்படி நீங்கள் எழுதி இருப்பதால் அதைப் படித்ததும் எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. உங்கள் மனத்துக்கே சம்மதம் இல்லாத ஒன்றை நீங்கள் எழுதும் போது, அந்த எழுத்தில் வலுவே இல்லாது போகிறது. எதற்காக இந்தப் பொய் வேடம்? உங்களை இழந்த பின் மறுமணம் செய்து கொள்ள நான் சம்மதிக்க வேண்டாமா? உங்களை மணம் செய்து கொண்டபின் விதவையாகி வாழ்வை இழப்பதற்கும், உங்களை மணம் செய்து கொள்ளாமலே பறிகொடுத்து வாழ்வை இழப்பதற்குமிடையே எந்த வித்தியாசமும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நீங்கள் என் மீது கவலை கொண்டு எழுதி இருப்பவையெல்லாம் நான் உங்கள் மேல் கவலைப்படுவதற்கான விஷயங்களும் கூட என்பதை எப்படி மறந்து போனீர்கள்? ஒருவேளை சுதந்திரப் போராட்டத்தில் குதித்தபின் எனது மரணம் முதலில் நேர்ந்தால், உங்கள் நிலையும் என்னுடையது போன்றதுதானே? நான் இறந்த பின் உங்களுக்கு என்ன நேருமோ அது எனக்கும் நேர்ந்து விட்டுப் போகட்டுமே.

சுதந்திரப் போர்க்களத்தில் குதித்த பின் நமக்குள் தொடர்பு என்பது அறவே விட்டுப் போகவும் கூடும். நீங்கள் ஒரு பக்கமும் நான் ஒரு பக்கமும் திசை தப்பிச் சிதறி வாழவும் நேரலாம். தெய்வாதீனமாக நம் வாழ்நாள் முடியுமுன் இந்தியா சுதந்திரம் பெற்றால், நாம் சந்திப்பது கைகூடலாம். அதுவரையில் நாம் காதலிக்கவே கூடாது என்று நமக்கு நாமே தடைவிதித்துக் கொள்ள வேண்டியதன் அவசியந்தான் என்ன?

உங்கள் கடிதம் என்னைப் பெரிதும் வருத்துகிறது. இனி இது போன்ற கடிதம் ஏதும் எனக்கு எழுத வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் என்னைக் காதலிப்பதைத் தொடர்வதோ நிறுத்துவதோ உங்கள் விருப்பம். ஆனால் என்னைத் தடை செய்ய நீங்கள் யார்? அது எனது சுதந்திரம்.

இப்படிக்கு, என்றும் உங்கள் பவித்ரா...

பவித்ராவின் கடிதத்தை எடுத்துப் படித்தபோதெல்லாம், 'என்னைத் தடை செய்ய நீங்கள் யார்? அது எனது சுதந்திரம்' எனும் வாக்கியங்களின் மீதே அவனது பார்வை திரும்பத் திரும்பப் பதிந்தது. கண்கள் பனித்தன. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, மறுபடியும் ஒரு நடை அவன் வீட்டுக்குப் போக வேண்டியதுதான் என்று அவன் முடிவு செய்தான்.

(தொடரும்)



பாட்ஷா

கொஞ்சம் நாயகன். கொஞ்சம் தளபதி. இங்கே தர்மதுரை. அங்கே ரிக்ஷாக்காரன். தொட்டுக் கொள்ள இந்து - முஸ்லீம் ஒற்றுமை. கட்டிக் கொள்ள நக்மா. விஸிலுக்கு, வீரம். விழி நிறைய, சென்ட்டிமெண்ட்.

ஆட்டோ டிரைவர் மாணிக்கத்தின் பூர்வாசிரமப் பெயர் பம்பாய் தாதா பாட்ஷா. அநீதியை ஒழிக்க அங்கே போர். அலட்சியப் பார்வை. அநாயாச ஸ்டைல். எக்கச்சக்க குண்டு வெடிப்புகளில் நாஸிக் விஷயம் தண்ணீராக்கப்பட்டிருக்கிறது.

வழக்கம் போல சாகும் தருவாயில் சத்தியம் வாங்கும் சினிமா அப்பா. வீரம் மிக்க பாட்ஷா சாந்த சொரூபி ஆவதும் தவிர்க்க முடியாமல் கிளைமாக்ஸில் மறுபடி வீரம் காட்டுவதும் சொச்சக் கதை.

தங்கைக்கு மெடிக்கல் காலேஜ் அட்மிஷன் வாங்க ரஜினி போகும் ஒரு சீனில் மட்டும் டைரக்டர் என்றொரு பிரகிருதியும் இருப்பது தெரிகிறது. மற்றபடி கே.பியின் சிஷ்யருக்கு, குரு பேரைக் காப்பாற்றும் ஐடியா இல்லை போல் இருக்கிறது.

அழகுப்புயல் நக்மாவுக்கு உடம்பு ஜோராக வளைகிறது. சகட்டு மேனிக்குக் கனவு கண்டு, ஆடித் தள்ளுகிறார். நடிப்பதற்கு இன்னும் கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்திருந்தால் ஒருவேளை சரக்கு புரிந்திருக்கும்.

பாராட்டுக்குரியவர்கள் இரண்டு பேர். எடிட்டர்களான கணேஷ் - குமார். இப்படியொரு பரிபூரண மசாலாவை அலுப்பூட்டாமல் தொகுத்த கரங்களுக்கு யார் தங்கக் காப்பு போடப் போகிறார்கள்?


நாலைந்து முறை திரும்பத் திரும்ப வருவதால் ஒரு பாடல் காதில் நிற்கிறது. ஒளிப்பதிவாளரின் சாமர்த்தியத்தால் ஒன்று கண்ணில் நிற்கிறது. மிச்சம், காற்றில் போகிறது.

ரஜினி என்ன பண்ணினாலும் ரசிக்கிற நிலைக்கு ரசிகர்கள் வந்து விட்டார்கள். இனிமேலாவது ஏன் சற்று மாறுபட்டு முயற்சி செய்யக் கூடாது?

- ஆர்.பி.ஆர்.

சந்தை







• அரங்கம் (நாவல்)/சுஜாதா விஜயராகவன்/வானதி பதிப்பகம், சென்னை - 17 /விலை ரூ. 55/-

மரபு சார்ந்து, ஆத்மார்த்தமாக எழுதப்பட்ட நாவல். கௌரவமான எழுத்து.

• முற்பகல் செயின் பிற்பகல் விலங்கு/நாவல்/ப்ரியா கல்யாணராமன்/மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17 / ரூ. 32/-.

விறுவிறுப்பான கதையோட்டம் கொண்ட மாச நாவல் வகையைச் சேர்ந்த நெடுங் கதை.

• வன்னியூர் பொன்னன்/கவிதை நாடகம்/கோனூர் பெருமாள்/என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை - 98 / ரூ. 20/-.

காடு வளர்ப்பு, தமிழ் வளர்ச்சி, நீதி போதனை நிறைந்த பிரசாரக் கவிதை நாடக முயற்சி. கவிதை நடையில் எளிமை கூடுதலாக இருந்திருக்கலாம்.

• உறவின் எல்லை/ மொழி பெயர்ப்பு/தகழி சிவசங்கர பிள்ளை/கங்கை புத்தக நிலையம், சென்னை - 17 / ரூ. 36/-.

'மனைவி மக்களோடோ, நண்பர்களுடனோ மட்டும் அடங்குவதில்லை; இன்னும் விரிந்த மனித நேய உணர்வுகளுக்கும் உட்பட்டது உறவின் எல்லை' என்பதைச் சுவைபடக்காட்டும் நாவல். மொழி பெயர்த்தவர் பாராட்டுக்குரியவர்.

• பத்மாவதி சரித்திரம்/நாவல்/அ. மாதவையா/என்.சி.பி.எச். (ரூ. 40/-), 41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை - 98 மற்றும் இமயப் பதிப்பக வெளியீடு, 8, நீலா தெற்கு வீதி, நாகை - 1/(ரூ. 45/-)

தொடக்க காலத் தமிழ் நாவல்களில் முக்கியமானதாகக் கருதப்படும் நாவல். சுவாரஸ்யமான கதையமைப்பு. மறு பிரசுரம் கண்டிருப்பது தமிழர்களின் அதிர்ஷ்டம்.

தமிழர்களின் அதிர்ஷ்டம்

• கம்ப ராமாயணம் - பாலகாண்டம்/தெளிவுரை/கோ. வில்வபதி/பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14 / ரூ. 140/-.

தெளிவுரை, இலக்கணக் குறிப்பு, பிற ஆசிரியர்களுடன் ஒப்பீடு எனப் பல தளங்களில் இயங்கும் ஆய்வு நூல். உபயோகமான முயற்சி.

• சீதையைத் தேடிய ராமன்/செ. ஏழுமலை/சாந்தி பப்ளிகேஷன்ஸ், சென்னை - 34/ ரூ. 28/-.

எளிய புதுக்கவிதை வடிவில் ராமாயணக் கதை. குழந்தைகளுக்குப் படிக்கத் தரலாம்.

• வாழ்க்கை உங்கள் வசப்படும்/பி.சி. கணேசன்/கங்கை புத்தக நிலையம், சென்னை - 600 017 / ரூ. 22/-.

சுய முன்னேற்றக் கட்டுரை நூல். முழுவதும் பல அறிஞர்களின் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

• உள்ளக் கடலின் உணர்வலைகள்/பூவை அமுதன்/கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை - 17 / ரூ. 18/-.

மரபு + புதுக்கவிதைகளின் தொகுப்பு. அட்டை மிக நன்றாக உள்ளது.

● எல். எம். அபிநாட்சயா, மதுரை.

? 'இவ்வாண்டு பிப்ரவரியில் அமாவாசையே வராதது நாட்டுக்கு நல்லதில்லை' என்கிறார்களே?

! மார்ச்சில் இரண்டு அமாவாசை வருதே; அது இரட்டிப்பு நல்லதா?

● சூரியநிலா, சேலம்.

? 'தமிழன் யாரையும் தாழ்த்த மாட்டான்; தலைதாழ்ந்தும் விட மாட்டான்' என நெடுஞ்செழியன் பேசியது குறித்துத் தங்கள் கருத்து...?

! 'அ.இ.அ.தி.மு.க. நீங்கலாக' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டிருப்பார்!

● எம். முருகேசன், ராமேஸ்வரம்.

? சமீபத்தில் எந்த பத்திரிகைச் செய்தியைப் படித்து வாய் விட்டுச் சிரித்தீர்கள்?

! முதல்வர் ஆசியுடன் மயிலை தெப்பத் திருவிழா நடக்கிறது என்ற விளம்பரச் செய்தி.

● கனகராஜ், திருச்சி.

? வாழப்பாடியை நீக்கிவிட்டுக் குமரி அனந்தனை நியமித்தது?

! அர்ஜுன்சிங் மீது நடவடிக்கை எடுக்க ஆயிரம் யோசனை பண்ண வேண்டியிருக்கிறது. 'ராவ் ஒரு தொடை நடுங்கி' என்ற கருத்து பரவாமலும் தடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் வாழப்பாடியைச் சுலபமாக இறக்கி விட்டு 'ஆக்ஷன் கிங்' என்று காண்பித்துக் கொண்டாயிற்று! புதிதாக நியமிக்கப்பட்ட அனந்தன், உம்ம்... அனந்த கோடி கோஷ்டிகளுக்கிடையில் என்ன சாதிக்க முடியும்? பரபரப்பான அறிக்கைகளுக்குக் கூட இனி பஞ்சம்தான்.

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? குமரி அனந்தன் சொத்துக் கணக்கு வெளியிட்டிருக்கிறாரே?

! நல்ல முன்னுதாரணம்தான். ஆனால் அவர் செய்து என்ன பிரயோஜனம்? அவரது வணக்கத்துக்குரிய தலைவர் ராவ் செய்வாரா? அல்லது அவரை எதிர்த்துக் கொண்டிருக்கும் அர்ஜுனர் செய்வாரா? அல்லது இவர்கள் வளைத்துப் போட விரும்பும் ஜெ.தான் செய்வாரா?

● லவ்லி பாலகிருஷ்ணன், மதுரை.

? 'அரசியல்வாதிகள் பொய் பேசும் போது மைக் தானாகவே வெடித்து முகம் சிதற வேண்டும்' என்று நடிகர் நாகேஷ் கூறுகிறாரே?

! பாவம், மைக் செட்காரர்கள்! ஒரு மைக் கூடத் தப்பாது; அடியோடு அம்போதான்!

குமரி அனந்தன் சொத்துக் கணக்கு கொடுத்திருக்கிறாரே?

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? கல்கிக்கும் ராஜேஷ்குமாருக்கும் கடந்த நான்கு ஆண்டுகளாக மனத்தாங்கல் இருந்ததாக கல்லூரி மங்கன் அம்பலப்படுத்தியிருப்பது...?

! கல்லூரிமங்கன் என்றால் என்ன அர்த்தம் என்று அகராதி அம்பலப்படுத்தும் போது, அபத்தங்களை எதிர்பார்க்கத்தானே வேண்டும்!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? தராசார் ஆத்திலே பொங்கல் பொங்கித்தா?

! நம்மூட்லதானுங்களே, படா சோக்கா ஆச்சுங்க. மயதானுங்க பேஜார் படுத்திடுச்சு. அதனால எங்கிட்டும் போக முடியாம டிவி பார்த்துப் பார்த்து கண்ணும் பொங்கிப் பூடுச்சு, வாத்யாரே!


● எஸ். குமார், காரைக்குடி.

? அரசியல் நாகரிகம் தற்போது யாரிடம் உள்ளது?

! யாரிடமும் இல்லை; வாழப்பாடியிடம்



• அடியோடு இல்லை!



• சிறந்த மனிதர்



• மனத்தாங்கல்?

அடியோடு இல்லை என்பதை சன் டீவி பேட்டி நிரூபித்தது.

● **எஸ். கே. மூர்த்தி, கும்பகோணம்.**

? ***பிரேமானந்தாவுக்குத் தண்டனை உறுதி தானே?***

! மழுப்பி, மறக்கடித்து, மூடி விடுவார்கள் என்று நம்புதற்குரிய வட்டாரங்கள் சொல்கின்றன. முன் உதாரணங்கள் அதை நம்பச் செய்கின்றன!

● **ஏ. ஜி. கல்யாணசுந்தரம், மணியக்காரன் பாளையம்.**

? ***1994-ன் சிறந்த மனிதர் என்று யாரைக் குறிப்பிடுவீர்கள்?***

! நெல்சன் மண்டேலா! "எங்களுடைய வெற்றியில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என்று கருதுகிறோம்" என்று பேசிய பெருந்தன்மை நெஞ்சை நெகிழ்த்துகிறது.

● **ரா. நாச்சிமுத்து, போடிநாயக்கனூர்.**

? ***இலங்கை அதிபர் சந்திரிகா, விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தத்தை அமல்படுத்தியிருக்கிறாரே?***

! பேச்சு வார்த்தைகளில் இதுவரை முன்னேற்றமில்லை என்பதுதான் கவலை அளிக்கிறது; மகிழ்ச்சியைக் கணிசமாகக் குறைக்கிறது.

● **ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.**

? ***"உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ் அறிஞர்களை வெளியேற்றியது முற்றிலும் மத்திய அரசின் நடவடிக்கையே" என்று தலைமைச் செயலர் நியாயம் பேசுவது...?***

! நழுவல் வேலை. அழைக்கப்படுகிறவர்கள் பட்டியல் பல மாதங்கள் முன்னதாகவே தயாராகி, மத்திய அரசின் ஒப்புதலும் பெறப்பட்டிருக்க வேண்டும். - குறிப்பாக அயல்நாட்டவரைப் பொறுத்தமட்டில் - சிறப்பாக ஈழத் தமிழர் சம்பந்தப்பட்டவரையில்.

● **சீதாமகன், மதுரை.** ❑

? ***இத்தனை நாட்களாக இல்லாமல் இப்போது திடீரென எம்.ஜி.ஆர். அறக்கட்டளையை ஜெ தொடங்கக் காரணம்?***

! வேறென்ன, திருநாவுக்கரசின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளத்தான்.

● **இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.**

? ***நடந்து முடிந்த சங்கீத சீசனில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான சிறப்பு அம்சம் ஏதும் உண்டா?***

! இளமையின் ஆக்கிரமிப்பு என்பதற்கு ஒரு நீண்ட பட்டியலே தரலாம். அபார ஞானம், அசுர சாதகம், அனுசரணையான குரல் வளம், ஆக மொத்தம் அசாத்திய கானம்! கூட்டத்துக்கும் பஞ்சமில்லை. மாலை நேரக் கச்சேரிகளுக்குக் கூட டிக்கெட் வாங்கிக் கொண்டே வந்தார்கள்!

● **இரா. சக்திவேல், பரமத்தி வேலூர்.**

? ***தொலைக்காட்சியில் "பக்த மீரா" பார்த்தீர்களா?***

! இப்போது டீவியில் அடிக்கடி தொண்டை அடைக்க மென்று முழுங்கியபடி பார்த்தேன். இளம் வயதில் சாகர் தியேட்டரில் கண்கலங்க 18 தடவை பார்த்தேன். அதற்கு முன் நியூட்டோன் ஸ்டுடியோவில் ஷூட்டிங்கின் போது டங்கன் டைராக்ஷனையும்,



• தமிழகத்தின் விழா...

ஜித்தன்பானர்ஜி காமிரா கையாள்வதையும் தின்ஷா ஒலிப்பதிவையும் கண்டு வியந்தேன். அதற்கும் முன்பாக கல்கியும் சதாசிவமும் (எடிட்டிங் ஸ்ரீபாத சங்கர், டைரக்டர் டங்கன், சில சமயம் டி.கே.சி. ஆகியோர் உடனிருக்க) கதை- வசனம் படிப்படியாக வளர்ப்பதைக் கண்டு பிரமித்திருக்கிறேன். அ.ஒ.பொ.கா.!

● **சாலாரி, தஞ்சை.**

? ***தமிழ் மாநாடு முதலும் கோணல்? முடிவும் கோணல்? - விவரிக்க!***

! எல்லாவற்றையும் அரசாங்கமே செய்ய வேண்டும் என்று எண்ணியது முதல் கோணல். அண்ணாதுரை எப்படி நடத்தினார்? தமிழின் பெருமை விளக்கும் ஊர்வலத்துக்கு அலங்கார ஊர்திகள் செய்யும் பொறுப்பை ஜெமினி வாசனிடம் விட்டார். தமிழறிஞர்களுக்கு விருந்துபசாரம் செய்யும் பொறுப்பை கல்கி அதிபர் சதாசிவம் உள்பட, பலரிடம் ஒப்படைத்தார். கல்கி தோட்டத்தில் நடந்த விருந்தின் போது ராஜாஜியையும் சந்தித்து அளவளாவும் பெருமை பெற்றனர். "இது அரசு விழா அல்ல; தமிழகத்தின் தமிழ் விழா" என்பதை அண்ணா மறக்கவேயில்லை. முடிவான கோணல், பிரதமரின் பேச்சை மொழிபெயர்ப்பதில் ஏற்பட்ட குளறுபடிதான். குழந்தைசாமி என்னதான் சமாதானம் சொன்னாலும் குழப்பம் குழப்பமே!



• மைக் வெடித்து....

❑ ரூ 25 பரிசு பெறுபவர் : சீதா மகன், 26, ஜவகர் 5-வது தெரு, மதுரை - 16.

சுவர்

பேப்பரின் தலைப்புச் செய்தியை மேய்ந்து விட்டு, கடைக்கு எதிரே ஆற்றை ஒட்டியிருந்த சுவரை ஆர்வமாய்ப் பார்த்தேன்.

பொங்கலுக்கு வெளியாகவிருந்த ஒரு சினிமாவின் விளம்பரத்தை, கலர் பெயின்டினால் எழுதி, ஜிகினா வேலைப்பாடுகள் செய்து அசத்தி இருந்தார்கள். சாலையைக் கடப்பவர்கள், பளிச்சென்று கண்களில் அடிக்கும் இந்த விளம்பரத்தைப் பார்க்காமல் செல்ல முடியாது. நேற்று மாலையே விளம்பரம் எழுத ஆரம்பித்து விட்டார்கள்.

எப்போதும் அந்த சுவர் பிஸி. ஒரு விளம்பரம் எழுதி அது காலாவதியாகும் நேரத்தில் அடுத்த விளம்பரத்துக்கு ரிசர்வ் செய்து விடுவார்கள். திரும்பத் திரும்ப சுவரின் மேல் வெள்ளை அடித்து, அதன் தடிமனைக் கூட்டியிருந்தார்கள். சுவரைச் சுரண்டிப் பார்த்தால் பற்பல பொதுக் கூட்டங்களும் கடந்த ஆறு பொதுத் தேர்தல்களும் தோன்றிய வேகத்தில் மறைந்த அரசியல் கட்சிகளும் உடைந்த கட்சிகளும் இன்னும் சில அரசியல் அசிங்கங்களும் தெரியலாம்.

அவ்வப்போது ரசிகர் மன்றத்தினரும், அரசியல் கட்சியினரும் போக்குவரத்து மிகுந்த அந்த சாலையில் விளக்குக் கொளுத்தி வைத்துக் கொண்டு, இரவு முழுக்க எழுதுவதை ஆர்வமாய் வேடிக்கை பார்ப்பேன்.

ஆனால், சமீபத்தில் இப்படி பளபளப்பாக கலரில் விளம்பரத்தை யாரும் எழுதவில்லை. தங்கள் அபிமான நடிகரை அந்த ஓவியர் தத்ரூபமாகக் கொண்டு வரும் முயற்சியில், கிட்டத்தட்ட வெற்றி பெற்றிருந்தார். சிலுப்பிக் கொண்டு நிற்கும் தலைமுடியைக் கூட அழகாக வரைந்திருந்தார்.

சுவரிலிருந்து பார்வையை விலக்கி, வியாபாரத்தில் தீவிரமாய் இருந்த நேரம்... சங்கரலிங்கம் அவசரமாய்க் கடையின் படியேறினான். முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, ஓடிக் கொண்டிருந்த டேபிள் ஃபேனைத் திருப்பி வைத்துக் கொண்டு, சட்டை பட்டனை கழற்றி விட்டுக் கொண்டான்.

"என்னடா...? ஏன் இப்படி படபடப்பா இருக்கே...?" என்றேன்.

"தெரியாத்தனமான ஒரு வம்புல மாட்டிக்கிட்டண்டா..."

நான் அமைதியாக இருந்தேன்.

"என் ஏரியாவுல அநியாயத்துக்குச் சாராயம் வியாபாரம் நடக்குதுடா. இருட்டின வேளையில ரோட்டுல போகவே முடியல. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். முந்தாநாள் என் பொண்ணு ஸ்கூல்லேர்ந்து வர்றப்ப, தண்ணி அடிச்சிட்டு எவனோ அவளைப் பார்த்து அசிங்கமா கமெண்ட் பண்ணியிருக்காண்டா! பொறுக்க முடியாமதான், நேத்தி சாராய வியாபாரத்தைப் பத்தி எல்லாருக்கும் பெட்டிஷன் போட்டேன். ராத்திரி பதினோரு மணி இருக்கும், சாத்தையன் ஆளுங்களோட என் வீட்டுக்கு வந்து தகராறு பண்றாண்டா!"

திடுக்கிட்டு அவனைப் பார்த்தேன். சாத்தையன் ஒரு அரசியல் ரௌடி. சட்டக் கல்லூரிக்குப் போகாமலேயே, சட்டம் படிக்காமலேயே, சில பல சட்டங்களை இயற்றி அமுல்படுத்தியிருந்தான். எங்கும் சாராயம் என்பது அவனின் சட்டத்தின் முக்கிய ஷரத்து!

"அப்புறம் என்ன பண்ணின...?"

"நான் வீட்டை விட்டு வெளியே வரல... கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கிட்டு உள்ளேயே இருந்திட்டேன். சோடா பாட்டிலால வாசல் விளக்கையெல்லாம் உடைச்சிட்டாங்கடா. எனக்குப் பயமா இருக்கு. நான் வீட்டுல இல்லாதப்ப என் பொண்ணுகிட்ட, என் பொண்டாட்டிகிட்ட ஏதாச்சும் வம்பு பண்ணுவாங்களோன்னு பயமா இருக்குடா!" என்றான் தழுதழுத்த குரலில்.

"யாரு ஒன்ன பெட்டிஷன் எழுதச் சொன்னா...? ஏண்டா இந்த வீண் வம்பு...?"

திருவாரூர் பாபு

என்றேன் எரிச்சலாய்.

"வேற என்ன பண்ணச் சொல்ற...? வயசுக்கு வந்த பொண்ணை வீட்ல வச்சுகிட்டு எப்படி இத சகிச்சிகிட்டுப் போறது...? வேறு வழியில்லாமதான் எழுதினேன்."

"இப்ப என்ன பண்ணப் போறே...?"

''போலீஸ் ஸ்டேஷன் போயி கம்ப்ளெயின்ட் கொடுக்கலாம்னு இருக்கேன்."

"அது அவுங்க ஆத்திரத்தை இன்னும் அதிகமாக்கும்!"

"அவுங்க மேல நடவடிக்கை எடுக்கச் சொல்லி கம்ப்ளெயிண்ட் கொடுக்கலடா. என் ஃபாமிலிக்குப் பாதுகாப்புக் கேட்கப் போறேன். கொஞ்சம் பரபரப்பு அடங்கற வரைக்குமாவது பாதுகாப்பு வேணும்டா?"

"பாதுகாப்புத் தருவாங்கன்னு நினைக்கிற...?"

"தர்றாங்களோ இல்லையோ, அவுங்க கவனத்துக்குக் கொண்டு போறது நல்லது தாண்டா!"



"சரி. அப்ப ஒன் இஷ்டப்படியே செய்யி."

"ஸ்டேஷனுக்கு நீயும் வாடா..."

"நானா...? வேணாம்டா..." என்றேன். தயக்கமாய். சங்கரலிங்கம் மேலும் மேலும் என்னை வற்புறுத்த, இருவருமாகப் போலீஸ் ஸ்டேஷன் சென்றோம்.

சப்-இன்ஸ்பெக்டர் எங்களை மேலும் கீழுமாகப் பார்த்தார். கொடுத்த கம்ப்ளெயின்டைப் படித்தார்.

"தனி மனுஷனுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுக்கிறது சிரமமான காரியம் ஸார்'' என்றார் சிறிது நேரம் கழித்து.

"என் குடும்பத்துல எல்லாருக்கும் கொலை மிரட்டல் இருக்கு ஸார். ராத்திரி நேரத்துல பயமா இருக்கு ஸார்.." என்றான் சங்கரலிங்கம் தயக்கமாய்.

"அதுக்குன்னு... உங்க வீட்டுக்கு கான்ஸ்டபிள் போட முடியுமா...? பஸ் ஸ்டாண்ட் பாராவுக்கே ஆள் இல்லாம இருக்கோம்..."

"அப்ப சம்பந்தப்பட்ட ஆளுங்க மேலயாவது நடவடிக்கை எடுங்க!"

"அதப் பத்தி கம்ப்ளெயிண்ட்ல ஒண்ணும் இல்லையே. யார் யாருன்னு எழுதிக் கொடுங்க. பார்ப்போம்" என்றார்.

"ஸார்... வீட்டுல வயசுக்கு வந்த ஒரு பொண்ணு இருக்கு. இவன் ஒய்ஃப் இருக்காங்க. ராத்திரி நேரத்துல வீட்டுக்கு வந்து சோடா பாட்டில் வீசிட்டுப் போயிருக்காங்க. நேத்தி முன்னெச்சரிக்கையா கதவைத் தாழ்ப்பாள் போட்டுட்டதால தப்பிச்சிட்டான். கொஞ்சம் அஜாக்கிரதையா இருந்திருந்தா வீட்டுக்குள்ள புகுந்து இவனைத் தாக்கியிருக்கலாம். உயிருக்கே கூட ஆபத்து ஏற்படுத்தி இருக்கலாம்..." என்றேன் நான் இடைமறித்து.

"அதுக்குதான் ஸார்.. இத மாதிரி ஆளுங்ககிட்டயெல்லாம் ஜாக்கிரதையா இருக்கணும்..."

"அப்ப நாங்க பெட்டிஷன் போட்டது தப்பு. அவுங்க வீடு புகுந்து மிரட்டறது சரிங்கறீங்களா...?'' என்றேன் கொஞ்சம் குரல் உயர்த்தி.

"ஸார் யாரு...?"

"என் ஃபிரெண்டுதான் ஸார்."

"ஸார்... ஊருல உள்ளவங்க எல்லாம்

'எங்களுக்குப் பாதுகாப்பு வேணும்'னு கேட்டா, எங்களால கொடுக்க முடியுமா...? எல்லாருக்கும் ஏதாச்சும் பிரச்னை வந்துகிட்டுத்தான் இருக்கு. போலீஸ்காரங்களால எல்லாரையும் பாதுகாக்க முடியுமா...? வாரம் ஒரு தடவை மந்திரி வர்றாரு. அவர் கூட போறதுக்குத்தான் எங்களுக்கு நேரம் சரியா இருக்கு. இதுல எவனோ ஒருத்தன் என்னை மிரட்டறான். பாதுகாப்புக் கொடுங்கன்னா நாங்க என்ன பண்றது...?'' என்றார் அலுப்பாய்.

"பாதுகாப்புக் கொடுக்கறது போலீஸோட கடமை இல்லையா ஸார்?"

"நீங்க கேட்கிறது சரிதான் ஸார். ஆனா எங்களால அதையெல்லாம் செய்ய முடியாது. வேணும்னா யார் உங்க வீட்டுக்கு வந்தாங்க, லைட்டையெல்லாம் உடைச்சாங்கன்னு எழுதிக் கொடுங்க. நடவடிக்கை எடுக்கறேன்...'' என்றவர் மேற்கொண்டு பேச விருப்பமில்லாதவராய் விட்டத்தை வெறித்தபடி சிகரெட் பெட்டியைப் பிரித்தார்.

நாங்கள் தொய்வாய் எழுந்து வெளியே வந்தோம்.

சங்கரலிங்கத்தைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டுக் கடைக்கு வந்தேன்.

ஏண்டா போலீஸ் ஸ்டேஷன் போனோம் என்று இருந்தது. நாளை அவன் குடும்பத்துக்கு ஏதாவது ஆபத்து என்றால்...? மனசுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆயாசமாக அமர்ந்திருந்த போதுதான் திடுமென்று அவர்கள் வந்தார்கள்.

எதிரே, நேற்று இரவு முழுதும் ரசிகர் மன்றத்தினர் கண்விழித்து எழுதிய விளம்பரத்தின் மீது வெள்ளை அடித்தார்கள். ஒருவன் தகரத்தால் சுவரைச் சுரண்ட, இன்னொருவன் விளம்பரத்தைத் தண்ணீர் ஊற்றி அழித்தான்.

நான் அவர்களை ஆச்சரியமாய்ப் பார்க்க, எதிர்பார்த்தது மாதிரியே சிறிது நேரத்தில் ஒரு ஆட்டோவில் ரசிகர் மன்றத்தினர் சிலர் வந்து இறங்கினார்கள். விளம்பரத்தை அழித்துக் கொண்டிருந்தவர்களிடம் ஆவேசமாய் ஏதோ கேட்க...

அடுத்த வினாடி... ஆட்டோவில் வந்தவர்களுக்கு தபதபவென உதை விழுந்தது. சிலர் ஓட.... சிலர் எதிர்த்துத் தாக்க, இரண்டு பேருக்கு மண்டை உடைந்தது.

கொஞ்சம் கூட பயமின்றி அடித்தவர்கள் அங்கேயே நின்றிருக்க, அடிபட்டவர்கள் தலையைப் பிடித்துக் கொண்டு ஓடினார்கள். தெரு ஸ்தம்பித்தது.

சரியாக இரண்டு மணி நேரத்தில் சுவரில் விளம்பரம் மின்னியது. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு... புரட்சித் தலைவி அழைக்கிறார்!

சுவருக்காக அவ்வப்போது சிறு சிறு மோதல்கள் உரசல்கள் நடந்ததுண்டு. சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்வார்கள். அல்லது அகலமான சுவரை இரண்டாய்ப் பிரித்து, ஒரு பக்கத்தில் இவர்களும் இன்னொரு பக்கத்தில் அவர்களுமாய் எழுதிக் கொள்வார்கள். இப்படி ரத்தம் ஒழுக அடித்துக் கொள்வது இதுதான் முதல் தடவை.

இரவு முழுதும் கண்விழித்து எழுதியவர்களுக்கு, இப்படி திடுமென அழித்து விட்டு வேறு விளம்பரம் எழுதினால் கோபம் வராதா...? உலகத் தமிழ் மாநாடு ஒரு வருடத்திற்கு முன்பே முடிவாக்கப்பட்ட ஒன்று. இத்தனை காலமும் எங்கே சென்றிருந்தார்கள்...? இல்லையென்றால் மீதியிருக்கும் சுவரில் எழுதினால் என்ன...?

இந்த விளம்பரம் நிச்சயம் நாளை காலை இருக்காது. இரவோடு இரவாய் ரசிகர் மன்றத்தினர் அழித்து விட்டு, திரும்பவும் தங்கள் விளம்பரத்தை எழுதி விடுவார்கள் என்று நான் நினைத்தேன்.

கொஞ்சம் பயத்துடன்தான் அமர்ந்திருந்தேன். அடித்தவர்கள் பலமானவர்கள். அடிபட்டவர்களும் பலமானவர்கள். இதோடு இது முடியாது.

அன்று இரவு வரை நான் எதிர்பார்த்த மாதிரி ஒன்றும் நடக்கவில்லை. அமைதியாகவே இருந்தது. எனக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகக் கூட இருந்தது.

கடையைப் பூட்டி விட்டுப் புறப்படும் போது, போலீஸ் ஜீப் வந்து நின்றது. இரண்டு கான்ஸ்டபிள்கள் இறங்கினார்கள். சப்-இன்ஸ்பெக்டர் ஜீப்பில் உட்கார்ந்தபடியே அவர்களிடம் ஏதோ சொன்னார்.

சிறிது நேரத்தில் எதிர்த்த டீ கடையிலிருந்து இரண்டு ஸ்டூல்கள் சுவருக்கு அந்தப் பக்கம் ஒன்றும் இந்தப் பக்கம் ஒன்றுமாய்ப் போடப்பட்டன.

இரண்டு கான்ஸ்டபிள்களும் கையில் பிடித்திருந்த துப்பாக்கியோடு சுவரைக் காவல் காக்கத் தொடங்கினார்கள்!

மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டி - 21

சாதாரணமாக இது கிரிக்கெட் சீசனாக இருந்திருக்க வேண்டும். இந்த வருஷம் தப்பி விட்டது. அதனாலென்ன? அரசியலில் வருஷம் பூரா கிரிக்கெட் தானே! கீழே கிரிக்கெட் தொடர்பான சில சொற்கள் இருக்கின்றன. கூடவே சில படங்களும். இன்றைய காலகட்டத்துக்கேற்ப - எந்த நபருக்கு எந்தச் சொல் பொருத்தம் என யூகித்து கூப்பனில் எழுதினால் ஓ.கே. விதிமுறைகள் வழக்கம் போலத்தான். ரெடியா?










போட்டி - 21

1. "ஹௌஸ் தட்?" : ....
2. பௌன்ஸர் : ....
3. ஹிட் விக்கெட் : ....
4. ஆஷஸ் : ....
5. கூக்லி : ....
6. மெய்டன் ஓவர் : ....
7. நைட்வாட்ச்மேன் : ....

பெயர் : ....


முகவரி : ....



கிராமம் தோறும் அதன் எல்லையில் காவல் தெய்வம் காலம் காலமாக நிலைத்திருக்கிறது. அந்த தெய்வத்தின் சக்தி கிராம மக்களை நோய் நொடியிலிருந்து காக்கிறது. கிராம எல்லையைத் தாண்டி எந்தக் கெடுதலையும் அந்த சக்தி ஊருக்குள் நுழைய விடுவதில்லை. கிராம மக்களுடைய நலத்திலும் பாதுகாப்பிலும் அந்த சக்தி மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. இது கிராம மக்களின் பாரம்பரிய நம்பிக்கை.

சக்தி பைனான்ஸையும் மக்கள் அப்படித்தான் நம்புகிறார்கள். உங்களுடைய சேமிப்புக்கு சக்தி பைனான்ஸ் அதிக பாதுகாப்பு அளிக்கிறது. உங்கள் நலனில் அக்கறை கொண்டு உங்கள் சேமிப்புக்கு நீங்கள் அதிக வருமானம் பெற வகை செய்கிறது. சக்தி பைனான்ஸின் ஸ்திரத்தன்மையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். சக்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20. மொத்த ஆண்டு வர்த்தகம் ரூ. 700 கோடி. 1.5 லட்சம் டெபாசிட்தாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு வைத்திருக்கும் டெபாசிட் தொகை ரூ. 150 கோடி. நாடு முழுவதும் 37 கிளைகள். 25 சேமிப்பு மையங்கள். பரவலாகப் பாதுகாப்புப் பெட்டகங்கள்.

சக்தி பைனான்ஸ் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவையையும் பூர்த்தி செய்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. அதற்காகவே அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல புதுமையான திட்டங்களை முதன்முதலாக அறிமுகப்படுத்திய சிறப்பையும் பெற்றுள்ளது. அதுமட்டுமல்ல, இத்தகைய திட்டங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி விரைவாகச் செயல் படுவதிலும் முன்னோடியாகத் திகழ்கிறது.



உங்கள் சேமிப்புகளை சக்தி பைனான்ஸில் டெபாசிட் செய்யுங்கள். நிம்மதி பெறுங்கள்.

சக்தி
பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் :
475 டாக்டர் நஞ்சப்பா சாலை கோயம்புத்தூர். 641018.
தொலைபேசி எண் :
231471/231472/231473/234174

SOME MEN ARE LIKE A CLOCK ON A ROOF: THEY ARE USEFUL ONLY TO NEIGHBOURS.

- AUSTIN 'O' MALLEY

நினைவலைகள்

ஒரு திரைப்பட நட்சத்திரத்தின் வாழ்க்கையில் ஐந்து காலகட்டங்கள் இருப்பதாக ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். அந்த நட்சத்திர நடிகனின் பெயர் சூர்யகுமார் என்று வைத்துக் கொண்டு பார்ப்போம் :

1. அடாடா! யார் இந்த சூர்யகுமார்? -இது அறிமுகக் கட்டம்.

2. அந்த சூர்யகுமார்தான் அவசியம் வேண்டும் - இது நட்சத்திர அந்தஸ்தை நெருங்கி விட்ட கட்டம்.

3. சூர்யகுமார் மாதிரி இன்னொரு ஆளைப் பார்த்து தேடிப் பிடிக்க வேண்டும். - இது அவரை நெருங்கவே முடியாத ஒரு நட்சத்திர அந்தஸ்து.

4. சூர்யகுமார் மாதிரி இவன் பேசுகிறான்; இவனே போதும். -எல்லாப் புதுமுகங்களிடமும் நட்சத்திரத்தின் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும் காலகட்டம்.

5. சூர்யகுமாரா? யாரது? - அவரை மறந்து விட்ட காலகட்டம்.

பலர் முதல் கட்டத்தோடு காணாமல் போகிறார்கள்.

இன்னும் சிலர் இரண்டாவது கட்டத்துடன் மறைந்து போகிறார்கள்.

மூன்றாவது கட்டம் - ஒரு மாபெரும் நட்சத்திர அந்தஸ்து. திரைத் துறையில் இருந்தாலும் அல்லது அதை விட்டு விலகி விட்டாலும் இந்த மூன்றாவது அந்தஸ்தை நிரந்தரமாகத் தன் பெயருடன் தக்கவைத்துக் கொண்டவர்கள் மக்கள் திலகமும், நடிகர் திலகமும்தான்.

இன்றைக்கு அந்த மூன்றாவது கட்டத்தில் கோலோச்சுவதும் அதை என்றைக்கும் எந்தக் காலத்திலும் தமது பெயருடன் இணைத்துக் கொள்ளப் போவதும் சூப்பர் ஸ்டார் 'ரஜினி காந்த்'தான் என்று சொன்னால் அதை மறுப்பவர்களும் இருக்க முடியுமோ?

"LONG BEFORE BILLY WILDER WAS BILLY WILDER, HE THOUGHT HE WAS BILLY WILDER."

பிரபல திரைப்பட இயக்குநர் Billy Wilder பற்றி அவரது மனைவி ஒருமுறை இப்படிக் கூறியிருக்கிறார்.

" 'ரஜினிகாந்த்' ஆவதற்கு முன்பாகவே தம்மை ஒரு 'ரஜினிகாந்த்' என்று நினைத்துப் பார்த்துக் கொள்வார் ரஜினி" என்று இதே வார்த்தைகளை ஏன் ரஜினிக்கும் கூற முடியாது என்று நான் நினைத்ததுண்டு.

நிச்சயமாக ஒரு சூப்பர் ஸ்டார் அந்தஸ்தை அடைந்து காட்ட முடியும் என்கிற அசைக்க முடியாத தன்னம்பிக்கை அவருக்கு இருந்தது.

குறிப்பிட்டு நிச்சயிக்கப்பட்ட ஒரு பேராவல் மட்டுமே வலிமையைக் கொடுத்து, இலக்கை அடையச் செய்கின்ற வாய்ப்பையும் அளிக்கின்றது; ஒரு தெளிவற்ற புகழார்வம் அமைதியின்மையையும் ஏமாற்றத்தையுமே அளிக்கின்றது என்கிற உண்மையெல்லாம் ரஜினி ஆங்காங்கே எழுதிய சில கட்டுரைகளின் வாயிலாக எனக்குப் புலப்படுகிறது.

எத்தனை ஆண்டு காலம் வாழ்கிறோம் என்பதை விட எப்படிப் புகழுடன் வாழ்கிறோம் என்பதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டுமென்றெல்லாம் சான்றோர்கள் சொல்கிறார்கள்.

ஆமைகள் 200 ஆண்டுகளும், முதலைகள் 100 ஆண்டுகளும் வாழ்வதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். ஏன்? எறும்பு கூட 15 ஆண்டுகள் வாழ்கிறதாம். ஆகவே சாதனை புரிபவர்களுக்கும் அவர்களது வாழ்க்கைக்கும் வயதிற்கும் சம்பந்தமிருப்பதில்லை.

"நீ உன் வீட்டுக் குப்பையை அள்ளி வெளியே கொட்டப் போனாலும் நன்றாக உடையணிந்து கொண்டு வெளியே போ! ஏனெனில் நீ ஒரு சினிமா ஸ்டார்" என்று Cecil 'B' Demille சினிமா நட்சத்திரங்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்.



இந்த ஸ்டார் image எல்லாவற்றையும் உடைத்தெறிந்தது ரஜினிதான். தமது நடை உடைகளைப் பற்றி என்றைக்குமே கவலைப்பட்டவரில்லை இவர்.

'மிட்லண்ட்' தியேட்டர் முன்னாலிருக்கும் கடைகளின் பெஞ்சுகளில் இரவு படம் பார்த்து விட்டுப் படுத்துறங்கிய அந்த நாட்களை நினைவுகூர்கின்ற ரஜினி, இன்று சூப்பர் ஸ்டார் ஆன பிறகு, எந்தப் புகழார்வத்திற்காக ஏங்கி ஏங்கி, தம்மை வறுத்திக் கொண்டு அந்த உன்னத நிலையை அடைந்தாரோ, அதை எல்லாவற்றையும் உதறி எறிந்து விட்டு, தம்மை அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பாமல் தமக்காகவே, தாம் இருக்க வேண்டுமென்று ரிஷிகேசம் சென்று நாட்கணக்கில், வாரக் கணக்கில், தன்னந்தனியாக போட்ட சட்டை, ஜோல்னாப்பை இவற்றோடு இவரால் வாழவும் முடிகிறது!

எப்படி முடிகிறது இந்த மனிதரால்!

எனக்கு இதெல்லாம் புரியாத புதிர்களாவே இருக்கின்றன.

ஒருநாள் கார் இல்லையென்றாலோ, அல்லது குளிர்சாதன வசதி இல்லையென்றாலோ அல்லது இன்னபிற சின்னஞ்சிறு சௌகரியங்கள் இல்லையென்றாலோ உலகமே அஸ்தமித்து விட்டதைப் போன்று நினைக்கின்ற நம் மத்தியில் இப்படிப்பட்ட ஒரு தனி நபர் எப்படி தம் மனதை condition பண்ணிக் கொள்கிறார் என்று நான் அடிக்கடி வியந்ததுண்டு.

சமீபத்தில் ஒருநாள் இவரை நான் சந்தித்தேன், திரைப்படத்துறை பொதுப் பிரச்னைகள் விஷயமாக. ஒரு தனிமையைத் தம் மீது வலுக்கட்டாயமாகத் திணித்துக் கொண்டிருக்கும் இவருக்கு எப்படி எல்லாப் பிரச்னைகளும் தெரிந்திருக்கிறது என்றும், கொஞ்சமும் பதற்றப்படாமல், ஆவேசப்படாமல் எவ்வாறு பிரச்னைகளை அணுகி ஆராய்ந்து பேசுகிறார் என்றும் எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. 'தனி நபர்' யார் மீதும் அவருக்குக் கோபம் வரவேயில்லை.

"அரசியலில் சேரும் எண்ணம் உண்டா?" என்று கேட்டேன்.

சிரித்துக் கொண்டார்.

நான் சொன்னேன்.

"அதற்கு ஒரு இரும்பு மனம் வேண்டும். உனக்கும் அதற்கும் சரிப்பட்டு வருமா?"

'வராது' என்பது போல் தலையாட்டினார்.

"பல பேர் வந்து உன்னை அரசியலுக்கு இழுக்க முயற்சி செய்வார்களே" என்றேன்.

'ஆமாம்' என்பது போல் சிரித்துக் கொண்டார்.

அவர் என் வீட்டிற்கு வந்து விட்டுச் சென்ற பிறகு நான் எனது டயரியில் எழுதி வைத்தேன்:

1974-ல் நான் சந்தித்த ரஜினிக்கும் இன்று 1994ல் சந்திக்கும் ரஜினிக்கும்தான் எத்தனை வித்தியாசம் தெரிகிறது! 1974 டயரியைத் தேடிப் பிடித்துப் பார்த்தேன். "மரியாதை தெரிந்த ஒரு துடிப்புள்ள இளைஞன்; ambitious and dynamic என்று 1974 டயரியில் எழுதியிருந்தேன். 1994 டயரியில் இதைக் குறிப்பிட்டு, "இன்று சந்தித்த ரஜினி மரியாதைக்குரிய ஒரு மாமனிதன்" என்று எழுதினேன்.

ரஜினியின் திருமணத்திற்கு முன்பு ரஜினி அனுபவித்த அந்த சில சோதனை நாட்கள் என் கவனத்திற்கு வந்து போயிற்று. ஒருநாள் முன்னணி நடிகையரில் ஒருவரான அந்த நடிகை என் வீட்டிற்கு வந்தார். வந்த காரணத்தை விளக்கினார் :

"சார்! உங்கள் ஒருவரால்தான் ரஜினிகாந்தை சரியான பாதைக்குத் திசை திருப்பி விட முடியும்; ஒரு நல்ல நடிகரைத் தமிழ்த் திரைக்கு அளித்தீர்கள்; ரஜினிகாந்தின் இழப்பைத் திரையுலகம் காணாதவாறு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும்" என்று மனம் விட்டுப் பேசினார்.

"கதை முடிந்தது" என்று முடிவுரை எழுதியவர்கள் மத்தியில்... அவர் ஒரு தொடர்கதையாக ஆக வேண்டுமென்று

கே. பாலசந்தர்

பிரார்த்தனை செய்யும் ஓர் உயர்ந்த உள்ளம் இருக்கிறதே என்று நினைத்த மாத்திரத் திலேயே என் கண்களில் நீர் திரையிட்டது.

அந்த உயர்ந்த உள்ளம் கொண்ட நடிகை யாரென்று இன்னும் சொல்லவில்லையே என்று நீங்கள் கேட்பது என் காதுகளில் ஒலிக்கின்றது. அந்த நடிகை ஸ்ரீபிரியாதான்.

ஸ்ரீபிரியாவின் உயர்ந்த பண்பிற்கு நான் அன்றே தலைவணங்கினேன். ரஜினிகாந்த் மீண்டும் உடல்நிலை குன்றி mental depressionல் இருக்கிறார் என்று கேள்விப் பட்டதும், நடிகர் சங்கக் காரியதரிசி என்ற முறையில் நண்பர் சுந்தரராஜனை அழைத் துப் பேசினேன். கூடவே நண்பர்கள் பாலாஜி, நாகேஷ் ஆகியோரிடமும் கலந்து ஆலோசனை செய்து, டாக்டர் செரியன் அவர்களின் உதவியை நாடினோம். விஜயா நர்சிங் ஹோமில் அட்மிட் செய்து, பதி னைந்து நாட்கள் முழு ஓய்வு கொடுத்து பூரண நலம் பெற டாக்டர் செரியன் அவர் கள் உதவினார்கள்.

ரஜினிகாந்தின் துரதிர்ஷ்டமான நாட் கள் ஒரு கெட்ட கனவென மறைந்து போய், கலைத் துறைக்குத் திரும்பக் கிடைத்த செல்வமாக இன்று அவரைக் காண்பதில் பெருமைப்படும் இலட்சோப இலட்சம் உள்ளங்களில் நான் முதல் ஆள் என்று கூறிக் கொள்ள முன்வரவில்லை; அந்தப் பட்டி யலில் கடைசி ஆள் என்று சொல்லிக் கொள் வதில் பெருமைப்பட்டுக் கொள்கிறேன்.

இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் இப்படிப்பட்ட ஒரு கலை ஞனை நம்மால் காண முடிகிறது; திரை யுலகத்தினால் பெற முடிகிறது.

கை நழுவ இருந்த ஒரு கலைஞனைத் திரையுலகம் திரும்பப் பெற்றதில் பூரிப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

கட்டுரை ஆரம்பத்திலுள்ள மேற் கோளைப் பாருங்கள் :

"வீட்டுக் கூரையின் மீதிருக்கும் கடி காரத்தினால் வீட்டுக்காரனுக்குப் பய னில்லை! அண்டை வீட்டுக்காரர்களுக்குத் தான் பயன்."

(தொடரும்)

‘மந்திரி வராரு!’



ஏ. எம். முத்துச்சந்திரா

கொட்டும் மழை. குளிரைப் பொருட்படுத்தாது, இளைஞர் அணி வெள்ள நிவாரணப்படை அமைத்து வேகமாகச் செயல்பட்டது. மேட்டுக்குடி மக்கள் சாதியை மறந்து, அரசியலை மறந்து- அரிசி, துணிமணிகள் வழங்கிட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இளைஞர் அணி அதைப் பகிர்ந்து கொடுத்தது.

வெள்ளத்தின் கொடுமையை உணராதது போல் வானொலி இன்னிசை விருந்தளித்தது. அந்த இன்னிசையில் தங்கள் வேதனையை ஓரளவு மறந்திருந்த மக்கள், அரசு அறிவிப்பு என்று வானொலி முழங்கியதும் கவனமானார்கள்.

'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அமைச்சர் மயில்வாகனன் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கல்விக் கூடங்கள் ஒரு வாரத்துக்கு மூடப்படும்....'

"பள்ளிக் கூடம் ஒரு வாரத்திற்குக் கெடையாது டோய்!" கிழிந்த கால் சட்டை போட்ட பையன் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். வெள்ளத்தால் விளைந்த சேதத்தை உணராத சிறுவர்கள் ஆவலோடு ஆட்டம் போட்டார்கள்:

'அமைச்சர் மயில்வாகனன் நம்மூரைச் சேர்ந்தவர். நமது பகுதிக்கு அதிகம் செய்வார்' என்று பெரியவர்கள் மகிழ்ந்தார்கள்.

கைத்தறிப் புடைவைகளையும், வேஷ்டிகளையும் ஏற்றிக் கொண்டு வட்டாட்சியர் வந்து இறங்கினார். அவரை முற்றுகையிட்ட அரசியல் தலைவர்கள், மந்திரியின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து விசாரித்தார்கள்.

"நாளை காலை சரியா பத்து மணிக்கு வராரு" - சொல்லி விட்டு, கிராம நிர்வாக அலுவலரைத் தனியாக அழைத்து- கிசுகிசுத்தார். பணிவாக நின்று தலையாட்டிய கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியருக்கு விடை கொடுத்து அனுப்பினார். அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசினார் வட்டாட்சியர். கூட்டம் ஆவலோடு பார்த்தது.

"சுப்பம்மாள்; ஒய்ஃப் ஆஃப் சுந்தரலிங்கம்" என்று வி.ஏ.ஓ.அழைக்க, அந்தக் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு அறுபது வயதுப் பாட்டி முன்னால் வந்தாள். அவள் முகம் எல்லாம் மகிழ்ச்சி குடிகொள்ள, பொக்கை வாய் திறந்து சிரித்தாள்.

"பாட்டி நாளைக்கு மந்திரி வராரு. அவர் கையால் உங்களுக்கு முதல் புடைவை வழங்கறார்" என்று ஒருவர் சொல்ல, பாட்டி ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தாள்.

"மொதல்ல பொடவை வாங்க என்னை ஏன் கூப்புடுறீங்க?"

"உங்க கணவர் சுதந்திரப் போராட்டத் தியாகி; அதனால உங்களுக்கு முதலில் புடைவை கொடுக்க மந்திரி மயில்வாகனன் விரும்பறார்..." கிராம நிர்வாக அதிகாரி விளக்கமளித்தார்.

"சாராயக் கடை வைத்திருந்த மயில்வாகனன் இன்னைக்கு மந்திரியாயிட்டான். அவன் கையிலே பொடவை வாங்கிக் கட்டுறதை விட இந்தக் கிழிஞ்ச பொடவையே தேவலாம்!" பாட்டி முந்தானையை உதறிச் செருகியபோது, அதில் ஏகப்பட்ட ஓட்டைகளைப் பார்த்த கூட்டம் ஸ்தம்பித்து நின்றது.



குப்பைமேடு

தமிழக அரசியலில் வேண்டுமானால் நாவலருக்கு நிரந்தரமாய் இரண்டாம் இடம் இருக்கலாம். ஆனால், சென்னைத் தொலைக்காட்சி நிலையத்துக்குப் பின்புறம் அமைந்துள்ள நாவலர் நகரின் சுத்தத்திற்கு, கண்ணை மூடிக் கொண்டு முதல் இடம் தந்துவிடலாம்.

சுமார் முந்நூறு குடியிருப்புகள் கொண்ட குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பத்து பிளாக்குகள். தவிர ஓர் அரை சதம் குடிசைகள். பத்து பிளாக்குகளும் பளிச். கண்ணாம்பு அடித்து அழகூட்டியது மட்டுமின்றி, அவற்றில் வண்ணமிகு ஓவியங்களையும் தீட்டியுள்ளனர்!

ஒவ்வொரு பிளாக்குக்கும், இந்த நாட்டில் இல்லாமல் போய்விட்ட விஷயங்களையே பெயராக்கிவிட்டார்கள்: அன்பு, பண்பு, அடக்கம், ஒற்றுமை, உண்மை, தூய்மை, நேர்மை, சமாதானம், தேசபக்தி, மகிழ்ச்சி.

ஊடே ஓடும் கூவம் மணக்காவிட்டாலும் தெருக்கள் மணக்கின்றன! ஆம்! அவற்றுக்கு முல்லை, மல்லிகை, ரோஜா, தாமரை எனப் பெயரிட்டு குப்பை கூளம் போடாமலுமிருந்தால் மணக்காதா பின்னே?

இதே நாவலர் நகர்ப் பகுதி, ஓராண்டுக்கு முன்பு எப்படி இருந்தது தெரியுமா?

"ஐம்பது ரூபாய் மாதாமாதம் வாங்கிக் கொண்டு, எவருடைய மாடுகளையோ இங்கே கட்டி வைத்திருப்பார்கள். ஒரே அசுத்த மயம்! ஒவ்வொருவரிடமும் தேவைக்கு ஏற்ப அன்பாய் அல்லது ஆக்ரோஷமாய் எடுத்துச் சொல்லி, அத்தனையையும் அப்புறப்படுத்தினோம். ஆறு அடி பள்ளத்தில் இருந்த இந்தப் பகுதியை கல், மண் கொண்டு வந்து கொட்டி, மேடாக்கினோம். இப்போது நீங்கள் வரிசையாய் 'வள்ளுவர் பூங்கா,' 'அமைதிப் பூங்கா,' 'விஷன் 2000 பூங்கா' என்று காண்கிறீர்கள்" என்றார் இளைஞர் கண்ணன்.


• கண்ணன்

"மாநகராட்சி அதிகாரிகளைச் சந்தித்துப் பேசி, தார் சாலைக்கும், சோடியம் விளக்குகளுக்கும் வழி செய்தோம். முன்பு இருட்டியபின், வெளி ஆட்கள், இங்கே வரமாட்டார்கள்" என்று கண்ணன் கூறிக் கொண்டிருக்கும் போதே ஒரு சூரிதார் யுவதி, கைனடிக் ஹோண்டாவில் நம்மைக் கடந்து போனார்!

சீரமைப்புப் பணிகளுக்காக முற்றிலும் மாநகராட்சியையோ, அரசையோ இவர்கள் எதிர்பார்ப்பதில்லை!

"எங்கள் பகுதியில் உள்ள இளைஞர்களில் இரண்டு பேருக்குத் தெரு விளக்கைப் பராமரிக்கும் பொறுப்பு. தண்ணீர்ப் பிரச்னையைச் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசித் தீர்க்க இன்னும் இருவர். இங்கே நடக்கும் இரவு பள்ளிக்கூடத்துக்காக, சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்பைப் பெற மேலும் இரண்டு பேர்! இப்படி நாங்களே பிரித்துக் கொண்டு செயல்படுகிறோம்" என்றார் இவர்.

இப்பகுதியின் சுத்தத்தின் ரகசியம் என்னவென்று விளக்கினார் இளைஞர் குமார் : "சுமார் எழுபது சிறுவர் சிறுமியரைப் பத்து குழுக்களாய்ப் பிரித்திருக்கிறோம். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு நாள் வீதம் சுத்தம் செய்யும். இதோ இவன் பெயர் சாந்தகுமார். இவன்தான் அந்த வாண்டுகளின் தலைவன்" என்று அறிமுகப்படுத்தினார்.

"ஓவியங்கள் தவிர பொன்மொழிகளையும் எழுதி வைத்திருக்கிறார்கள். எழுதியது இவர்கள்தான்" என்று குமார் கூறியபோது, கலை அரசு

தவிர இன்னும் மூணு இளைஞர்கள் நம்முன் நிற்கிறார்கள்.

ஒரு பிளாக்கில் கண்ணில் பட்டது: "தபால், ராணுவம், காவல், பத்திரிகை, மருத்துவம், கல்வி, துப்புரவு போன்ற துறைகளில் "உண்மை" ஊழியர்களுக்கு நன்றி!" அர்த்தம் பொதிந்த வாக்கியம்.



• புதுப்பொலிவுடன் நாவலர் நகர்.

ஒரு துடைப்பம். அதன் கீழ் அதன் குமுறல் எழுதிய அட்டை: "நான் உங்களுக்காகவே பிறந்துள்ளேன். என்னைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்."

வெட்டப்பட்ட மரம் ஒன்றும் பேசியது: "நான் உங்களுக்குக் காய், கனி, மழை, நிழல், பிராண

கோபுரமாகிறது!

வாயு, எரிபொருள், மரச்சாமான்கள் என்று எத்தனையோ கொடுத்திருக்கிறேன். ஆனால் நீங்கள் எனக்கு என்ன கொடுத்தீர்கள்? மரணத்தைத் தானே?"

அரசின் சாதனைப் பட்டியல் போல இல்லாமல், கண்கூடாய் இந்த இளைஞர்களின் சாதனைகளைக் காணலாம். சாதிக்க இருப்பவை என்றும் ஒரு பட்டியல். அதிலும், தபால் பெட்டி, பொது டி.வி. போன்ற சில ஐட்டங்களைப் பெருமிதத்துடன் 'டிக்' செய்திருக்கிறார்கள்.

இதெல்லாம் எப்படி சாத்தியமாயிற்று? "'எக்ஸ்னோரா' என்ற மந்திர வார்த்தை செய்த ஜாலம்தான்" என்கிறது மொத்த நாவலர் நகர் ஜனத்தொகையும். "நீங்கள் காணும் அத்தனை மாற்றமும் வந்தது கடந்த ஒரே வருடத்தில்தான்" என்கிறார் கண்ணன். இவர்தான் நாவலர் நகர் சிவிக் எக்ஸ்னோரா அமைப்பின் தலைவர்.

நந்தனம் கலைக் கல்லூரியில் பி.ஏ. படித்த இந்த இளைஞர், சரியான வழிகாட்டுதல் இல்லாமல், வன்முறையே வாழ்க்கையில் சௌகரியங்களைப் பெறச் சுலப வழி என நம்பியவர். லோக்கல் போலீஸ் இவர் மீது ஒரு கண் வைத்திருந்த காலமும் உண்டு.

"ஆண்டவன் அருளால், எக்ஸ்னோரா நிர்மல் சாரைச் சந்தித்தேன். 'மக்கள் ஒருவித பயத்துடன் உங்களுக்கு மரியாதை கொடுக்கும் நிலை மாறி, அவர்கள் ஒத்துழைப்புடன் நீங்கள் அரிய பல விஷயங்களைச் சாதிக்க முடியுமே!' என்று ஆலோசனை கொடுத்து உற்சாகமூட்டினார்."

ரோட்டரி சங்கமும் உதவியிருக்கிறது: டிரைவிங் லைசென்ஸ், டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்....

யார் எவ்வளவு உதவி செய்தால்தான் என்ன? ஒரு சாதா குடிசைப் பகுதி, ஸ்டார் ஏரியாவாக ஜொலிக்க வேண்டுமென்றால் அங்கு வாழும் மக்களின் முயற்சி, ஈடுபாடு, ஒற்றுமை இவைதாம் முக்கியத் தேவை.

அது நாவலர் நகரில் இருக்கிறது.

ஹாட்ஸ் ஆஃப்!

— எஸ். சந்திரமௌலி

படங்கள் : யோகா

வட்டமேஜை

உண்மையைத் தோலுரித்த தலையங்கம்!

கடுமையை வரவேற்கிறேன்!

♦ 'யாதும் ஜெ'யே! யாவரும் கேளீர்!' தலையங்கத்தின் தலைப்பே மிகவும் கடுமையாக இருந்தது. இந்தக் கடுமையான தலையங்கத்தைப் பெரிதும் வரவேற்கிறேன்.
காவேரிப்பட்டினம்,
கே. வி. பழனிசாமி.

தோலுரித்த உண்மை!

♦ எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் பெருமையை(?)த் தலையங்கத்தில் விவரித்திருந்த விதம் அருமை. உண்மையை இதற்கு மேலும் தோலுரித்துக் காட்ட முடியாது.
தாம்பரம்,
த. அருள்சிவபாலன்.

பெண்கள் பொம்மையல்ல!

♦ பி.சி. கணேசனின் சிறுகதையில் வந்த கலபா மாதிரி பெண்கள் - புதுமைப் பெண்கள் - இன்றைக்குத் தேவை. சும்மா பொம்மை மாதிரி அலங்காரம் பண்ணி, வருகிறவர்கள் முன்னாடி நின்று போவதை விட இது மாதிரி செய்வது பெட்டர். கலபா துணிச்சலான பெண்தான். கதாசிரியருக்குப் பாராட்டுக்கள்.
தூத்துக்குடி,
சிவராம சுப்பிரமணியன்.

தராக எழுதிய குறள்!

♦ ஆன்வோருக்குத் திருப்தி, வரி செலுத்தும் நமக்கெல்லாம் திருப்பதி என்று, தமிழ் மாநாட்டைப் பற்றி, குறளைப் போல் இரண்டே வரியில் பதில் சொன்ன, உமது சாமர்த்தியமே, சாமர்த்தியம்!
கும்பகோணம்,
புலவர் எஸ். கே. மூர்த்தி.

அனுபவக் கதை!

♦ கே. ஆர். முரளியின் 'காயத்ரி' மிக அருமை. போட்டிக்கு மட்டும் அனுப்பியிருந்தால் நிச்சயம் பரிசைத் தட்டிக் கொண்டு போயிருக்கும். தவறு செய்தது தெரிந்திருந்தும் அதைத் தட்டிக் கேட்காமல் இருப்பது எத்தனை பெரிய தண்டனை என்பது அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும். அருமையாகச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர்.
மதுரை, கே. விஸ்வநாதன்.

சுவைகூட்டிய புன்னகை!

♦ அட்டையில் சந்தனப் பொட்டு சூப்பர் ஸ்டாரின் புன்னகை சல்யூட், பொங்கலின் இன்சுவையைக் கூட்டிவிட்டது.
மதுரை - 16,
எல். மீனாட்சி சுந்தரம்.

வாழப்பாடிக்குப் பொங்கல் பரிசு!

♦ கல்கி 2.10.94 கல்தா? (தலைகீழாக வாழப்பாடியார் உருவம்) அட்டைப் படத்தைத் தற்செயலாகப் பார்த்தேன். "நான் நிரந்தரத் தலைவன் அல்ல; நித்தியக் கண்டத் தலைவன்" என்ற கட்டுரையையும் உள்ளே படித்தேன். தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து இப்போது வாழப்பாடியார் (12.1.95) பொங்கல் பரிசாக நீக்கப்பட்டிருக்கிறார்!
சென்னை - 75, கி. வாசு.

விறுவிறுப்பான வாரங்கள்!

♦ ராஜேஷ்குமாரின் 'கொல்லவல்லாயோ இனியே' எனும் கவிதைத் தலைப்பில் - ஓவியர் அகிலின் வழக்கில் - இப்படி ஒரு சைக்யாட்ரிக் சமாச்சாரம் இருக்கும் என்பது எதிர் பாராத ஒன்று! ராஜேஷ்குமார் என்ன சாதா ஸ்டாரா!?
பள்ளிப்பாளையம்,
ரஞ்சனி ப்ரியன்.

நட்பின் மகத்துவம்!

♦ "வெற்றிமணி ஒலிக்கும் வீரமணி" அவர்களின் அனுபவங்களைப் படித்த போது, சுய முன்னேற்ற நூலைப் படித்தது போலிருந்தது மட்டுமல்ல; ஓர் உண்மையான சிநேகத்தின் மகத்துவத்தையும் உணர முடிந்தது.
திருச்சிராப்பள்ளி - 20,
ச. நாகராஜன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

பார்க் டவுன்

பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம், துவக்கம் 1985 Post Box No. 2806

233, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை - 3. போன்: 382676, 568334

கிளை அலுவலகங்கள்:

2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை - 41 போன் : 413582

P-995, இரண்டாவது அவென்யூ, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை - 40 போன் : 6262636



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு *
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும். 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின் பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி

மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்

10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர்

அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில் ரூ.1 கோடி பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வரவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வரவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535

பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
குறைந்தபட்சம் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

[illegible]
[illegible]
* [illegible] 20%
[illegible] ரூ.20,000 [illegible] 5 [illegible]

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❒ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❒ வெள்ளி விடுமுறை

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

